



894.8113I
IND

குறிப்புதவி நூல்

# தொட்டுவிடும் தூரம்

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAR 2004
CHENNAI-600 008

இந்துமதி

பூஞ்சோலைப் பதிப்பகம்
11, சிவப்பிரகாசம் தெரு
பாண்டி பஜார் : : தி. நகர், சென்னை–600 017

தொட்டுவிடும் தூரம் (சமூக நாவல்)
முதற் பதிப்பு : டிசம்பர், 1994
விலை : ரூ. 19-00

578254
குறிப்புதவி நூல்
894.8113
IND

THOTTUVIDUM THUURAM
Tamil Social Novel
by INDHUMATHI
© Indhumathi
First Edition : December, 1994
Pages 120
10 pt. letters
POONCHOLAI PATHIPPAGAM
11, Sivaprakasam Street
(Near Pondy Bazar Market)
Pondy Bazar : : T. Nagar
Madras-600 017
Price Rs : 19-00

அச்சிட்டோர் :
சின்ன நிலா அச்சகம்
சென்னை—4

குறிப்புதவி நூல்

# தொட்டுவிடும் தூரம்

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAR 2004
CHENNAI-600 008

இந்துமதி

# தொட்டுவிடும் தூரம்

## 1

வீட்டின் ஜன்னல் ஓரம் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தான் ராஜாராமன். எதிர் பக்கம் அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டிக் கொண்டிருந்தார்கள். சுற்றிலும் ஓலைத் தடுப்பு மறைத்திருந்த போதிலும் உள்ளே மிக மும்முரமாக வேலை நடந்து கொண்டிருப்பதை உணர முடிந்தது. கலவை இயந்திரத்தின் சத்தம் காதைப் பிளந்தது. வீட்டின் எந்த மூலைக்கு ஓடினாலும் சத்தம் துரத்திக் கொண்டு வரும் என்று தோன்றிற்று. அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டத் துவங்கும் முன்பு அந்த இடத்தில் புராதனமான பெரிய பங்களா இருந்தது.

நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாக இருக்கும். அழகிய வேலைப்பாடுகளோடு கூடிய பெரிய நிலைகளும், கனமான பர்மா தேக்குக் கதவுகளுமாக செட்டி நாட்டு அமைப்பைக் கொண்ட வீடு. வீட்டினுள் போய் அவன் பார்த்ததில்லை, சொல்லக் கேள்விதான். வீட்டின் சொந்தக்காரர் யுத்தத்தின் போது பர்மாவிலிருந்து ஓடி வந்தவர் என்றார்கள். அங்கே ராணுவத்தில் காப்டனாக இருந்தவர் என்றார்கள். குடும்பத்திலிருந்த அனைவரையும் பறி கொடுத்து மனைவியும் அவரும் உயிர் தப்பி ஓடி வந்ததை நேரில் பார்த்தவர்களைப் போல் வர்ணித்தார்கள். பர்மாவில் குண்டு வீச்சிற்கு இரையாகி இரு குழந்தைகள், வீடு, கார் எல்லாம் எரிந்து சாம்பலானதைப் பார்த்த இவரது மனைவிக்கு சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டது என்பதாகவும் பேசிக் கொண்டார்கள்.

அவரையும், அவர் மனைவியையும் தோட்டத்தில் வைத்து அவன் பார்த்திருக்கிறான். அந்த வீட்டின் தோட்டம் அவனுக்கு மிகப் பிடித்தமான விஷயங்களில் ஒன்று. தன் அறையின் ஜன்னலருகில் நின்று மணிக்கணக்கில் அவன் அந்த தோட்டத்தைப் பார்ப்பான். அதனுடன் அளவிலாத தோர் சினேகமும், பிரேமையும் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அவனது நண்பன் விக்ரமாதித்யன் எழுதியதை அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

"தோட்டம் தோட்டமாக இருக்க வேண்டும். அணில் பிள்ளைகள் லாந்த வேண்டும். குயில்கள் பாடிக்கொண்டிருக்க வேண்டும். மரங்களுக்கு மேல் கிளிகள் பறந்து திரிந்து கொண்டிருக்க வேண்டும். நாகணவாய்ப்புள்கள் கத்திக் கொண்டிருக்க வேண்டும். தேனீக்கள் இரைச்சலிட்டுக் கொண்டிருக்க வேண்டும், மரங்கொத்திகளின் டக்டக்கென்ற சத்தம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். சில்வண்டுகளின் ஓசை இருந்து கொண்டிருக்க வேண்டும். எங்கேயாவது ஒரு மூலையில் பாம்பு கூட கண்ணில் படவேண்டும், இவ்வளவும் இருந்தால்தான் தோட்டம். இலைகளும் சருகுகளும் குப்பையும் செத்தையும் இல்லாத தோட்டம் என்ன தோட்டம்? அவை இல்லாது போனால் ஜீவராசிகள் எப்படி வந்து அண்டும்? இயற்கையாக இருப்பதுதான் தோட்டம். படைகளின் ஒழுங்கும் கச்சிதமும் தோட்டத்துக்கு வேண்டாம்."

எதிர் வீட்டுத் தோட்டத்தில் பாம்பு இருந்ததா என்பது அவனுக்குத் தெரியாது. மற்றபடி தோட்டமாக இருந்தது. இலைகளும், சருகுகளும், குப்பையும் செத்தையுமாக மிக இயற்கையாக இருந்தது. மாமரங்களும், வேப்பமரமும், வெளிச்சுவர் ஓரம் முழுவதும் வரிசையாகத் தென்னை மரங்களும், கொய்யா சப்போட்டாக்களுமான ஒரு சின்ன ஆரண்யம் போல் இருக்கும். வெய்யிலை நுழைய விடாமல் படுதா விரிந்திருக்கும். சிலுசிலுவென்று காற்று இவன்



வீட்டை எட்டும். அந்த அழகும், பசுமையும், குளிர்ச்சியும் நெஞ்சை வருடிக் கொடுக்கும். உள்ளுக்குள்ளேயே ஹா... ஹா...என்று அரற்றிக் கொள்வான் அவன்.

அந்தச் சின்ன ஆரண்யத்தின் மரங்களையும், பசுமையையும் விட, அணில்களையும், குயில்களையும் விட அவன் மனதை மிகவும் கவர்ந்த இன்னொரு விஷயம் அவற்றை நாடி வந்து பறந்து திரிந்த பச்சைக் கிளிகள். ஒவ்வொரு மரத்திற்கும் பதினைந்து இருபது கிளிகளாவது இருக்கும். ஜோடி ஜோடியாக சிறகடிக்கும். தென்னங்கீற்று ஊஞ்சலில் ஆடும். அவன் வீட்டில் மரமற்ற காரணத்தினால் அடுத்திருந்த செட்டியார் வீட்டு மரங்களில் போய் உட்காரும். அங்கு சிறிது இளைப்பாறி மீண்டும் யதாஸ்தானம் திரும்பும். காலையும் மாலையும் கீச்கீச்சென்று அவை போடுகின்ற கூப்பாடும், கும்மாளமும் நூறு இளையராஜாக்களுக்கு சமம் என்று நினைத்துக் கொள்வான் அவன்.

அவைகளின் இசையமைப்பைக் கேட்பதற்கென்றே தன் அறையின் ஜன்னலடியில் தவமிருப்பான். அண்ணார்ந்து மரங்களைப் பார்ப்பான். கிளிகளின் கோஷம் வானை முட்டும். இரவெல்லாம் கிளைகளுக்கிடையிலும், இலைகளுக்குள்ளும் மறைந்திருந்த பச்சைக் கிளிகள் இரண்டிரண்டாய் வெளியில் வரும். ஒன்றை ஒன்று துரத்தி விளையாடும். அந்தக் காலை நேரத்திலும் மிக சுதந்திரமாக சல்லாபம் செய்யும். அவன் ஒவ்வொரு கிளியாக எண்ண முயலுவான். ஒரு மரத்தில் அமர்ந்திருப்பதை எண்ணும் போதே விருட்டென்று பறந்து மற்றொரு மரம் தாவும். அந்த மரத்தில் இருப்பதை எண்ணத் துவங்கினால் இந்த மரத்திற்குத் திரும்பும். அவனால் ஒருபோதும் கிளிகளை எண்ண முடிந்ததில்லை. காலை கூட்டம் கூட்டமாக இரைதேட அவை பறந்து போவதும் மாலை இருட்டுவதற்கு முன் பட்டாளமாய் மரங்களுக்குத் திரும்புவதும் அழகான, அதி அற்புதமான காட்சிகள்.

நான் தவறாமல் கிளிகளின் பறத்தலைக் காண்பதற்கென்றே காலை ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து வந்து வாசலில் உட்காருவான்.

"என்னடா—கிளி பார்க்க எழுந்திட்டியா? ஒரு நாள் வேலைக்காரி வரலை. பால் வாங்கிண்டு வாடான்னு எழுப்பினால் எழுந்திருக்க மாட்ட. இதுக்கு மட்டும் டாண்ணு வாசல்ல வந்து உட்கார்ந்துடு."

கிளிகளின் சத்தத்தில் அம்மாவின் பேச்சு அபஸ்வரமாகக் காதில் விழும்.

'ரசிக்க முடியலென்னா உள்ளே போ. பில்டர் தட்டு. முதல் டிகாஷனில் காப்பி கலந்து குடி. அதையெல்லாம், விட்டுவிட்டு ஏன் வாசலுக்கு வருகிறாய்?"

அம்மா உள்ளே போனதும் அதிக சந்தோஷத்துடன் அண்ணார்ந்து பார்ப்பான். அத்தனை கிளிகளும் பறந்து போன பின் மனதில் வெறுமையும் ஏக்கமும் கவிழும்.

'மீண்டும் மாலையில் திரும்பி வருமல்லவா...?'

தன் அறைக்குத் திரும்புவான்.

விட்டு விடுதலையாக
சிட்டக் குருவிகளில்லை
பறந்து செல்ல
பச்சை கிளிகளில்லை
கூவித்திரிய
குயில்களில்லை
வீடு தேடி
விலாசத்திற்கு வருகின்றன
தபால்கள்
பத்திரிகைகள்
அபூர்வமாக மணியார்டர்களும்.



கவிதை ஞாபகத்திற்கு வந்தபோது விக்ரமாதித்யன் ஆழமாக பாதித்திருப்பது தெரிய வந்தது. கூடவே தனக்குத் தபால்களோ, பத்திரிகைகளோ அதிகம் வந்ததில்லை எனவும் சொல்லிக் கொண்டான். மன்னம், கவிதாசரண் முன்றில், விருட்சம், ஆய்வு போன்ற சிறு பத்திரிகைகளுக்குச் சந்தா கட்டியிருந்த காரணத்தால் அவை மட்டும் வரும். அவற்றைப் பிரித்துப் பார்க்கிற அம்மா தலையில் அடித்துக் கொள்வாள்.

"என்ன பத்திரிகைடா இதெல்லாம். ஒரு எழவும் புரிய மாட்டேன்றது."

கணையாழியில் பிரசுரமான ஒரு சிறுகதைக்கு மட்டும் சின்னதாய் பணம் வந்தது.

தபால்காரரின் டீ செலவிற்குக் கொடுத்தது போக மீதி உள்ளே கொண்டு வந்தான்.

"என்னடா பணம்?"

"என் கதைக்கு சன்மானம்மா."

"உன் கதையா! எதுலடா வந்தது? விகடன்லயா, குமுதத்துலயா?"

"கணையாழியில்"

"முதல் கதை. முதல் சன்மானம். அம்மாவுக்குத் தரக் கூடாதாடா?"

"இந்தா வச்சுக்கோ."

அதன் பின் ஒரு வருடமாக இரு கதைகள் தவிர வேறு எதுவும் பிரசுரமாகவில்லை. சிறுகதைகளை இரண்டு எழுதி மாறி மாறி மத்தியப் பத்திரிகைகளுக்கு அனுப்பினான். காலையில் போய் மாலையில் திரும்பி வருகிற கிளிகளைப் போல் ஓரிரு மாதங்களுக்குப் பின்னர் கதைகளும் திரும்பி வந்தன. அந்த வெறுப்பிலும், சலிப்பிலும் கதைகள்

எழுதுவதைத் தற்காலிகமாகக் கைவிட்டான். கல்யாண்ஜி, கலாப்ரியா, பசுவய்யா, பிரம்மராஜன், ஆத்மாநாம் ராஜ மைந்தன், வித்யாஷங்கர் என படித்த பாதிப்பில் மீண்டும் கவிதைகளுக்கு முயன்றான். முயலுவதல்ல கவிதைகள் என்பது பிடிபட அதையும் விட்டான். அடையாறு திரைப் படக் கல்லூரியில் டி.எப்.டி. பெற்று ஒரு படம் டைரக்ட் பண்ணக் கிடைக்காமல், தொலைக் காட்சியின் விளம்பர தாரர்களுக்கு அவ்வப்போது ஏதோ செய்து கொடுத்து, கிடைக்கிற பணத்தில் அம்மா வாய் அடைத்து, வேறு எந்தத் தொழிலும் தெரியாமல், எந்த வேலையும் பிடிக்காமல் டிரைவ் இன் ஓட்டலில் ஒரு கப் காப்பியும், ஒரு பாக்கெட் சிகரெட்டுமாகப் பேசிப் பேசி கோடார்டாய், ஃபெலினியாய், பெர்க்மெனாய், குரோசா வாவாய் கனவு கண்டு,

"என்னிக்காவது ஒரு நாள் நானும் அப்படி ஒரு படமாவது எடுத்துட்டுத் தாண்டா செத்துப்போவேன். அதுக்கு முன்னால் சாகமாட்டேண்டா."

டிரைவ் இன்னில் உட்கார்ந்து மணிக்கணக்கில் பேசுகிற நண்பர்களை வீட்டிற்குக் கூட்டி வந்து காட்டியிருக்கிறான். கீச்சிட்டு கிளைதாவிப் பறந்து பின் திரும்பி வருகிற கிளிகளை சிலாகித்து சந்தோஷப்பட்டிருக்கிறான்.

இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள் ய.எஸ்.ஐ. எஸ்ஸில் புத்தகம் எடுத்துக்கொண்டு டிரைவ் இன்னில் பேச்சை முடித்துவிட்டு இரவு ஏழு மணி வாக்கில் வீடு திரும்பி நடையில் செருப்பைக் கழற்றிக் கொண்டிருந்த போது சமையலறையிலிருந்து வெளியில் வந்த அம்மா மிகவும் பரபரப்புடனும் ஒரு வித ஆதங்கத்துடனும் சொன்னாள்.

"தெரியுமாடா ராஜா. பக்கத்து வீடு வித்துப்போய் பதினைந்து நாளாயிடுத்தாம்."

"எந்த வீடும்மா?"



"நம்ப நாயர் வீடுடா."

'நம்ப' என்பதில் சிரித்துக் கொண்டான்.

"யார் வாங்கி இருக்காங்களாம்?"

"யாரோ ஃப்ளாட் கட்றவா வாங்கி இருக்காளாம். ரிஜிஸ்ட்ரேஷன் எல்லாம் ரெண்டு வாரத்துக்கு முன்னாலேயே முடிஞ்சுடுத்தாம். கிழவனையும், கிழவியையும் கொண்டு போய் ஓட்டல்ல குடிவச்சிருக்காளாம். அவாளுக்கு ஒரு ப்ளாட் உண்டாம். நாளைக்கு மரத்தையெல்லாம் வெட்டி வீட்டை இடிக்கப்போறாளாம்.

"என்ன...என்ன...?"

"நிஜமாகத்தாண்டா சொல்றேன். நீ வேணும்னால் நாளைக்குப் பாரேன். "அதிர்ந்து ஐயோ என உள்ளுக்குள் அரற்றினான் அவன். அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்காக மரங்களை வெட்ட வேண்டுமா? மரங்களை வெட்டினால் கிளிகள் என்னவாகும்?

அன்றிரவு முழுவதும் அவன் தூங்கவில்லை.

ஜோடி ஜோடியாகக் கிளிகள். கண்களைப் பறிக்கிற பச்சை உடல். சிவந்த மூக்கு. பறந்து போய் தள்ளி உட்கார்ந்து பாசாங்கு செய்யும் பெண்கிளி. துரத்திப் போய் கொஞ்சுகிற ஆண்கிளி. கிளிகளில் கூட ஆண்தான் துரத்துமோ? பெண்கிளி அலைக்கழித்து வேடிக்கை பார்க்குமோ, அதெல்லாம் கிடக்கட்டும். மரங்களை வெட்டி னால் கிளிகள் எங்கு போகும்? எந்தக் கிளையில் ஊஞ்ச லாடும்?

மறுநாள் காலை வழக்கம் போல் விழித்துக்கொண்டு வெளியில் ஓடி வந்தவனுக்குக் கிளிகளின் குதூகலமும், கூப்பாடும் அடிவயிறு கலக்கின.

'இத்தனை மரங்களும், வெட்டப்பட்ட பின் எங்கே போவீர்கள்? சொல்லிவிட்டுப் போங்களேன், வந்து பார்க்கிறேன்'

அன்று பகல் முழுவதும் வீட்டை விட்டுப் போகாமல் வாசல் படியில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். கிட்டத்தட்ட ஐம்பது ஆட்கள். மரம் அறுக்கும் இயந்திரங்கள். ஒவ்வொரு மரமாகத் தரையில் வீழ்த்தப்பட்டபோது துடித்துப் போனான். போர்க்களத்தில் பத்துத் தலை ராவணன் வீழ்ந்து கிடக்கிற மாதிரி ஓர் எண்ணம் வந்து போயிற்று. மாலை நான்கு மணிக்குள் எல்லா மரங்களும் சரிந்து விழுந்து கப்பும் கிளையுமாக மண்ணில் சாய்க்கப்பட்டு விட்டன.

திருட்டுத்தனமாகத் தேடித்தேடி சின்னச் சின்ன இடைவெளிகளில் நுழைய முயன்ற சூரியன் இப்போது அட்டகாசமாகப் பளீரென்று அந்த வெட்ட வெளியில் வந்து நின்றதைப் பார்த்தபோது இவனுக்கு என்னவோ செய்தது. சொல்ல இயலாத வேதனை நெஞ்சை இறுக்கியது.

'இன்னும் கொஞ்ச நேரத்தில் கிளிகள் வருமே. மரங்களைக் காணாமல் என்ன செய்யும்?'

கிளிகள் வந்தன. ஒன்றிரண்டாய் வந்தவை கூட்டம் கூட்டமாகக் கூடி மரங்களற்ற வெற்றிடத்தைச் சுற்றி சுற்றி வட்டமிட்டன. கீச்கீச்சென்ற அலறல் தெரு முழுவதும் கேட்டது. எல்லா வீடுகளிலிருந்தும் ஓடி வந்து வேடிக்கை பார்த்தனர். எத்தனை வருடங்களாக இருக்கின்ற கிளிகள் இப்போது அகதிகளாக அலை பாய்ந்தன. கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு மேல் வெற்றிடத்தை வட்டமிட்டன. அவற்றின் கீச்கீச் சத்தத்தில் 'எங்கே கூடுகள்? எங்கே எங்கள் குஞ்சுகள்?' எதிரொலித்தன.

தாங்க முடியாதவனாக இவன் உள்ளே ஓடி வந்தான். தலையணையில் முகம் புதைத்து அழ ஆரம்பித்தான். அந்தக்



கிளிகளின் இரைச்சலும் தவிப்பும் வாழ்நாள் முழுவதும் மறக்காது என்று தோன்ற அழுகை இன்னும் அதிகமாயிற்று. உள்ளே வந்த அம்மா முகம் சுருக்கி அவனைப் பார்த்தாள்.

"ஏண்டா அழறே?"

"சொல்லேண்டா. எதுக்காக அழற?"

"கிளிகள் மா. பாவம்மா. எங்கே போகும்? எத்தனைக் கூடுகளோ? குஞ்சுகளோ? அத்தனைக் கிளிகளும் என்ன செய்யும்?"

"மனுஷாளே ஆயிரக்கணக்கில் அழியறா. நீ கிளிகளுக்கு அழு. அடப்போ. பைத்தியக்காரா..."

அம்மாவை அறைய முடிந்தால் தேவலாம் என்று தோன்றிற்று. இந்த அம்மாவிற்கு ஏன் புரியவில்லை? அம்மா மாதிரி மனிதர்களுக்கு எதுவும் ஏன் புரிவதில்லை? மனிதனுக்காக மட்டும்தான் எல்லாமா?

இன்று கிளிகள் காணாமற் போகிற மாதிரி காக்கைகள் காணாமற் போகும். அணில்களும், ஓணான்களும் இருக்காது. மரம் கொத்திகள் அபூர்வமாகிவிடும். அவன் சின்ன வயதாக இருந்தபோது சிட்டுக் குருவிகள் வீட்டின் உத்திரத்தில் கூடு கட்டும். ட்ருவிட்ருவி என வீடு முழுவதும் பறக்கும், விட்டத்தில், ஜன்னல் கதவுகளில், அலமாரி விளிம்பில் என மாறிமாறி உட்காரும். நெல் மணிகளும், அரிசியும் கொத்திப் போகும்.

இப்போது அந்தக் குருவிகள் எங்கே போயின? வீடு முழுவதும் எச்சமிட்ட சிட்டு குருவிகள் எங்கே? மரங்களெல்லாம் வெட்டிச் சாய்த்து அடுக்கு மாடிக் கட்டிடங்களாக்குகிற போது விக்ரமாதித்யன் சொன்ன தோட்டத்திற்கான அர்த்தத்தை எங்கு பார்ப்பது அவரது கிரசயுத்தத்திலா? காக்கை அணில், ஓணான், மரங்கொத்தி இவற்றை Zooவில் மட்டுமே பார்க்க முடியுமா? குளங்களும், கிணறுகளும்

காணாமற் போய் போர்வெல் கலாச்சாரம் தலைதூக்குகிற போது மீன்களும் இருக்காது. மனிதர்கள் வசிக்கக் கட்டிடங்களும், மனிதர்களும் மட்டுமே இருப்பார்கள்.

கடவுளே...மரங்களற்ற எதிர் வீட்டை எப்படிப் பார்ப்பது? கிளிகளின் கீச்கீச் இன்றி எவ்வாறு இருக்கப் போகிறோம்? அனைத்து ஜீவராசிகளையும் அழித்துவிட்டு மனிதன் மட்டுமே வாழப்போகிறானா? மனிதர்கள், மனிதர்கள், எங்கு திரும்பினாலும் மனிதர்களா? மனிதர்களை யார் அழிக்கப் போகிறார்கள்? சக மனிதனா? அல்லது அவன் அழித்துக் கொண்டு வரும் இயற்கையா? இல்லையென்றால் கடவுளா? கடவுள் இருக்கிறாரா?

ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் மீண்டும் அவன் வெளியில் வந்து பார்த்தபோது கிளிகள் இல்லை. வேறு மரங்களைத் தேடிப் போயிருக்க வேண்டும்.

"ஏ கிளிகளே...அந்த மரங்களையும் ஒரு நாள் வெட்டுவார்கள். கட்டிடங்கள் கட்டுவார்கள். மார்தட்டிக் கொண்டு மனிதர்கள் நடமாடுவார்கள். அப்போது என்ன செய்வீர்கள்?

ஆல்ஃபிரெட் ஹிட்ச்காக்கின் Birds மாதிரி தாக்குங்கள். ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என சேர்ந்து வந்து இந்த மனிதர்களைத் தாக்கி அழியுங்கள். உங்களின் உரிமைகளுக்காக, சுதந்திரத்திற்காகப் போராடுங்கள்."

"இன்னும் வாசல்ல என்னடா பண்றே? சாப்பிட வாடா..."

"வேணாம். எனக்குப் பசிக்கலை."

தன் அறைக்குப் போய் மீண்டும் தலையணையில் முகம் புதைத்து அமைதியாகப் படுத்துக் கொண்டான் அவன்.

## 2

தோட்டம் தோட்டமாக இருந்தது போய்விட்டது. மரங்களும், கிளிகளும், அணில்களும், காகங்களும், குளுமையான நிழலும், சிலுசிலுவென்ற காற்றுமாக இருந்த இடத்தில் இப்போது மிகத் துரிதமாக அடுக்கு மாடிக் கட்டிடம் எழுந்து கொண்டிருந்தது. சித்தாள்களும், கொத்தனார்களும், மேஸ்திரிகளும், சூபர்வைஸர்களும், இன்ஜினியர்களுமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். அந்த அடுக்குமாடிக் கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போட ஆரம்பித்த நாளிலிருந்து தெருவின் அமைதி கலைந்துவிட்டது. ஓரமாகச் சின்ன மலை மாதிரி கொட்டப்பட்ட கருங்கல் ஜல்லிகள், மணல்மேடுகள், அடுக்கப்பட்ட செங்கற்கள், ராத்திரி ஒரு மணிக்கும், இரண்டு மணிக்கும் வந்து லோடு இறக்கிய லாரிகள். சத்தம், ஆட்களின் சத்தம்...

சத்தம், சத்தம், சத்தம்.

தெரு தெருவாக இல்லை. முன்பிருந்த அமைதி, நிம்மதி, குளுமை எல்லாம் போயாயிற்று. அந்தத் தெருவில் இருக்கப் பிடிக்கவில்லை ராஜாராமனுக்கு, வீடு பிடிக்கவில்லை. மனிதர்கள் பிடிக்கவில்லை. எங்கு போவது? எந்தக் காட்டிற்கு ஓட முடியும்?

ஜன்னலை விட்டு அகன்று முகம் கழுவி, தலைவாரி சட்டை மட்டும் மாற்றிக் கொண்டான். கலர்கலராக இருந்த டீஷர்ட் போட்டுக்கொண்டு வெளியில் வந்தான்.

"அம்மா போயிட்டு வரேன்."

"எங்கேடா?"

"ஒரு வினாடி பதில் சொல்ல வேண்டாமென்று நினைத்து பின் சொன்னான்.

"டிரைவ் இன்னுக்குத்தான்."

"நான் தவறாமல் போய் டிரைவ் இன்ல உட்கார்றதைத் தவிர வேற என்ன செய்யற? ஏதோ பெரிசா சினிமா எடுத்துக் கிழிச்சுடற மாதிரிபிலிம் இன்ஸ்டிட்யூட்ல சேர்ந்த. ஒரு படம் பண்ணினாயா?"

"பண்ணுவேன் பாரும்மா. ஒரு நாள் இல்லை ஒரு நாள் நானும் பெரிய ஆளா வருவேன். உலகம் முழுசும் என்னைப் புகழப் போறது பாரு."

"எப்போ...? நான் கண்ணை மூடினதுக்கு அப்புறமா?"

சுருக்கென்று கேள்வி தைக்க மௌனமாய் தலைகுனிந்து நடந்தான். அம்மாவிற்கு மட்டுமில்லை. அப்பா, அண்ணன், தங்கை அத்தனை பேருக்கும் தன்னைப் பார்த்தால் இது போன்று ஏதாவது சொல்லத் தோன்றுகிறது. நான் திரைப்படக் கல்லூரியில் சேர்ந்ததே யாருக்கும் பிடிக்க வில்லை.

"ஒழுங்கா எம்.காம்., சி. ஏன்னு படிக்கிறதைவிட்டுட்டு இது என்னடா டிஃப்ளெப்டியும் மண்ணாங்கட்டியும்?"

"சினிமாவெல்லாம் வேணான்டா ராஜா. கெட்டுப் போயிடுவ. நம் குடும்பத்துல யாரும் சினிமாவுக்கெல்லாம் போனதில்லை.'

'இவர்களுக்கெல்லாம் சினிமா பற்றி என்ன தெரியும்? இங்கே யாருக்குதான் விஷுவல் மீடியம் புரிகிறது? புரிந்தவர் களை ஒன்றும் செய்யவிடமாட்டேன் என்கிறார்கள். ஒன்றும் செய்ய முடியாத நிலை.

"ஏன் சார் நீங்க சொல்வது பி அண்ட் சி சென்டர்ல யாருக்குப் புரியும்?"



"நான் சொல்லலை சார். காட்றேன். காட்டற மீடியா தான் சினிமா."

"நம்ம ஜனங்களுக்கு சொன்னால்தான் புரியும். காட்டினால் புரியாது."

"அப்போ எதுக்கு சினிமா? வெறும் ரேடியோ போதுமே...?"

"இதப்பாருப்பா... உன் பேர் என்ன சொன்ன? ராஜாராமனா, சுந்தர்ராமனா? இதுதான்யா உன்னை மாதிரி இன்ஸ்டிட்யூட் பசங்ககிட்ட இருக்கிற கஷ்டம். நான் என்ன பிலிம் பெஸ்டிவலுக்குப் படம் எடுக்க வந்திருக்கேன்னா நினைச்ச? ஊர்ல இருந்த சொத்தையெல்லாம் வித்து கொண்டு வந்திருக்கேன்யா. நீ சொல்ற மாதிரி படம் எடுத்தால் துண்டைத் தலையில் போட்டுக்கிட்டு திரும்பி ஊருக்கு நடந்துதான்யா போகணும்."

எல்லா புரொட்யூசர்களும் எப்படி ஒரே மாதிரி இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. கொஞ்சம்கூட மாற்றாமல் ஒரே வசனம் பேசுகிறார்கள். இன்ஸ்டிட்யூட்டில் படித்து வெளி வந்தவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற எல்லோரும் தன்னைப்போலவே அலைகிற சோகத்தை நினைத்துக் கொண்டான்.

அவன் அப்படித்தான் எடுத்த ருத்ரைய்யாகூட அல்லவா காணாமல் போய்விட்டார். ருத்ரைய்யா மட்டும்தானா? ஏழாவது மனிதன் ஹரிஹரன் எங்கே? அக்கிரகாரத்தில் கழுதை ஜான் ஆப்பிரகாம் எங்கே? பாலைவனச்சோலை 'ராபர்ட்' ராஜசேகர் எங்கே? நல்லகாலமாய் வீடு சந்தியாராகம் இரண்டிற்குப் பின்னரும் பாலுமகேந்திரா நிற்கிறார். உதிரிப்பூக்கள் மகேந்திரன் திரும்பிவரவில்லை. ஆபாவாணன், ஆர்.வி. உதயகுமார், ஆர்.கே. செல்வமணி இவர்களைப் பார்க்க முடிவது சந்தோஷம்தான், அதிலும்

வெற்றிப்பட டைரக்டர்களாக, விழா கொண்டாடுபவர்களாக இருப்பது.

இன்னமும் சந்தோஷம். ஆனால், அவர்கள் அளவில் தன்னால் வெற்றிபெற முடியாது என்று நினைத்துக் கொண்டான். நிறைய பட்டாகிவிட்டது. இனி யாரிடமும் போய் தன்னால் கதை சொல்ல முடியாது. எந்தத் தயாரிப்பாளரையும் அணுக முடியாது. தான் நினைப்பதை, தன்னால் முடிந்ததையெல்லாம் டி.வியில் செய்து காட்டலாம். அதைப் பார்க்கிற நல்ல சினிமாவிற்கு ஆசைப்படுகிற தயாரிப்பாளர்கள் யாரேனும் வந்தால் வரட்டும். வராவிட்டால் போகட்டும்.

ஆனால், தொலைக்காட்சி சின்னத்திரையில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் பஞ்சம் வந்துவிட்டது. மெட்ரோ சானல் என்று மீண்டும் மீண்டும் திரைப்படத் தொகுப்புகளைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அதெல்லாமும் நின்று தமிழில் வசனங்கள் மட்டும் மாற்றப்பட்ட இந்தி நிகழ்ச்சிகளே வருகின்றன. டப்பிங் கலாச்சாரம் சின்னத்திரையைக்கூட விட்டு வைக்கவில்லை. தன்னைப் போன்றவர்களுக்கு டி.வி. கூட இல்லாமல் போனது பரம சோகம். சன் டி.வியும், இல்லையென்றால் பலசரக்குக் கடை வைக்கத்தான போக வேண்டும். வேறு வழி இல்லை. ஆனால், அதற்கும் பணம் வேண்டுமே?

அப்பாவிடம் போய் நின்றால் உதைக்க வருவார்.

"அன்னிக்கே ஒழுங்கான படிப்பாகப் படிடா. ஏதாவது உத்தியோகத்திற்குப் போகலாம்னு சொன்னேனே கேட்டியா?"

"உன் கூடப் படிச்ச ராமமூர்த்தி புத்திசாலித்தனமா இன்ஜினியரிங் முடிச்சான். இப்போ மாசம் பொறந்தா ஐயாயிர ரூபாய் சம்பளம் வாங்கறான். அவனுடைய அம்மா வந்து பெருமையா சொல்லிக்கறா. நான் என்னத்தை



சொல்லிக்கறது? கல்யாணம் கார்த்தின்னு போனால் 'விலாசம் உன் பிள்ளை என்னடி பண்றான்னு கேட்கறா.' சும்மா இருக்கான்னு சொல்லிக்க அவமானமாக இருக்கு. சினிமாலைன்ல இருக்கான்னு சொல்லி பூசி மெழுகறேன்."

மூக்கை உறிஞ்சி முகம் துடைக்கிற அம்மா. இந்த அம்மாக்களுக்குப் பிள்ளைகள் எம்.பி.ஏ., சி.ஏன்னு படிக்க வேண்டும். வீடு, கார் என்றிருக்க வேண்டும். பெருமையாக மற்றவர்களிடம் சொல்லிக்கொள்ள வேண்டும்.

வித்தியாசமாக இருந்தால் பிடிக்காது. மாறுபட்ட சிந்தனை கொண்டிருந்தால் உருப்படாதவன். எல்லா அம்மாக்களும் ஒன்றுதான். அம்மாக்கள் அம்மாக்களாகவே இருக்கிறார்கள்.

டிரைவ் இன்னில் நுழைந்து கார்களையும் ஸ்கூட்டர்களையும் கடந்து தான் வழக்கமாக உட்காரும் இடத்தை அடைந்தபோது அங்கு வேறு யாரோ உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். கோபம் வந்தது. எழுந்து அவர்களை வேறு மேஜைக்குப் போகச் சொல்லலாமா என்று நினைத்தான். அந்த இடமும் மேஜையும் தனக்கு சாசனம் செய்து தரப்படவில்லை என்பதில் கோபம் அகன்றது. ஆனாலும் அந்த இடத்தில் உட்கார்ந்தால்தான் சிந்தனை ஓடும். சரளமாகப் பேச வரும். பழகிப்போன இடம், மூன்று நான்கு வருடங்களாக காலை சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து, உட்கார்ந்தால் இரவு எட்டு, ஒன்பது வரைகூட இருப்பான். எத்தனை மணி நேரமானாலும் எதுவும் சாப்பிடமாட்டான் காபி சிகரெட், சிகரெட் காபி அவ்வளவுதான்.

"வெறும் வயத்துல இத்தனை காபி குடிச்சு சிகரெட் பிடிச்சால் அல்சர் வரும்டா ராஜன். ஏதாவது கொஞ்சம் சாப்பிடு."

நண்பர்களின் வற்புறுத்தலுக்காக எப்போதாவது சேமியா பாத் சாப்பிடுவான். அதுவும் என்றாவது ஒருநாள் தான்.

தினமும் வந்து கொண்டிருப்பதால் அத்தனை பேரர் களும் பழக்கம். எல்லாரும் தெரியும். இந்த நேரத்திற்கு இன்னார் வருவார்கள், எந்தெந்த மேஜையில் யார் யார் உட்காருவார்கள் என்கிற எல்லாமே அத்துப்படி. இது பி.பி. ஸ்ரீனிவாஸ் மேஜை, அந்த மேஜை ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி மாணவியருடையது. இந்த மூலை கார்வண்ணனுடையது. அடுத்தது சினிமா நிருபர் இடம். நடுமேஜை பிரபல வார இதழில் வேலை செய்பவருடையது. இப்படி அனேகமாக நான் தவறாமல் பார்க்கிற முகங்கள். முகம் பார்க்காமலே குரலால் அடையாளம் கண்டுபிடித்துக் கொள்வான். யார் யார் என்னென்ன சாப்பிடுவார்கள் என்பதுகூட தெரியும்.

டிரைவ் இன்னிற்கு வர பணம் தேவையில்லை. சட்டைப் பையில் ஐந்து ரூபாய் வைத்துக்கொண்டு கூட வந்துவிடுவான். அவனுக்குக் காபி தருகிற சர்வர்களுக்குத் தெரியும். பணம் வைத்தால் எடுத்துக் கொள்வார்கள். இல்லாவிட்டால் குறித்துக் கொள்வார்கள். அல்லது தங்களிடமிருந்து தருவார்கள். தொலைக்காட்சித் தொடருக்கோ, தயாரித்துக் கொடுத்த டாக்குமெண்ட்டரி படத்திற்கோ பணம் வருகிற போது மொத்தமாகக் கொடுத்துவிடுவான். மிகவும் தாராளமாகவே தருவான். பத்தாயிரம், இருபதாயிரம் என வாங்குகிற பணம்கூட பத்து நிமிடங்களில் காணாமற் போகும்.

"ரவி. டிரைவ் இன் பாக்கியைக் கொடுத்துடு."

"பெட்டிக்கடையில் சிகரெட் பாக்கி எவ்வளவு பார்."

"அப்புறம் வேறு யார் யாருக்கு என்னென்ன தரணுமோ தந்துடு."

நண்பனாய், உதவியாளனாய், தனது திறமை கண்டு பிரமித்து ஆராதிப்பவனாகக்கூட இருக்கிற ரவிசங்கர் எல்லாக் கடனும் தீர்த்து மீதமிருக்கிற ஆயிரமோ, ஆயிரத்து இநூறோ நீட்டுவான்.



"என்ன?"

"பாக்கிப் பணம் சார்."

"இருக்கட்டும். உன்கிட்டயே வச்சுக்க."

ரவியும் அதற்குமேல் பேசினதில்லை.

ரவிமாதிரி ஒருவன் கிடைத்தது தன் ஒரே அதிர்ஷ்டம் என்று நினைத்தான். அப்போது ரவிகூட இன்றி தனியாக வந்தது என்னவோ போலிருந்தது. இன்றும் சிறிது நேரம் போனால் ரவி வரக்கூடும். வேறு யாராவது நிச்சயம் வருவார்கள். இப்போது எங்கே உட்காருவது?

"ஒரு நிமிஷம் இருங்க சார். உங்க மேஜை காலியாயிடும் அவங்க பில்லுக்காகத்தான் சார் காத்துக்கிட்டிருக்காங்க."

"பரவாயில்லைப்பா. நான் அதோ அந்த கோடி டேபிள்ல உட்கார்ந்துக்கறேன்."

உட்கார்ந்த உடனே காபி வந்தது.

"சார் நீங்க வர்றதுக்கு முன்னால் உங்களைத் தேடிக்கிட்டு ஒரு பொண்ணு வந்தாங்க. என்கிட்டதான் கேட்டாங்க, வருவீங்க. வர்ற நேரம்தான்னு சொன்னேன். கொஞ்ச நேரம் காத்திருந்து பார்த்துட்டுப் போயிட்டாங்க."

"பேர் சொன்னாங்களா?"

"இல்லை சார்."

"எப்படி இருந்தாங்க?"

"ஜீன்ஸ் போட்டுக்கிட்டு தலையை பாப் பண்ணிக்கிட்டு கண்ணாடி போட்டுட்டிருந்தாங்க."

அப்படி தனக்கு யாரையும் தெரியாதே என்று யோசித்தான்.

"வேற ஏதாவது சொன்னாங்களா?"

"திரும்பி வரேன்னு சொல்லிருக்காங்க சார்" என்ற அந்த சர்வர் சற்று நகர்ந்து மீண்டும் அவனிடம் வந்து சிறிது பரபரப்புடனே சொன்னார்.

"அதோ வராங்களே அவங்கதான் சார்."

திரும்பிப் பார்த்தபோது வெள்ளை அராபியக் குதிரை மாதிரி வந்து கொண்டிருந்தாள் அவள். கூடவே இன்னொருவன். அவனைத் தெரியும். அவனது பெயர் ஜெகதீஷ் என்பது ஞாபகத்திற்கு வந்தது. தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்பவன்.

யார் அந்தப் பெண்? ஜெகதீஷ் எதற்காக அவளை அழைத்துக்கொண்டு தன்னிடம் வருகிறான்?

அவர்கள் அருகில் வந்ததும் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் 'ஹலோ' சொன்னான்.

## 3

மீண்டும் தோட்டம் தோட்டமா இது? ஆரண்யம்! எவ்வளவு சந்தோஷமான விஷயம் என்று நினைத்துக் கொண்டான் ராஜாராமன். மரங்களும் இலைதழைகளும் முற்றாக இடத்தை ஆக்ரமித்திருந்தன. தொட்டு தடவிக் கொண்டு போயிற்று காற்று. செருப்பைக் கழற்றிவிட்டு வெறுங் காலோடு நடக்கவேண்டும் போலிருந்தது. நடந்தான். பாதங்கள் குறு குறுத்தன. சருகுகள் நொறுங்கும் ஓசை மிகவும் பிடித்திருந்தது. இதை ஸ்டீரியோ ஃபோனிக் எஃபெக்டில் கேட்டால் எப்படி இருக்குமென யோசித்துப் பார்த்தான்.

இதற்கு முன் இந்த இடத்திற்கு வந்ததில்லை என்பது வியப்பாக இருந்தது. தான் ஒரு சென்னைவாசி! இதே



அடையாறில் திரைப்படக் கல்லூரியில் படித்தவன். ஆனாலும் இந்த இடத்தைத் தவற விட்டிருக்கிறேன். இதே போல் வாழ்க்கையில் தவறவிட்ட விஷயங்கள் எத்தனையோ?

இதையும் அத்தனை சுலபமாக ஒப்புக்கொண்டு விட வில்லை. டிரைவ் இன்னில் ஜெகதீஷ் அந்தப் பெண்ணை அறிமுகப்படுத்திய போது அலட்சியமாகத்தான் ஏறிட்டுப் பார்த்தான். தன்னிடம் இந்த நிகழ்ச்சியைப் படம் பிடித்துத் தரச் சொன்ன போது கூட மதிப்பு ஒன்றும் ஏற்படவில்லை. மாறாக ஆர்வம் எதுவுமின்றி வெகு சாதாரணமாகக் கேட்டான்.

"எதுக்காக இதை நான் டைரக்ட் பண்ணனும்னு நினைக்கிறீங்க? இதுல டைரக்டருக்கான கிரியேட்டிவ் ஒர்க் என்ன இருக்கு?"

"இருக்கு. நிச்சயம் இருக்கு. நீங்க வந்து அந்த இடத்தைப் பார்த்தீங்கன்னா புரியும்."

"இடம் இருக்கட்டும். ஒரு கல்லூரி கலை நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்க டைரக்டர் தேவையே இல்லை. வெறும் காமிராமேனும், எடிட்டரும் போதும். நிகழ்ச்சிகளைக் கோர்த்து வெட்டி ஒட்டுவது என் வேலையில்லை."

"அவ்வளவு சுலபமா உதறிவிட்டுடக் கூடாது. இது வெறும் கல்லூரி கலை நிகழ்ச்சிகளின் தொகுப்பு மட்டுமில்லை. 'இன்றைய இளமை'ன்ற தலைப்பில் பதிமூன்று வாரத் தொடருக்கு அப்ருவல் கிடைச்சிருக்கு. கல்லூரி கலை நிகழ்ச்சியில் ஆரம்பிச்சு யூத் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் சொல்லலாம்."

இவன் யோசித்தான். இரு மேஜைகள் தள்ளி உட்கார்ந்திருந்த ரவியை அருகில் கூப்பிட்டான். ரவியிடம் அவனுக்குப் பிடித்திருந்த விஷயங்களில் இதுவும் ஒன்று. இவன் யாருடன் பேசினாலும் விலகிப் போய் தனியாக அமர்ந்திருப்பான்.

கூப்பிட்டால் தவிர வரமாட்டான். எத்தனை நேரமானாலும் மிகப் பொறுமையாகக் காத்திருப்பான். கையசைப்பைப் புரிந்துகொண்டு எழுந்து வந்த ரவியிடம் கேட்டான்.

"எப்போ வந்தே?"

"இப்போதான் சார்."

"இவங்க ஒரு ப்ராஜெக்ட் கொண்டு வந்திருக்காங்க."

"சினிமாவா சார்?"

"இல்ல. டி.வி."

"என்ன ப்ராஜெக்ட் சார்?"

சொன்னான். கேட்டுக்கொண்ட ரவி பேசாதிருந்தான்.

"என்ன ரவி சொல்ற?"

"இவங்க சொல்ற புரோக்கிராமை லைவ்லியாகப் பண்ணனும்னா உங்களால்தான் சார் முடியும்."

"அப்படின்னா செய்யலாம்னு சொல்றியா...?"

"செய்யலாம் சார்."

"தாங்க் யூ ஸோ மச் மிஸ்டர் ராஜாராமன். நாளைக்கு நான் அட்வான்ஸ் பணத்தோடு வரேன்."

அவர்கள் எழுந்து போனதும் இவன் ரவியைப் பார்த்தான்.

"என்ன ரவி இதையெல்லாம் செய்யலாம்னு சொல்ற? இது வெறும் தொகுத்துத் தர்ற கம்பயரிங் ஒர்க்குப்பா."

"புரியுது சார். ஆனா, நான் இதை செய்யலாம்னு சொன்னதுக்கு ஒரே காரணம் பணம் சார்."

இவன் தலைகுனிந்து கொண்டான். தேவைகள் பயமுறுத்தின. வாழ்க்கை துரத்திற்று. எவ்வளவு ஓடினாலும் ஓர் இடத்தில் மூச்சு முட்ட நின்று விடத்தான் நேர்கிறது.



இப்போது தான் அந்த இடத்திற்கு வந்துவிட்டோமோ—? ரவி சொல்கிற மாதிரி பணத்திற்காக இதை ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டுமா?

சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டபோது பேரர் வந்து மெல்ல தலை சொறிந்து நின்றார்.

"என்னப்பா?"

"கிட்டத்தட்ட ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கு மேல் பாக்கி நிக்குது சார்."

அந்த விநாடி தான் சடாரென்று முடிவு செய்தான்.

"நாளைக்கு சாயந்திரம் எல்லா பாக்கியையும் தீர்த்துடலாம் போ."

அந்தக் குரலில் தெரிந்த ஏதோ ஒன்று ரவியைத் தலை நிமிர்ந்து பார்க்க வைத்தது. இவன் மீண்டும் தலை குனிந்து கொண்டான்.

"எனக்குத் தெரிந்த ஒரே தொழில் சினிமாதான். இதை விட்டால் நான் மாடு மேய்க்கக்கூட லாயக்கில்லை. படம் எதுவுமே வராத பட்சத்தில் வேறு ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் யார் எதைச் செய்துதரச் சொன்னாலும், வெறும் டாக்குமெண்ட்டரியானால் கூட ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே?"

"இல்ல சார். படம் வராமல் இல்லை. உங்களுக்கேற்ற படம் வரலை. நீங்க ஒத்துக்கலை."

"எப்படி ஒத்துக்க முடியும்? அவன் முதல் பெஞ்ச் ஆடியன்ஸுக்குப் புரியற மாதிரி எடுக்கச் சொல்றான்."

"சமீபத்துல ரெண்டு ஹிட் படம் கொடுத்த பெரிய புரொட்யூசர் சார் அவரு. நம்ம ராமனாதன் செட்டியார் சொன்னார்னு வந்தாரு. நீங்க இன்சல்ட் பண்ணிட்டதா ஃபீல்டுல சொல்லிக்கிட்டு திரியறாரு."

"என்ன ரவி நீ? அவருக்குதான் புரியலை. உனக்குக் கூடவா புரியலை. சினிமா ஒரு விஷுவல் மீடியம்னு சொன்னால் திமிர் பிடிச்சவன்னு முத்திரை குத்திடறாங்க.

வேலைக்கேற்ற ஊதியம்
கேட்கும் கோஷம்
உன் கோஷம்
அதுவும் வேண்டாம்
ஆளை விடு
என்ற கூச்சல்
என் கூச்சல்

என்று பிரமீளின் கவிதையைக் கத்திச்சொன்னான் பக்கத்து மேஜைகள் திரும்பிப் பார்த்தன. ரவி சங்கடப் பட்டான்.

"எழுந்திருங்க சார். திரும்பவும் இன்னிக்கு நீங்க மூட் அவுட் ஆயிட்டீங்க. கொஞ்ச நேரம் பாருக்குப் போகலாம். அப்போ மனசு லேசாகும்."

"மனசு லேசாகும் மண்ணாங்கட்டி. லேசாகும்னெல்லாம் சொல்லாத. குடிக்கணும்னு தோணறதா. அதை அனுபவிக் கணும்னு நினைக்கிறியா... போகலாம்."

"எஸ் சார். எனக்கு இன்னிக்குக் குடிக்கணும் போலத் தான் இருக்கு. வாங்க போகலாம்."

அன்றிரவு பாருக்குச் சென்று குடிக்க ஆரம்பித்தபோது மனது கல்லாக இருந்தது. நான்காவது ரவுண்டு உள்ளே போனதும் அழ ஆரம்பித்தான் இவன்.

"என்னையும் மாற்றி விட்டது இந்த வாழ்க்கை. நானும் இனி பத்தோடு பதினொன்றுதான்." புலம்பத் தொடங் கினான்.



"பணம் என்கிற ஒன்று மட்டும் இந்த உலகத்தில் இல்லாமல் போயிருந்தால் எவ்வளவு அழகானதாக இருந் திருக்கும் ரவி. மனிதர்கள் மனிதர்களாக இருந்திருப்பார்கள். இயற்கையை இயற்கையாக விட்டு வைத்திருப்பார்கள். என்னை மாதிரி கலைஞர்கள் கலைஞர்களாகவே வாழ்ந்திருப் பார்கள். வியாபாரிகளாக மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டிருக்காது இல்லையா?"

அந்த உண்மையை மறுக்கத் தோன்றாமல் ரவி பேசா திருந்தான்.

"இதனால்தான் அந்தக் கால மன்னர்களும் ராஜாக்களும் கலைஞனைப் பசிக்கவிடாமல் பார்த்துக் கொண்டார்கள். பசி மட்டுமன்றி அவனுக்கு எந்தக் கவலையும் இருக்கக் கூடாது என்று குடும்பத்தையே கவனித்துக் கொண்டார்கள். கலைஞன் வாழ கலை வாழ்ந்தது. இலக்கியம் செழித்தது. 'சோழ நாடு சோற்றுடைத்து' 'குப்தர்காலம் பொற்காலம்' னெல்லாம் சொன்னோம்."

"என்ன சார் நீங்க. முதல்ல இப்போ நாம் காலை ஊனிக்கலாம். சார். அப்புறம் தானா நம்பளைத் தேடி வருவாங்க. அப்போ உங்க மேதைத் தனத்தைக் காட்டலாம். அதுவும் ஏன் சார் இப்படி வருத்தப்பட்டுக்கறீங்க கமர்ஷியலா பண்றதுலகூட உங்களால் வித்தியாசம் காமிக்க முடியும். இது ராஜாராமன் கோணம்; இது ராஜாராமன் ஸிம்பாலிசம்னு சொல்ல வைக்கலாம். அந்த மாதிரி எத்தனை பண்ணலை சார் நீங்க?"

"அதெல்லாம் டி.. விக்குப் பண்ணினது."

"வரும் சார் சினிமாவும் வரும். நாம் பண்ணத்தான் போறோம்."

"எப்போ?"

"ரொம்ப தூரமில்லை சார். தொட்டு விடும் தூரம்தான் சார்."

"நம்மால் தொடமுடியும்னு நினைக்கிற?"

"முடியும் சார். சத்தியமா முடியும். நாமும் குரோசோவா மாதிரி, பெர்க்மென் மாதிரி, பெலினி மாதிரி, ஸ்பீல்பெர்க் மாதிரி ஒரு படமாவது பண்ணிட்டுத்தான் சார் சாகணும், சாகப் போறோம்.

அந்த நிச்சயம் இவனையும் பற்றிக் கொண்டது. மனதிற்கு ஒத்தடம் கொடுத்த மாதிரி இருந்தது. கொஞ்சம் சமாதான மடைந்தது. ரவி மட்டும் இல்லாது போயிருந்தால் நான் என்னவாகியிருப்போம் என்பதை நினைத்துப் பார்த்தான். நான் என்ன செய்திருக்கிறோம் இவனுக்கு? இப்படி என்னு டனே ஒட்டிக்கொண்டு, நண்பனாய், உதவியாளனாய், ஆலோசகனாய், மனம் காயப்படும் போது மருந்து தடவு கிறவனாய்... 'ரொம்ப தாங்க்ஸ்டா ரவி' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டான்.

"எதைச் செய்தாலும் நாம் தொழிலாகச் செய்யக் கூடாது ரவி. இது தொழில்தான். ஆனால் தொழில்ன்ற ஞாபகமே வராமல் ஆத்மார்த்தமாக ஈடுபட்டோம். ஈடு பாட்டோடு செய்யணும்."

"அப்படி இல்லாமல் உங்களால் செய்ய முடியாது சார். எந்த ஈடுபாடும் இல்லாமல் எதைச் செய்யவும் நீங்க ஒப்புக்க மாட்டீங்கன்னு தெரியும்."

மறுநாள் அந்தப் பெண்ணிடமிருந்து அட்வான்ஸ் வாங்கியபோது என்னவோ போலிருந்தது. கையில் பணக்கட்டு உறுத்திற்று. அப்படியே ரவியிடம் கொடுத்தான்.

ஆனால் இப்போது, இந்த இடத்திற்கு வந்த பின் உறுத்தல் அகன்று ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. சந்தோஷம் வந்தது. மனதிற்கு பிடித்துப்போயிற்று. பிடித்த பின் ஆத் மார்த்தமாகச் செய்ய முடியும் என்று தோன்றிற்று. தன்னைத் தேடிவந்து அட்வான்ஸ் கொடுத்து இதைச் செய்யத் தூண்டிய



அந்தப் பெண்ணிற்கு நன்றி சொல்லிக் கொண்டான். அவள் மீதிருந்த அலட்சியம் மாறி ஒரு மதிப்பு ஏற்பட்டது.

'இந்த இடம்... இந்த வனாந்திரம்... இதைத் தேர்ந் தெடுக்க வேண்டுமெனில் அவள் நிச்சயம் நல்ல ரசனையுள்ள வளாகத்தான் இருக்க வேண்டும்.'

அதன் பின் உற்சாகமாகச் செயல்படத் துவங்கினான் அவன்.

## 4

சிருகுகள் பொடிபட நீண்ட நேரமாக மிகத் தனியாக நடந்து கொண்டிருந்தான் ராஜாராமன். அடிக்கடி தலையை உதறி விட்டுக் கொண்டான். ஒவ்வொன்றாய் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான். அந்த ஆரண்யத்தின் அழகை அப்படியே காமிராவில் கொண்டுவர ஆசைப்பட்டான்.

அதிகப்படுத்தி ஒன்றும் காட்ட வேண்டாம். இயல்பான அழகு காட்சியில் வந்தால் போதும். பெரிது பெரிதாய் சாமியானா விரித்த மரங்களை தரை மறைக்கும் இலைச் சருகுகளின் அழகு கண்டு தான் பரவசப்பட்ட அந்தக் கணத்தைத் தொலைக்காட்சி பெட்டி முன் அமர்ந்தி ருப்பவனும் அடைய வேண்டும். முடிந்தால் இந்த வனத்தை அவன் மனதிற்கு மாற்றி விட வேண்டும். நிழல் அமைதி காற்றில் சலனப்படும் சருகுகள் எல்லாம் அவனுக்குள் ஒட்டிக் கொண்டு விடவேண்டும். முதல் எபிஸோடே மறக்க முடியாததாக வேண்டும். சத்யஜித்ரேயின் சாருலதா படத்தில் வரும் சுவர்க்கடிகாரமும் ஒரு பாத்திரமானதைப் போல் இந்த ஆரண்யமும் ஒரு பாத்திரமாக வேண்டும். என்ன செய்யலாம்?

அண்ணாசாலையில் காலை நேர பரபரப்பில் பஸ்கள் அலறும். விர்விர் என்று கார்களும், மோட்டார் சைக்கிள்களும், ஸ்கூட்டர்களும் ஒன்றை ஒன்று முந்தும். இவை எதையும் பொருட்படுத்தாது மனிதர்கள் விரைந்து கொண்டிருப்பார்கள். அந்தக் காட்சி மிகப்பெரிய எந்திரம் ஒன்றை ஞாபகப்படுத்தும். ஒருக்கணம் அதைக் காட்டிவிட்டுச் சரேலென்று இந்த ஆரண்யத்திற்கு வரலாம். சட்டென்று வித்தியாசம் பிடிபடும். பின்னணி ஓசை எதுவுமின்றி காற்றின் சப்தமும், சருகுகள் பறக்கின்ற ஒலியும் தவிர ஒன்றுமே இல்லாமல் ஒரு சுற்று சுற்றலாம். அப்போது மெதுவாக மாணவர்களை உள்ளே நுழைய வைத்து காட்சியைத் துவக்கலாம்.

நடப்பதை நிறுத்தி சற்று தூரத்தில் இருந்த ரவியைக் கூப்பிட்டு சொன்னான். ரவி இவனைப் பார்த்த பார்வையில் பாராட்டும் தொனி இருந்தது. 'இதுதான் ராஜாராமன்' தெரிந்தது.

"ரவி காமிரா, காஸெட் எல்லாம் வந்தாச்சா?"

"வந்தாச்சு சார்."

"தினமும் காலைல ஒன்பது மணிக்கெல்லாம் இங்கே புரோக்கிராம்ஸ் ஸ்டார்ட் ஆறது. காமிரா, லைட்டிங் எல்லாம் சரியாக எட்டரை மணிக்கு ஸ்பாட்ல இருந்தாகணும் தெரியப்படுத்திரு."

"சரி சார்."

"நாமும் எட்டரை மணிக்கெல்லாம் வந்தாகணும்."

"எஸ் சார்."

"நீ போய் தரன்கிட்ட காமிரா சரியாக இருக்கான்னு பார்த்துடச் சொல்லு. வைட் பாலன்ஸ் பார்க்கச் சொல்லு. டிராலி ஷாட் எடுக்க வேண்டி இருக்கும். ரெடி பண்ணிடு. நான் இதோ வந்துடறேன்.



ரவி அகன்றதும் மீண்டும் யோசித்தான். இந்தக் கல்லூரியின் கலை விழாவான 'மார்டிக்ரா' மிகவும் பிரபலமானது என்றார்கள். இந்த வளாகத்தின் திறந்த வெளி அரங்கு அற்புதமானது எனவும் சொன்னார்கள். அங்கு ஏதாவது நிகழ்ச்சி நடக்கும். அதைப் படம் பிடிக்க திட்டமிட்டான்.

கலை நிகழச்சிகளை அப்படியே படம் பிடித்துத்தராமல் மீற நினைத்தான். இடையிடையே மற்ற கல்லூரிகளிலிருந்து வந்து பங்கு பெறும் மாணவ மாணவிகளையும் பேட்டி காண நினைத்தான். பேட்டிக்கான விஷயங்களை வெறும் பொழுது போக்காக மட்டுமின்றி சற்று கனமானதாகவும் இருக்க வேண்டும். அதற்கு ஒப்புக் கொள்வார்களா என்பது தெரியவில்லை. கேட்டுப்பார்க்க வேண்டும்.

தன்னால் இதுபோன்ற சாதாரண நிகழ்ச்சிகளைக்கூட ஏனோதானோ வென்று செய்ய முடிவதில்லை என்பது புரிந்தது. எதைச் செய்வதானாலும் செய்கின்ற விஷயம் தன்னை எந்த விதத்திலாவது பாதித்திருக்க வேண்டும். உள்ளுக்குள் சின்னக்கீறலாகவாவது விழுந்திருக்க வேண்டும். நூலிழை சலனமாவது ஏற்படுத்தியிருக்கவேண்டும். இவை எதுவுமின்றி வெறுமனே எதையும் செய்ய முடிவதில்லை. செய்வதென்று இறங்கிய பின் உண்மையாய் இருக்க வேண்டும். சின்ன விஷயத்திலும் சிரத்தை வேண்டும். தன் சூழலிலுள்ள யாரிடம் அது குறைந்தாலும் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

"மணிகண்டன். போன சீன்ல ரகுவோட பாக்கெட்ல கறுப்பு கலர் இங்க் பேனா இல்ல வச்சிருந்த. இப்போ நீல நிற பால் பாய்ண்ட் வச்சிருக்கியே என்னப்பா இதெல்லாம்?"

இவனது ஞாபக சக்தி மீது பொறாமைப்பட்டான் மணிகண்டன். ஏதாவது பதில் சொல்லியாக வேண்டுமென சொன்னான்.

"இப்போ அந்த இங்க் பேனாவை எங்க சார் தேட முடியும், அது பிரேம்ல வராதே சார்."

"வராதுன்னு யார் சொன்னது? நிச்சயம் வரும்."

"அப்படியே வந்தாலும் இதெல்லாம் ரொம்ப சின்ன விஷயம் சார். ஜனங்க கவனிக்க மாட்டாங்க."

தன் தவறை ஒப்புக்கொள்ளாமல் ஜனங்களின் புத்தி சாலித்தனத்தைக் குறைவாக மதிப்பிட்ட மணிகண்டன் மீது கோபம் வந்தது. திடீரென்று வெடித்தான்.

"பைத்தியக்காரத்தனமாகப் பேசாத மணிகண்டா. ஜனங்களைக் குறைச்சு மதிப்பிடறதை முதல்ல விட்டுடு. நாம் செய்யறதை ஒழுங்கா செய்யணும். செரைச்சா கூட ஒழுங்கா செரைக்கணும். நீ இந்த மாதிரி பொறுப்பற்று பேசறது எனக்குப் பிடிக்கலை. ஜனங்க கண்டு பிடிப்பாங்களா மாட்டாங்களான்றது ரெண்டாம் பட்சம். நம் தொழிலுக்கு நாம் உண்மையாக இருக்க வேணாமா?"

எல்லார் எதிரிலும் தன்னை சத்தம் போட்டுத் திட்டிய தற்குப் பொறுமினான் மணிகண்டன். ரவியிடம் அழாத குறையாக முறையிட்டான். ரவிக்கு ராஜாராமன் சொன்ன விஷயம்தான் முக்கியமாகப் பட்டதே தவிர வார்த்தைகள் இல்லை. அந்தப் புரிந்து கொள்ளும் தன்மையினால் தான் ராஜாராமனுடன் தன்னால் ஒன்றிப் போக முடிகிறது என்று நினைத்துக்கொண்டு ராஜாராமனைப் பார்த்தான் ரவி. ராஜாராமன் நிற்காது ஓடிக்கொண்டிருந்தான்.

இந்தக் கல்லூரி வளாகம் மிக மிகப் பெரிது. காட்டின் நடுவில் தள்ளித் தள்ளி கட்டப்பட்டிருப்பது. ஒரு இடத்திற்கும் இன்னொரு இடத்திற்கும் இடையில் ஒரு மைலாவது இருக்கும். நிகழ்ச்சிகள் ஏதேதோ மூலையில் நடந்தன. காமிராவையும், விளக்குகளையும், ரிஃப்ளெக்டர்களையும் தூக்கிக் கொண்டு ஓட்டமாக ஓடினான் ராஜாராமன். ஒரே காமிராவில் படம் பிடிப்பது சாத்தியமாகவில்லை. இரண்டு காமிராக்கள் கேட்டிருந்தான்.



டிரைவ் இன்னில் வந்து சந்தித்த பெண் (பெயர் கூட இன்னும் மனதில் பதியவில்லை) அவனிடம் வந்து அடிக்கடி பவ்யமாகச் சொன்னாள்.

"இன்னொரு காமிரா இதோ வந்துடும் சார். போன் பண்ணியிருக்கேன். அனுப்பறதாகச் சொல்லியிருக்காங்க."

"கிட்டத்தட்ட முப்பத்தாறு காஸெட்டுக்கு மேல் தேவைப்படும். அதையாவது ரெடியா வச்சுக்குங்க. பேட்டரி வேற வேணும். பேட்டரி தீர்ந்து போயிடுச்சுன்னு ஓடிப்போய் வாங்கிட்டிருந்தா நேரம் வீணாகும். எனக்கு ஒண்ணுமில்லை. விடிய விடியக்கூட ஷூட் பண்ணுவேன். ஆனால் உங்க நேரம்தான் வீணாகும். நேரம் ஏற ஏற காமிரா ரெண்ட்டு சேர்ந்து எல்லாப்பணமும் அதிகமாகும்."

சொல்லிவிட்டு ஓடினான். நாஸ்டால் ஜியா என்ற நிகழ்ச்சியை முழுவதுமாய் படம் பிடித்தான். இந்தத் தலை முறை மாணவ மாணவிகள் 'சிக்கு புக்கு ரயிலை' விட்டு 'ஏரிக்கரையின் மேலே போறவளே பெண்மயிலேவும்', 'மன்மதலீலையை வென்றார் உண்டோவும்' பாடியது வித்தியாசமாக இருந்தது.

"கான் அப்படியே அந்தப் பெண்ணை Zoom in பண்ணிக்குங்க."

"மெதுவா பேன் பண்ணிடுங்க."

"இதை Zoom out பண்ணுங்க."

"அடுத்து வெஸ்டர்ன் மியூஸிக் புரோக்கிராம் இருக்காம், அதை எடுத்து முடிச்சுடலாம்."

மனதிற்குத் திருப்தியாக அந்த மூலையிலிருந்து இந்த மூலைக்கு வந்து கிட்டத்தட்ட நான்கு மணி நேரங்களுக்கு மேல விடாமல் படமெடுத்த பின்னரே லஞ்ச் பிரேக் அறிவித்தான்.

"ஸாரி தரன். ரொம்பப் பசியா இருக்கும் எல்லோருக்கும். ரெகுலராக நடிக்க வச்சு எடுக்கிற ஷூட்டிங்னா எப்போ வேணும்னாலும் எடுத்துக்கலாம். இது அப்படியில்லை பாருங்க. நிகழ்ச்சிகளைத் தவற விட்டால் திரும்ப எடுக்க முடியாது."

"பரவாயில்லை ராஜன். 'இதெல்லாம் நமக்கென்ன புதுசா...?" என்றவாறு தரன் சாப்பிடப் போனான்.

படப்பிடிப்பிற்கு இடையில் இவன் எதுவும் சாப்பிட மாட்டான் என்பதால் ரவி தன் வீட்டிலிருந்து நல்லதாக தயிர்சாதம் கலந்து தரச்சொல்லி பொட்டலம் கட்டிக் கொண்டு வந்திருந்தான். அதைக் கொடுத்த போது இவன் கேட்டான்.

"உனக்கு ரவி?"

"நான் யூனிட்டோடு சாப்பிட்டுக்கறேன் சார்."

"தாங்க்ஸ் ரவி. திரும்பி மூணு மணிக்கெல்லாம் ரெடியாயிடணும் சொல்லிடு."

"சரி சார்."

தாயை விட அதிகமாக தன் மீது சிரத்தை காட்டுகிற ரவியை நினைத்து நெகிழ்ந்தவாறு உணவுப் பொட்டலத்தை எடுத்துக் கொண்டு மர அமைதி தேடினான்.

பக்கத்து மரத்தடியில் ஒருவன் கனசிரத்தையாக சருகுகளை காலால் பெருக்கித் தள்ளி விட்டு கைகுட்டை விரித்து உட்கார்ந்ததைப் பார்த்து சிரித்துக் கொண்டான். 'இவர்களுக்கு தேவை தோட்டமாக இருக்கிற தோட்டமல்ல, மொஸைக் தரைதான்.

ஏன் இப்படி ஆகிப்போனான் மனிதன்? இயற்கையை உதாசீனப்படுத்தி தன் வயிறும் தனது தேவைகளும் மட்டுமே பிரதானமாகிப் போனது? அப்படி வாழ்ந்துதான் என்னத்தைக் கண்டார்கள்? ஒருவரை ஒருவர் ஏமாற்றி,



அடித்துக்கொண்டு வேளைக்கு ஏற்ற மாதிரி மனிதர்களுக்குத் தகுந்த முகமூடிகளை அணிந்து கொண்டு, எது தன் சொந்த முகம் என்பதே மறந்து போய், செஸ்காய்களைப் போல் மற்றவர்களை நகர்த்தி, வெட்டிக் கொண்டே முன்னேறி... தன் முன்னேற்றமே குறியாகக் கொண்டு...

பொய் பொய்யாய் மனுஷாளே
பூப்பூவாய்ப் பூத்தாளே

காலசிவன் கவிதை ஞாபகத்திற்கு வர உணவுப் பொட்டலத்தைப் பிரிக்க மறந்து அப்படியே உட்கார்ந்திருந்த போது மிகச் சாதாரணமாக அவனை நெருங்கினாள் அந்தப் பெண். இயல்பாய் சிரித்தாள். நெடுநாள் பழகிய நண்பனைச் சந்திக்கிற தொனியில் ஹலோ என்றாள்.

தலையை உயர்த்திப் பார்த்தான். உயரமாய், சிவப்பாய், வாளிப்பான உடம்பு தழுவிய சுடிதாரில் அழகாக இருந்தாள். ஆனாலும் தன் இயல்பான கூச்ச சுபாவத்தில் மிக மெதுவான குரலில் அவனும் பதிலுக்கு ஹலோ சொன்னான்.

## 5

அப்படி ஒன்றும் ராஜாராமனுக்குப் பெண்கள் அந்நியமானவர்களில்லை. விலக்கி வைப்பவனில்லை. இன்னும் சொல்லப்போனால் பெண்கள் பிரச்சினையாகவும் இருந்திருக்கிறார்கள், சியாமளி, அனு, அருணா என சின்னப் பட்டியலில் சேர்ந்திருக்கிறார்கள்.

'அவர்கள் ஏன் தன்னை இப்படி ஈர்க்கிறார்கள்?' நிறைய தரம் கேட்டுக் கொண்டிருக்கிறான். யோசித்துப் பார்த்தும் இருக்கிறான். இதற்கு ஏதாவது காரணமிருக்க வேண்டுமென ஃபிராய்டைத் துணைக்கு அழைத்துத் தேடி இருக்கிறான்.

அவனது நண்பர்களில் யாரும் குடிப்பவர்கள் இல்லை. ரவிகூட அவனுக்காகத்தான் வருவானே தவிர குடிக்க மாட்டான். ஒரு ஸ்மால் நிரப்பி கடைசி வரை அப்படியே வைத்துக்கொண்டிருப்பான்.

"ஏன் ரவி குடிக்கலை?"

"இதோ சார்."

உதடு தொட்டு வைத்துவிடுவான். அதுபோல் பெண்களையும் தள்ளி நிறுத்துவான். ரவி மட்டுமின்றி யூனிட் முழுதுமே அப்படித்தான். அதனால் குடிக்கத் தோன்றுகிற போதெல்லாம் ரவியை அனேகமாய்த் தவிர்த்து மூர்த்தியின் தோழமையை நாடுவான்.

டிரைவ் இன்னில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிற போது மாலை ஏழு மணியளவில் திடீரென்று சில நாட்கள் குடிக்கத்தோன்றும். லேசாய் மிதக்கிற அந்த உணர்விற்கு மனது பரபரக்கும். சின்னக் கசப்பிற்கு நாக்கு ஏங்கும். சட்டென்று நண்பர்களை விட்டு அகலத் தவிப்பான்.

"அப்போ நீங்கள்ளாம் கிளம்பறீங்களா?"

"ஸீயு சார், நாளைக்குப் பார்க்கலாம்." எல்லோரும் போனபின் ரவி யோசனையுடன் கேட்பான். நானும் கிளம்பணுமா சார்?"

"ஆமாம் ரவி. நான் மெதுவா வரேன். மூர்த்தி ஏதோ டிஸ்கஸ் பண்ணனும்னு சொன்னான். பண்ணிட்டு வரேன்."

ரவிக்கு 'இது தேவையா சார்?' கேட்கத் தோன்றும் அடக்கிக் கொள்வான்.

வேலை நேரச்சுமை மறக்க ராஜாராமன் ஒரிரு பாட்டில் கள் பியர் குடிப்பான். அதில் ரவிக்கு ஆட்சேபணை ஒன்றுமில்லை. ஆனால் மூர்த்தியுடன் சேர்ந்து பாருக்குப் போய் குடிக்க ஆரம்பித்தானானால் சற்று அதிகமாகி விடுகிறது.



இரண்டு லார்ஜ் குடித்தபின் நிறுத்தமாட்டான். அப்படியெல்லாம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதோ, கட்டுப்படுத்துவதோ அவனுக்குப் பிடிக்காது.

தன் சுதந்தரத்தின் மீது விசேஷ கர்வம் உண்டு அவனுக்கு அதைத் தன் இயல்பாக்கிக் கொண்டுவிட்டதில் சந்தோஷம் உண்டு. ஒரு வட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறபோது வேறு நண்பன் வந்து தனியாகப் பேசவேண்டுமென்றால் மற்ற அத்தனை பேரும் தயங்குவார்கள். நெளிவார்கள். 'அதுவந்து...' என்று இழுத்துத் தடுமாறுவார்கள். இவனிடம் அதெல்லாம் இல்லை.

"எக்ஸ்க்யூஸ்மி. நான் கார்வண்ணன் கிட்ட தனியா கொஞ்சம் பேச வேண்டி இருக்கு."

தயங்காமல் சொல்லி இவன் நகருவான். அல்லது மற்றவர்களை நகர்ந்து வேறு மேஜைக்குப் போகச் செய்வான்.

அதுபோல் அவசர வேலைக்காகப் போய்க் கொண்டிருக்கிறபோது எதிரில் ஆப்த நண்பன் வந்தாலும் நிற்கமாட்டான்.

'வேற வேலையா போறேன். வந்து பேசறேனே..."

ரவி உட்பட இவனது எந்தநண்பனாலும் அது முடியாது. 'ஹலோ'வில் ஆரம்பித்து, போலியாய் சிரித்து, கை குலுக்கி, நேரமாவதில் நெளிந்து, 'விடமாட்டானா...?' என உள்ளுக்குள் சங்கடப்பட்டு...

"என்ன பாஸ்கர் நீங்க...வேலை இருக்குன்னு சொல்லிட்டு கிளம்ப வேண்டியதுதானே? எதுக்கு அனாவஸ்ய ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் பார்க்கறீங்க?"

"முடியலை ராஜன், உங்களை மாதிரி சட்டுனு கத்தறிச்சுக்கிட்டு வர என்னால் முடியலை."

"இது கத்தறித்தலில்லை பாஸ்கர். அனுசரித்தல். புரிந்து கொள்ளுதல். இதுகூட இல்லைன்னால் என்ன நட்பு சொல்லுங்க?"

தனக்கு சுலபமாக இருக்கிற எத்தனையோ விஷயங்கள் மற்றவர்களுக்கு கஷ்டமாக இருப்பதை உணர்ந்திருக்கிறான். அதனால் அவர்கள் சங்கடப்படுவது கண்டு சிரித்திருக்கிறான்.

"எதுக்குப்பா, இதெல்லாம்? ஒவ்வொரு நிமிஷமும் நிஜமா நமக்கு நாம் உண்மையா இருந்துட்டால் எந்த முகமூடியும் போட்டுக்க வேணாமில்லை? பொய்யைத் தவிர்ப்பதால் நாம் எத்தனை விஷயங்களைத் தவிர்க்கிறோம். எவ்வளவு சுதந்திரமாக இருக்கோம் தெரியுமா?"

அனேகமாய் அவன் அப்படித்தான் இருந்தான்.

"இன்னிக்கு பாருக்குப் போகலாம் வரீங்களா ராஜன்?"

அவன் யூனிட் சார்ந்தவனல்லாத மூர்த்தியும் இன்றி வேறு யார் கூப்பிட்டாலும் சட்டைப் பையைப் பார்ப்பான். பணமிருந்தால் இவன் வாங்குவான். இல்லையெனில் வெளிப்படையாகச் சொல்லிவிடுவான்.

"சாரி... இன்னிக்கு என் கைல பத்து ரூபாய்தான் இருக்கு. நீங்க யாராவதுதான் வாங்கணும்."

அந்த மாதிரித்தான் பெண்கள் விஷயமும். சியாமளி என்ற பெண்ணுடன் பழக ஆரம்பித்தான். இரண்டு மாதங்களான பின்னர் ஒருநாள் ரவியிடம் சொன்னான்.

"இன்னிக்கு ராத்திரி நான் வீட்டுக்கு வரலை ரவி. எங்கம்மாகிட்ட கொஞ்சம் சொல்லிட்டுப் போயிடறியா?"

"ஏன் சார். வீட்டுக்கு வராமல் என்ன செய்யப் போறீங்க?"



"மகாபலிபுரம் போகலாம்னு இருக்கேன். யூனிட் கார் எடுத்துண்டு போறேன். நீ ஆட்டோ பிடிச்சுப் போயிடறியா ப்ளீஸ்."

"நான் போறேன் சார். ஆனால் நீங்க தனியாகவா மகாபலிபுரம் போகப் போறீங்க?"

"தனியாக இல்லை. சியாமளி கூடப் போறேன்."

"சியாமளி கூடாவா! விளையாட்டுக்குச் சொல்றீங்களா?"

"இல்ல ரவி. நிஜமாகத்தான் சொல்றேன்."

"நான் நம்ப மாட்டேன் சார். இத்தனை வருஷமா பழகறேன் எனக்கு உங்களைத் தெரியாதா? ஆக்ட் பண்ணணும்னு வந்த எத்தனைப் பொண்ணுங்க உங்ககிட்ட ஜாடையா சொன்னாங்க. அப்போதுகூட நீங்க ஒரு பொண்ணையும் திரும்பிப் பார்க்கலை."

"அது தப்பு ரவி. அவங்க எனக்காக வரலை. இவன் டைரக்டர். இவன் கிட்ட சரியா நடந்துக்கிட்டா மேலே சான்ஸ் கிடைக்கும்னு எதிர்பார்த்து சொல்லப்பட்ட விஷயம். அதைச் சரின்னு எடுத்துக்கிட்டா அது எக்ஸ்ப்ளாய்டேஷன். ஒரு போதும் நான் அதைச் செய்யமாட்டேன்."

"இந்தச் சியாமளி மட்டும் என்ன?"

"நோ. இவ அப்படி இல்லை: என்னால் அவளுக்கோ அவளால் எனக்கோ ஆக வேண்டியது ஒண்ணுமில்லை. எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை. No tails behind ரெண்டு பேருக்கும் பிடிச்சிருக்கு. போறோம் அவ்வளவுதான்."

"போய்த்தான் ஆகணுமா சார்?"

அவன் பதில் சொல்வதற்குள் சியாமளி வந்துவிட்டாள். ரவியைப் பார்த்து எப்போதும் சொல்கிற குரலில் 'ஹலோ'

சொன்னாள். 'போகலாமா?' கேட்டு காரில் ஏறிக் கொண்டாள்.

"வரேன் ரவி. மறக்காமல் வீட்ல சொல்லிடு."

கார் நகர்ந்ததும் சிறிது நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தான் ரவி. குடிக்கிற விஷயத்தில் ராஜாராமனைக் கட்டுப்படுத்த முடியாதது போல் இதிலும் கட்டுப்படுத்துவது இயலாததாகிவிடுமோ எனக் கவலைப்படத் துவங்கினான்.

'இத்தனை புத்திசாலிக்கு, இவ்வளவு யோசிப்பவனுக்கு பெண் ஏன் விஷயமாகிறாள்? ஆகக்கூடாதே... 'எங்கிருந்து வந்தது இந்த பலவீனம்? என்ன சொல்லி மீட்பது?'

அவனுக்குப் புரியவில்லை. அதன்பின் இரண்டு நாட்கள் ராஜாராமனுடன் பேச முடியாமல் தவித்தான். பேசுவது தவிர்த்தான்.

"ஏன் ரவி என்னவோ போல் இருக்க?"

புரிந்துகொண்டு கேட்டான் ராஜாராமன்.

"ஒண்ணுமில்ல சார்."

"ஒண்ணுமில்லாமல் நீ என்கிட்ட இப்படி இருக்கமாட்ட. என்ன விஷயம்?"

"வேணாம் சார். எனக்கு அதுக்கு உரிமை இல்லை."

"எதுக்கு?"

"அந்த மாதிரி மகாபலிபுரமெல்லாம் போகாதீங்கன்னு சொல்றதுக்கு."

"அதுல என்ன தப்பு இருக்கு ரவி?"

"தப்புதான் சார்."

"எதை நீ தப்புன்ற?"

"பொண்ணுகூட மகாபலிபுரம் போறதெல்லாம் தப்பு சார்."



"ஏன் அப்படிச் சொல்ற?"

"மனசுல படறது சொல்றேன்."

"ஏன் அப்படிப் படறதுன்னு யோசிச்சுப் பார்த்தியா?"

"இல்லை."

"யோசி. விடை கிடைக்கும்."

"வேணாம். யோசிக்கிற மனநிலையில் நான் இல்லை, நீங்களே சொல்லிடுங்க."

"காரணம் இது பழக்கத்தில் இல்லை. நமக்கு அந்நியமான விஷயம்ன்றதால தப்புன்னு சொல்ற."

"இல்ல சார். என்ன சொன்னாலும் தப்புதான்."

"செக்ஸ் தப்பா?"

"அந்தப் பொண்ணையே நீங்க கல்யாணம் பண்ணிக்கப். போறதானால் தப்பில்லை."

"அடப்போடா பைத்தியக்காரா. நம் சமூகச் சூழலை வச்சு நீ அப்படி சொல்ற. எல்லோரும் தப்புன்னு நினைக்கிறதால் நீயும் நினைக்கிற. வெகு ஜனம் எதைத் தீர்மானிக்கிறதோ அது இந்த தேசத்தின் தலைவிதியாக மட்டுமில்ல. தனி மனிதனின் தலைவிதியும் அதுதான்னு ஆகிப்போச்சு. கல்யாணம், குடும்பம்ன்ற அமைப்பெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக உடைஞ்சுக்கிட்டே வருது. இந்தத் தலைமுறைக்கு அடுத்த தலைமுறை கல்யாணம்னால் என்னன்னு கேட்கும். வேறு வழியில்லையேன்னு ஒருத்தனுடனும், ஒருத்தியுடனும் வாழற நிர்ப்பந்தம் இருக்காது. அவளுக்கும் பிடிச்சு எனக்கும் பிடிச்சிருக்கிறதால் ஒரு தப்புமில்லை. வலுக்கட்டாயம், நிர்ப்பந்தம், சூழல்னு இருந்தால்தான் தப்பு. ஸோ இப்படி மனசைப் போட்டு அலட்டிக்காமல் நிம்மதியாக இரு."

அதன்பின் ரவி இது பற்றி கேள்விகள் கேட்பதை நிறுத்தினான். சியாமளி போய் அனு, அருணா என இரண்டு பேர் மாறினார்கள். கடைசியில் ராதா என்றொரு பெண் வந்தது. கள்ளத்தனம் எதுவுமின்றி சிரித்தது.

"சார் எனக்கு எல்லாம் சொல்லிக் கொடுங்க சார்." என்று குழந்தையாய் கெஞ்சிற்று.

யூனிட் முழுவதும் கலாட்டா பண்ணினார்கள்.

"சார் சொல்லிக் கொடுன்னு கெஞ்சுதில்ல. சொல்லிக் கொடுங்களேன்" என்று கண்சிமிட்டினார்கள்.

"அடகம்மா இருங்கப்பா. சின்னப் பொண்ணு. டப்பிங், எடிட்டிங், ரெகார்டிங் இதெல்லாம் என்னன்னு தெரிஞ்சுக்க ணும்ன்ற ஆசையில் கேட்டால் கலாட்டா பண்றீங்க.

அதன் பின்னர் இதோ மரத்தடிக்கு வந்து. நீண்டநாள் பழகின மாதிரி சிரித்து, சர்வ சகஜமாக ஹலோ சொல்லி....

'யார் இவள்...?'

எப்போதும் போல் சாதாரணமாகப் பார்த்து சிரிக்க முயன்றான் ராஜாராமன்.

## 6

"என் பேர் திவ்யா."

இவனுக்கு பதிலுக்குத் தன் பெயரை அறிமுகப்படுத்த வேண்டும் என்பது உறைத்தது.

"ராஜாராமன்."

"தெரியும்."

"எப்படி?"



"காலையிலிருந்து எல்லாரும் சொல்லிட்டிருக்காங் களே...."

மீண்டும் சிரிக்க முயன்று வெறும் 'ஓ'வுடன் நிறுத்திக் கொண்டான். அவன் கையிலிருந்த பொட்டலத்தைப் பார்த்துவிட்டு அவள் கேட்டாள்.

"சாப்பிடலையா?"

"சாப்பிடணும்."

"சாப்பிடுங்களேன்."

"சாப்பிடலாம்."

மெல்ல அசுவாரஸ்யம் தட்டத் தொடங்கிற்று. பசி அடங்கிப் போனதான உணர்வு ஏற்பட்டது. அதற்கு மேல் சாப்பிட முடியாதெனத் தோன்றியது. அந்தப் பெண்ணே மறுபடியும் பேசட்டும் எனக் காத்துக்கொண்டிருந்தான்.

மற்ற பெண்களைப் போல் இவள் பார்த்தது தன்னைக் கவராததை நினைத்துக் கொண்டான். ஏன் என்பது புரியவில்லை. நிறைய ஏனுக்குத் தன்னிடம் பதிலில்லை எனவும் சொல்லிக் கொண்டான். 'பெயர் என்ன சொன்னாள்?' நித்யா....? இல்லை திவ்யா. தமிழ்ப் பெண்ணா? தெரியவில்லை. அழகாக இருக்கிறாள்' ஆனாலும் தோன்றவில்லை. அழகு தவிரவும் ஏதோ தேவைப் படுவதைப் புரிந்து கொண்டான்.

"சரி. நீங்க ஏதோ யோசனையில் இருக்கீங்க போல இருக்கு. நான் வேணா அப்புறம் வரட்டுமா?" "என்ன விஷயம் சொல்லுங்க?" "ஒண்ணுமில்ல. உங்ககிட்ட பேசணும்னு தோணித்து. நிறையப் பேச முடியும்ன்ற அபிப்பிராயம் வந்தது. அதான்."

அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தான். கண்களில் நிஜம் தெரிந்தது. வெளிப்படையாகப் பேசக்கூடியவள்

என்பது அப்பட்டமாகப் புலப்பட்டது. சட்டென்று ஓர் பிடிப்பு ஏற்பட்டது.

“உட்காருங்களேன். பேசலாம்.”

“இல்லை. வேணாம். நீங்க ஷூட்டிங் முடிச்சு எப்போ புறப்படுவீங்க?”

“சொல்ல முடியாது. பதினொன்று பனிரெண்டு கூட ஆகும்.”

“கல்சுரல்ஸ் முடிய எங்களுக்கும் அவ்வளவு நேரமாகி விடும். நான் இங்கேதான் இருப்பேன். உங்களை வந்து பார்க்கிறேன்.”

“எப்போ?”

சட்டென்று வெளிப்பட்டுவிட்ட தன் ஆர்வத்திற்காக வெட்கப்பட்டுக் கொண்டான்.

“நீங்க ஷூட்டிங் முடிச்சு புறப்படறப்போது வரேன்.”

‘நான் எப்போ ஷூட்டிங் முடிப்பேன்னு உனக்கெப்படித் தெரியும்?’

கேட்க நினைத்து கேட்காமலிருந்தான்.

“ஸீ யு தென்.”

“ஸீ யு.”

வந்த அதே இயல்பில் திரும்பிப் போனாள். கூட்டத்தோடு கலக்கிறவரை பார்த்துக் கொண்டிருந்தான். அதன் பின் சாப்பிடப் பிடிக்கவில்லை. ரவி தனக்காக மிகவும் அக்கறைப்பட்டுக் கொண்டு வந்தது என்பதால் பொட்டலம் பிரித்தான். உள்ளே சின்ன பிளாஸ்டிக் ஸ்பூன் இருந்தது உதட்டோரம் சிரிப்பு ஓடிற்று. சாப்பிட்டு முடித்து இலை சுருட்டி சருகுகளோடு போட்டுவிட்டு எழுந்தான்.

இடைவேளைக்குப் பின் யூனிட் கூடிற்று. இவன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்



கொண்டு ஆழமாகப் புகையை உள்ளே நிரப்பிக் கொண்ட போது திவ்யா பற்றி நினைத்தான். ‘சுவாரஸ்யமான பெண்ணாகத்தான் இருப்பாள்.’

சிகரெட் முழுதும் புகைத்துவிட்டு இவனும் போய் யூனிட்டோடு சேர்ந்து கொண்டான்.

“ரவி, அடுத்து ஓபன் ஆடிட்டோரியத்துல ஷூட்டிங் வச்சுக்கலாம்னு நினைக்கிறேன். என்ன புரோக்ராம்னு கேட்டுடு.

“கேட்டுட்டேன் சார். எம். எஸ். சுப்புலட்சுமி கச்சேரி.”

“அதை நிச்சயம் கவர் பண்ணணும்ப்பா. வெஸ்டர்ன் மியூஸிக்கையும், எம். எஸ். கச்சேரியும் வச்சு என்ன செய்ய லாம்னு அப்புறம் யோசிக்கலாம்.”

“கச்சேரி ஆறு மணிக்குத்தான் சார். இப்போ என்ன எடுக்கறது?”

“டிராமா இருக்குன்னு சொன்னாங்க. அதை எடுத்துட லாம்.”

நாடகம் நடக்கும் இடத்திற்கு யூனிட் இடம் பெயர்ந்தது அதை எப்படி கவர் பண்ண வேண்டுமெனச் விளக்கிவிட்டு விலகினான். இனிமேல் செய்யப்பட வேண்டியது தன் வேலை இல்லை. கல்யாண நிகழ்ச்சிகளை வீடியோப் படம் பிடிக்கிற மாதிரி பிடித்துக் கொண்டு போகத் தான் தேவை யில்லை. இது வெறும் கம்பெய்லிங் வேலைதான். கிரியேட்டி விட்டிக்கு இடம் கிடையாது. எடிட்டிங்கில்தான் கொஞ்ச மாவது அதற்கு இடம் உண்டு.

‘இந்த நிகழ்ச்சியைப் படம் பிடிக்க தான் ஒப்புக் கொண்டே இருக்கக் கூடாதோ...?’

மீண்டும் உறுத்திற்று.

எதைத் திறந்தால்
என்ன கிடைக்கும் என்று
எதை எதையோ
திறந்து கொண்டே இருக்கிறார்கள்.

என்ற நகுலனின் கவிதை ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு வேளை தனக்கு அதிகப்படியான கர்வம் இருக்கிறதோ...? தான் மட்டும்தான் உலகத்திலேயே பெரிய மனிதன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமோ...? தன்னைப் போன்ற புத்திசாலி யாருமில்லையென்ற மமதையோ?

இல்லை. இது நிச்சயம் கர்வம் இல்லை. இது எல்லோருக்கும் தேவையான சுயமரியாதைதான். நானே என் வேலையை மதிக்கவில்லையெனில் யார் மதிப்பார்கள்? என்கிற மரியாதைதான். இந்த மரியாதை காரணமாக நான் அடுத்தவரை ஒரு போதும் காயப்படுத்தியதில்லை. வெளிப்படையாகப் பேசுவது காயப்படுத்துவதாகாது.

'அந்தப் பெண் திவ்யா போல்?'

'என்ன தெரியும் அவளைப் பற்றி உனக்கு?' சிரித்துக் கொண்டான். பாக்கெட்டுக்குள் கை விட்டுக் கொண்டு தோள்கள் ஏறி இறங்க நடந்தான். கை உயர்த்தி, இலைகளை உருவினான். உள்ளங்கையில் வைத்துக் கசக்கி முகர்ந்தான். 'ஐயோ ஐயோ' என மனது அடித்துக் கொண்டது. 'ஹா ஹா' என பிரம்மித்தது. இங்கு அடிக்கடி வரவேண்டும்.

நிமிர்ந்து பார்த்தான். ஒரு கிளி திடுதிப்பென்று இலைகளிலிருந்து பறந்து எதிர் மரத்திற்குச் சென்றது. ஒரு மின்னலைப் போல் இருந்தது. அவனுக்கு தன் எதிர்வீட்டு மரக்கிளிகள் ஞாபகத்திற்கு வந்தன. மரங்களை வெட்டிய அன்று வெட்டவெளி சுற்றி அவை பறந்த அவலம். போட்ட கோஷம்...



இந்தக் கிளி கால் விரல்களை விரித்து மூக்கால் தடவி விட்டுக் கொண்டது. 'பச்சைக் கிளியின் சிகப்பு மூக்கு!' அந்தக் காட்சியின் அழகை மனது தக்க வைத்துக் கொண்டது. தான் ஒரு ஓவியனாகப் பிறக்காமல் போனதற்கான வருத்தம் ஏற்பட்டது.

பறவைகளிலேயே கிளிதான் மிகப் பிடித்திருக்கிறது. மனதிற்கு ரவி மாதிரி ஒரு அந்யோன்யம் வருகிறது. அதன் பச்சை சிகப்பு காம்பினேஷனும், வளைந்த மூக்கும் கீச் கீச் சத்தமும், வால் நீட்டி இறக்கையை வேகமாக அடித்துக் கொண்டு பறக்கும் விதமும் அப்படியே அள்ளிக் கொண்டு போகும். அதற்குச் செல்லமாகப் பெயர் வைக்க நினைத்தான். ஏனோ தினகரி என்ற பெயர் மனதிற்குள் வந்தது. தினகரி இல்லை திவ்யா. அருகில் போய் கேட்டான்.

"நீ தினகரியா திவ்யாவா?"

அது 'கீச்'சென்று பறந்து போயிற்று.

சாயங்கால மஞ்சள் வெளிச்சம் மெல்ல மெல்ல ஆரண்யத்தைப் போர்த்துக் கொண்டு வந்தது. அவனுக்குத் திடீரென்று அகிராகுரோசோவாவின் ரோஷமான் ஞாபகத்திற்கு வந்தது. அதில் காட்டை எப்படிக் காட்டியிருப்பார்! இந்த வனத்தை அந்த மாதிரி காட்டவேண்டுமென்று நினைத்துக் கொண்டே திரும்பினான். அவர்கள் ஷூட்டிங் முடிந்து திரும்புவது தெரிந்தது.

"என்னப்பா ஆச்சு?"

"லொகேஷன் மாத்தறோம் சார்."

"எங்க போறீங்க?"

"ஓபன் ஆடிட்டோரியம். எம். எஸ். கச்சேரி ஆரம்பிச்சுட்டாங்களாம்."

அவனும் போனான். அந்த வெட்டவெளி அரங்கு கண்டு பிரமித்தான். வட்டமாகக் கட்டப்பட்டிருந்தது

படிப்படியாகக் கிணறு போல் உள்ளே இறங்கிற்று. எதிரில் மேடை. விளக்கு வெளிச்சத்தில் எம். எஸ். தலையசைக்கும் போதெல்லாம் தூரத்துக் கலங்கரை விளக்கின் வெளிச்சம் மாதிரி மூக்குத்தி டாலடித்தது. உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்தான். இளமை தெரியவில்லை. தேடினால் கூட ஓரிரண்டு தலைகளுக்கு மேல் இல்லை.

''தரன். நீங்க உள்ள போய் எடுத்துர்றீங்களா?''

''ஓ.கே. ராஜன். மொத்தமும் எடுக்கணுமா?''

''நோ நோ. ரெண்டேரெண்டு கீர்த்தனை எடுங்க போதும்.''

திரும்பி தனியாக நடந்து ஆடிட்டோரியம் விட்டு வெளியில் வந்தபோது 'வுட்ஸ்டாக்' நினைவிற்கு வந்தது. பள்ளி மாணவனாக இருந்தபோது பதினைந்து வருடங்களுக்கு முன்னால் பார்த்த படம். எல்லா நாட்டு இசைக் குழுவினரையும் ஒரு காட்டினுள் ஒன்று சேர்த்து இசை விழா நடத்துவார்கள். வெகு நாட்கள் வரை அந்தப் படத்தின் பாதிப்பு மனதில் இருந்து கொண்டே இருந்தது. சில பாடல்களை விசில் அடித்தும், வாய்விட்டும் பாடிக் கொண்டிருந்தான்.

அதுபோல் இங்கு ஒரு விழா ஏற்பாடு பண்ணினால் என்ன? இந்த இடம் கிடைக்குமா? ரவியை விட்டு விசாரிக்கச் சொல்லவேண்டும். வுட்ஸ்டாக் மாதிரியே வெவ்வேறு இடங்களில். வெவ்வேறு நிகழ்ச்சிகள். வெவ்வேறு குழுக்கள். டெண்ட் அடித்துத் தங்கல்கள். ஒரு இடத்தில் கர்நாடக சங்கீதம். இன்னொரு இடத்தில் வெஸ்டர்ன். மற்றொரு மரத்தடியில் இந்துஸ்தானி. பிறிதொரு இடத்தில் கஸல்.

யார் யாரை வரவழைக்கலாம்? மைக்கேல் ஜாக்ஸன், ஜெகஜித்சிங், சித்ராசிங், அனூப் ஜலோட்டா...



ஏன்...? இந்தக் கல்லூரிக் கலைவிழாவே ஒரு குட்டி 'வுட்ஸ்டாக்' மாதிரித்தானே நடைபெறுகிறது. இதுவரை இந்த நிஜம் மனதிற்குப் பிடிபடவில்லையே...

''ஹலோ...''

நிமிர்ந்து பார்த்தான். திவ்யா.

சட்டென்று புதிதானதோர் உற்சாகம் தொற்றிக் கொண்டது.

''ஹல்லோ...''

''என்ன இப்படி ஹாய்யா நடந்துக்கிட்டிருக்கீங்க? ஷூட்டிங் முடிஞ்சுடுத்தா?''

''இல்லை. எம்.எஸ். கச்சேரி ஷூட் பண்ணிட்டிருக்காங்க.''

''நீங்க வேணாமா அதுக்கு?''

''வேணாம்.''

''அப்போ வரீங்களா போகலாம்?''

''எங்கே?''

''எங்கேயாவது போய்க்கிட்டே பேசலாம்.''

''இருங்க. என் அஸிஸ்டெண்ட்கிட்ட சொல்லிட்டு வரேன்.''

''வேணாம். இப்படியே போயிடலாம்.''

''இல்ல. பாவம் அவன் தேடுவான். அப்படியே கார் எடுத்துண்டுப் போறதையும் தெரியப்படுத்திட்டு வந்துடறேன்.''

''வேணாம். என் கார் இருக்கு.''

"அப்போ சொல்லிட்டு வந்துடறேன்."

சொல்லிவிட்டுத் திரும்பியபோது மூச்சிறைத்தது. அவளுடன் நடந்தது சந்தோஷம் தந்தது. அவள் தன் மாருதி திறந்து உள்ளே உட்கார்ந்து அவனுக்குக் கதவு திறந்து விட்டாள். ஏறிக் கொண்டான். வண்டி கிளம்பிற்று.

## 7

"அகிரா குரோசாவாவின் 'ரெட்பியர்ட்' பிரம் மாண்டத்தோடு பொலான்ஸ்கியின் 'லவ் மீ' பிரம் மாண்டத்தை ஒப்பிட முடியாது. இரண்டும் வெவ்வேறான தளங்களைக் கொண்டவை."

சிறான தளும்பலில் கோப்பையில் இருந்த விஸ்கி குறைந்தது. ராஜாராமனுக்கு ஆச்சரியம் அதிகரித்துக் கொண்டே போயிற்று. அன்று அந்தக் கல்லூரியின் கலை விழாவைப் படம் பிடித்துக் கொண்டிருந்தபோது தன்னிடம் பேச வேண்டுமென்று வந்த பெண். குரோசாவா, பொலான்ஸ்கி, வா.ச.ரா., மௌனி, சுந்தரராமசாமி பற்றி யெல்லாம் பேசுகிறாள்! வாழ்க்கையில் நான் சந்திக்கும் முதல் புத்திசாலிப் பெண்.

அன்று அவளது ஒற்றைப் படுக்கையறை பிளாட்டிற்கு அழைத்துப் போனாள். மற்ற முகங்கள் எட்டிப் பார்க்காத- நிம்மதியான சுதந்திரமான பிளாட். நான்காவது மாடி. லிஃப்ட் இருந்தது. அவளே சாவிபோட்டுத் திறந்தாள். விளக்கெரியவிட்டாள். மிதமான அலங்கரிப்பில் கச்சிதமாக இருந்தது.

"என்ன சாப்பிடறீங்க?"

யோசித்தான்."

"பியர் குடிக்கலாமா?"



லாமாவா? பியர் குடிக்கிற பெண்! இன்னும் எத்தனை எதிர்பாராத சந்தோஷ அதிர்ச்சிகள்!

குளிர்சாதனபெட்டி திறந்து டின் பியர் எடுத்தாள். டப்பா திறந்து உருளைக்கிழங்கு வறுவல் கொட்டி வைத்தாள். இரு பெரிய பீங்கான் மக்கில் பியர் நிரப்பினாள். சியர்ஸ் சொல்லி அவனுக்குச் சமமாக உறிஞ்சினாள்.

"கேள்வி எதுவும் கேட்க மாட்டீங்களா?" 578254

"என்ன கேட்கணும்?"

"இங்கு வரவங்க கேட்கிற 'தனியா இருக்கியா' அம்மா அப்பாவெல்லாம் இல்லையா?"

894.8113 IND

"ம்ஹூம். தேவையில்லை."

"அம்மா அப்பாவா?"— சிரித்தாள்.

அதிர்ந்து நிமிர்ந்தான். 'மிக மிகத் துணிச்சலான பெண். சிரிக்க முயன்றான்.

அன்றுதான் இந்த மகாபலிபுரம் வருகை ஏற்பாடாயிற்று. மீண்டும் அவன் வீட்டு வாசலில் இறக்கி விட்டபோது சொன்னாள்.

"மறந்துடாதீங்க, காட்டேஜ் புக் பண்ணிடறேன்." கடலை ஒட்டின மனித நடமாட்டம் அதிகமற்ற காட்டேஜ். நிசப்தம். காற்று அள்ளிக்கொண்டு போயிற்று. பிரயாணப் பையைக் கட்டில் மீது போட்டதும் "ஸ்விம்மிங் போகலாம்." என்றாள்.

மாலை வெய்யிலில் கடல் மணல் தங்க நிறத்தில் ஜொலித்தது. 'மணலின் அழகை நீ ஆராதித்துக்கொண்டிரு. கடலின் அதிசயத்துள் நான் கலக்கப்போகிறேன்" என்பதைப் போல் அவள் நீந்தப்போனாள். இவன் மணலைக் கையில் அள்ளி காற்றில் பறக்கவிட்டான். நீச்சல் தெரியாது. கடல் வசப்பட வழியில்லை.

CONNEMARA PUBLIC LIBRARY 31 MAR 2004

தண்ணீர் துளிக் கூடத் தெறிக்காமல் லாவகமாக எந்திரப் படகைப்போல் நேர் கோட்டில் நீந்தினாள். வெகு தூரத்தில் எங்கோ மூழ்கி கரையில் எழுந்தாள். ஈரம் சொட்டச் சொட்ட இவனிடம் வந்தாள். அழகான பாத விரல்கள் முழுவதும் மணற்துகள்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. தோளில் கிடந்த தலை டவலை எடுத்து நீட்டினான். விகற்பம் எதுவுமின்றி வாங்கிக் கொண்டாள். அறைக்குத் திரும்பினார்கள்.

"அகண்டவெளி இங்கு வந்ததும் இருபதுக்குப் பதினைந்து அறையாகக் குறுகிவிட்டது" என்றான்.

"வெளிக்கும் அதற்கான எல்லை உண்டு. என்ன. கொஞ்சம் பெரிதாக இருக்கும் அவ்வளவுதான் சி. மணியின் அறை— வெளி படித்திருக்கிறீர்களா? தப்பி விட்டேன் என்று விழித்தேன். சுற்று முற்றும் பார்த்தேன். மேலே வானம்; நான்கு பக்கமும் பூவிருள். கூரை, சுவர்கள் எதுவும் இல்லை. எல்லாப் பக்கமும் வழிகள் தெரிந்தன. வெட்ட வெளிதான் இது அறை அல்ல என்று சில கணம் துள்ளியது என் மனம்.

மேற்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்.

தெற்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்.

வடக்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்.

கிழக்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்.

எழும்பிக் குதித்தேன். இடித்தது கூரை.

அவள் ஈடுபாட்டுடன் சொல்லி முடித்ததும் அதிர்ந்து போனான் அவன். இதயத்துடிப்பு வேகம் பிடித்தது. நரம்புகளில் புது ரத்தம் பாய்கிற உணர்வு ஏற்பட்டது. ஓடிப்போய் அவளை அப்படியே கட்டிக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

'சி. மணி படித்திருக்கிறாயா பெண்ணே! வார்த்தை மாறாமல் ஒப்பிக்கற அளவு ஞாபகம் வைத்துக் கொண்டிருக்-



கிறாயா எவ்வளவு பெரிய அவஸ்தை! இனி வாழ்க்கை உனக்கு சுலபமாக இருக்கப் போவதில்லை, போ!'

அவளை இமைக்காமல் பார்த்தான். அவள் எதுவும் பேசாமல் ஆடை மாற்றினாள். எந்த வித்தியாசமும் இன்றி தன் எதிரில் ஆடை மாற்றியதை நினைத்து வியந்தான். நனைந்து கிடந்த நீச்சல் உடையைக் கொத்தாக தூக்கிப் போய் குளியல் அறையில் போட்டு விட்டு வந்து அவனருகில் உட்கார்ந்து கொண்டாள்.

"நாம் பேச ஆரம்பிப்பதற்கு முன் சாப்பிட ஏதாவது ஆர்டர் பண்ணலாமா?"

"எனக்குக் கிங்ஃ பிஷர் பியர்.. உனக்கும் அதையே சொல்லிட்டுமா?"

"பியர் வேணாம். நான் ஸ்காட்ச் கொண்டு வந்திருக்கேன்."

பிரயாணப் பையைத் திறந்து பிளாக் லேபிள் எடுத்தான், தொலைபேசியில் ரூம் சர்வீஸ் கூப்பிட்டு சோடா, ஐஸ்க்யூப்ஸ், பிங்கர் சிப்ஸ் என ஆர்டர் பண்ணினான். பின்னர் அவனருகில் உட்கார்ந்து சன்னமாய் நேர்த்தியாய் விசிலடித்தான். விரல் முட்டியால் கதவு தட்டி பேரர் ஆர்டர் பண்ணியதெல்லாம் கொண்டு வந்தார். டம்ளர்களில் ஒன்றில் ஸ்மாலும் மற்றொன்றில் லார்ஜும் ஊற்றினான்.

"சோடா ஆர் வாட்டர்?"

"சோடா."

"ஐஸ்?"

"த்ரீ க்யூப்ஸ்."

அவனிடம் வார்ஜ் தந்து, தான் ஸ்மால் எடுத்துக் கொண்டாள். சியர்ஸ் சொல்லி ஒரு மிடறு விழுங்கினாள். அவனை ஒட்டி நகர்ந்து தோளில் கை போட்டு மறு தோளில் தலை சாய்த்தாள். அவன் அவளது இடுப்பு சுற்றி பின் மெது வாகச் சொன்னான்.

“எனக்கு உன்னைப் பார்த்தால் எரிகா ஆங்கின் Fear of Flying இஸடோரா ஞாபகம் வர்றது.”

“வந்திருக்க வேண்டுமே...உடனே அயன் நாண்டும், எரிகா ஆங்கும் வந்து விடுவார்களே துணைக்கு! எரிகா ஆங் செய்தது கிம்மிக். பணம், புகழ் இரண்டும் வேண்டிச் செய்தது. வெறும் ஷாக் வேல்யுவிற்காகச் செய்யப்பட்டது. 1920 களிலேயே மூார் பத்தேலின் Story of the Eye அதைச் செய்து விட்டது.”

“நான் அப்படி நினைக்கலை. முகத்தில் அறைந்தாற் போல் ஒரு பெண் தன் உணர்ச்சிகளை சொல்கிறாள். இது எரிகா ஆங்கின் சாதனைதானே?”

“ஒண்ணுமில்ல. நான் சொன்ன மூார் பத்தேலின் அந்த நாவலில் உள்ள excess eroticism என்பதை உங்கள் எரிகா ஆங் மலினப்படுத்தியுள்ளார்.”

தீர்மானமாகப் பேசினாள். ராஜாராமனுக்கு இப்போது தன்னை நிரூபித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

“இருக்கலாம். ஆனால் மூார் பத்தேல் ஒரு ஆண். எரிகா ஆங் ஒரு பெண்.”

“எழுத்து என்று வந்த பின் ஆணென்ன பெண்ணென்ன? இப்படி நீங்கள் பெண்களுக்குச் சலுகை காட்ட வேண்டிய தேவை இல்லை. அது உங்களுள் ஒளிந்திருக்கும் ஆணாதிக்க மனப்பான்மையைத்தான் காட்டுகிறது.”



யோசித்தான். உண்மையில் தான் ஒரு மேல் ஷாவனிஸ்ட் தான். அப்படி இருக்கத் தான் விரும்பவில்லை என்றாலும் அப்படித்தான் இருக்கிறோம். வளர்க்கப்பட்ட விதமும், சூழலும் அப்படி!

“சூழல்தான் மனிதனை உருவாக்குகிறது,” என்று விட்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, “வலிக்கிறது என்றாலும் உண்மை அதுதான். என்னை இந்தச் சூழல்தான் நிர்ணயிக்கிறது என்பது கோபத்தை அளிக்கிறது. மீற ஆசைப்பட்டாலும் முற்றிலும் உடைத்துக் கொண்டு வர முடிவதில்லை...” அவளது குரல் வருத்தத்தில் தோய்ந்திருந்தது.

“ஒன்றை உடைத்தால் இன்னொன்றை உருவாக்குகிறீர்கள் என்றுதான் அர்த்தம்.”

“இந்தத் தின்னை வேதாந்தமெல்லாம் வேண்டாமே...”

ராஜாராமனுக்குப் புரிந்தது. இந்தப் பதினெட்டு இருபது வயதின் இயல்பு அது. இன்னும் சில வருடங்கள் போனால் இவள் மாறிவிடுவாள். தானும்தன் இருபது வயதில் இப்படித் தான் இருந்தோம் என்பது நினைவிற்கு வந்தது. இந்தப் பன்னிரண்டு வருடங்களில் மாற்ற நினைத்து நிறைய மாறினானே தவிர அதிகம் எதையும் மாற்றிவிட முடியவில்லை.

“இன்றைக்கு நான்தான் பார்வுமன்” என்றபடி அடுத்த ரவுண்ட் ஊற்றினாள்.

“எனக்கு ஸ்டிஃப் டிரிங்க் ஒத்துக் கொள்ளாது” என்றபடி தனது கோப்பையில் சோடா அதிகமாகக் கலந்து கொண்டான்.

“எதனால் எனக்கு உங்ககிட்ட வந்து பேசணும்னு தோணித்து தெரியுமா? அன்று நீங்கள் அந்தக் காட்டைப்

படம் பிடித்த விதம், ரோஷமான் மாதிரி நீங்க அப்படியே காடாகக் காட்ட விரும்பியதைப் புரிந்துகொண்டேன்.''

சட்டென்று குரலில் அத்தனை நேரம் தொனித்த தீவிரத்திலிருந்து விடுபட்டவளாகச் சொன்னாள்.

''சொல்லுங்க ராஜாராமன். எனக்கு சினிமா பற்றி நிறைய சொல்லித்தாங்க.''

''உனக்கே நிறையத் தெரிஞ்சிருக்கே...''

''ம்கூம். அது போறாது.''

''எங்க பீல்டுல இருக்கிறவங்களுக்கு உன்னுடைய இந்த ஆர்வமும், வேகமும் இருந்திருந்தால் இத்தனை நேரம் இண்டஸ்ட்ரி எங்கோ போயிருக்கும்.''

''எனக்கு சினிமாவையும், இலக்கியத்தையும் கரைச்சுக் குடிச்சடணும்னு ஒரு ஆசை.''

''இரண்டும் ஒண்ணுக்கொண்ணு சம்பந்தப்பட்டது. பின்னிப் பிணைந்ததன்றது இங்கே யாருக்கும் தெரியற தில்லை.''

''அதான் சொல்லித் தாங்கன்றேன்.''

''என்னால் வகுப்பெல்லாம் எடுக்க முடியாது. பேச்சு வாக்கில் வர்றதுதான்.''

''அது போதும் எனக்கு. பிடிச்சுக்குவேன்.''

''கற்பூரம்.'' என்று செல்லமாகத் தலையில் தட்டினான். சிரித்துக் கொண்டே எழுந்து போய் ஜன்னல் திரைச் சீலையை விலக்கினாள். ஜன்னலைத் திறந்து பரவசத்தோடு பார்த்துக்கொண்டிருந்தவள் திடீரென்று கத்தினாள்.

''ராஜாராமன், இங்கே வாங்களேன்.''



எழுந்து சென்றான். வெளியில் இருளாக இருந்தது. தூரக்கடல் கறுப்பாகத் தெரிந்தது. அலைகளைச் சத்தத் தால் உணர முடிந்தது.

''என் பார்வையின் மூலம் இந்த அழகை அப்படியே உங்கள் கேமிராவில் கொண்டு வர முடியுமா ராஜாராமன்?''

''முடியும். ஆனால் இது போன்ற காட்சிகளைப் பார்வையாளனின் கோணத்திலேயே சொல்ல வேண்டும். நமது கோணத்தில் அல்ல. அழகுகளை அவர்களே உணர்ந்து ரசிக்க வேண்டும். நமது குறுக்கீடு கூடவே கூடாது.''

ஜன்னலை மூடி திரைச்சீலைகளை இழுத்து விட்டாள். ''வெளியே இருக்கும் இருட்டை உள்ளே விடாமல் இருக்க மிகவும் பிரயத்தனப்படத்தான் வேண்டி இருக்கிறது'' என்றாள்.

''அந்தப் பிரயத்தனத்திலேயே கழிந்து போய் விடுகிறது. சிலரது வாழ்க்கை.'' சொல்லும்போது ராஜாராமனுக்கு லேசாகத் தொண்டையை அடைத்தது.

ராஜாராமனுக்கு அவளை மிகவும் பிடித்திருந்தது. மரியாதை ஏற்பட்டது. அவளைப் பார்த்துக்கொண்டே சொன்னான்.

''இன்னும் இன்னும் பார்த்துக்கிட்டே போனால் கடைசியில் எல்லாம் அவன் செயல்ன்ற நிலையில்தான் போய் நிற்கிறோம்.''

''ஓ...! நீங்க தி. ஜானகிராமன் அதிகம் படிச்சிருக்கிற தாகச் சொன்னீங்க இல்லே...? கேட்டுவிட்டுக் குறும்பு தவழச் சிரித்தாள் அவள்.

## 8

புரியாமல் ஏறிட்டான் ராஜாராமன்.

"மன்னிக்கணும் ராஜாராமன். இதை என்னால் துளிக் கூட ஒப்புக் கொள்ள முடியாது. கடவுள் என்பது, மனிதன் தான் அதுவாக விரும்பி உருவாக்கிய புனைவு என்று சொன்ன நீட்ஷே இன்னும் மேலே போய் கடவுள் செத்தாகி விட்டது என்று அறிவித்தார். காம்யுதானே சொன்னது இந்த உலகம் அர்த்தமற்றதாக நோக்க மற்றதாக, கடவுள் அற்றதாக இருக்குன்னு." திவ்யா விளக்கும் குரலில் சொன்னாள்.

அவள் ஏன் திடீரென்று தி. ஜானகிராமனை இழுத்தாள் என்பது இப்போது புரிந்தது. அவனை அவள் வழியில் போய் மடக்க முடிவு செய்தான்.

"தோட்டத்து மூலிகை பச்சிலைக்கு ஆகுமா?" நக்கலாகக் கேட்டான். தொடர்ந்து நாடக பாணியில் "அடிப்பாவி நீட்ஷேயெல்லாம் கூடவா படித்திருக்கிறாய்." என்றான்.

அவனுக்குப் பெருமையாக இருந்தது. லேசாகப் பொறாமையும் வந்தது. தன்னுடைய நக்கலுக்கு இன்னும் அவளால் பதில் சொல்ல முடியவில்லை என்பதை நினைத்து சிரித்துக் கொண்டு அவளை இழுத்து உதட்டில் அழுத்தமாக முத்தமிட்டான். சகஜமாக ஏற்றுக் கொண்டாள்.

"மூலிகையா அல்லது கத்தாழையா என்பதைப் பொறுத்திருக்கிறது." என்றாள் திடீரென்று.

"கத்தாழையும் மூலிகைதான். விடாமற் சொன்னான் அவன்.

"தி. ஜாவுக்காக நீங்கள் சண்டை போடத் தயாரென்றால் நானும் தயார்தான்." அவனுக்கு இப்போது தன்னைக் காத்துக் கொள்வதா அல்லது தி. ஜானகிராமனைக் காப்பதா



என்று பெரிய குழப்பம் வந்துவிட்டது. தன் கையிலிருந்த டம்ளரை ஒரே மடக்கில் காலி செய்தான். அவளே அடுத்த ரவுண்டும் கலந்து தந்தாள்.

"காலத்தின் கையில் ஒப்படைத்து விட்டுப் பேசாமல் இருப்பதுதான் தீர்வு. நீயும் இதை ஏற்றுக் கொள்வாய் திவ்யா-இப்போது இல்லையென்றாலும் சில வருடங்கள் கழித்து."

அவள் மறுத்தாள். சிரித்தபடியே, "இது தி. ஜாவினால் வந்த பாதிப்பா?" என்றாள். இவன் விடாப்பிடியாக, "பாதிப்பு ஏற்படுத்தக் கூடியவை அவருடைய எழுத்துக்கள் என்பதை ஒப்புக்கொண்டால் சரி." என்றான்.

"அத்தோடு திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியது தான்." தன் கையிலிருந்த தங்கநிறத் திரவத்தை உறிஞ்சினாள். "குட் டிரிங்." என்று முணுமுணுத்தாள். ராஜாராமன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டே சொன்னான்.

"உன்னைப் போல் பெண்கள் இருப்பது எனக்கு ரொம்பப் பிடிக்கும்." சொன்னவுடன் ஏன் சொன்னோம் என்று நினைத்துக்கொண்டான்.

"உங்கள் வீட்டுப் பெண்கள் தவிர மற்றவர்கள் சுதந்திரமாக இருப்பது பிடிக்குமே..."

அவன் கையசைத்து ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவள் தடுத்தாள். "இல்லை. உங்களைக் காயப்படுத்தச் சொல்லப்பட்டதல்ல அது; பொதுவாகச் சொன்னது." "ஒன்று பட்டும், பிரிந்தும் செல்லும் அலைவரிசைகளைக் கொண்டிருக்கிறோம் நாம்!" அவள் ஆமோதித்தாள்! ஒன்று பட்டும் பிரிந்தும் செல்லும் அலைவரிசைகள்!... தன் காதுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொன்னவள், "வாவ்! யு ஆர் ரியலி கிரேட் ராஜாராமன்!" என்று எழும்பிக் குதித்தாள்.

ராஜாராமன் குழப்பமான மன நிலையில் அவளது பாராட்டை ஏற்றுக் கொண்டான். 'தான் சாதாரணமாக நினைத்துச் சொன்னது இவளில் இவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதா!' மனம் சந்தோஷத்தில் அமிழ்ந்தது. லேசான மிதக்கும் உணர்வு வந்தது.

"தமிழ் எழுத்தாளர்களில் யாரெல்லாம் பிடிக்கும்?". அவளை ஏறிட்டுக் கேட்டான்.

"கேட்டதற்கு மிகவும் சந்தோஷம் ராஜாராமன். You know. I have been longing for this kind of friend ship.

"நன்றி. நீ இன்னும் என் கேள்விக்குப் பதில் சொல்ல வில்லை." தன் கேள்வியில் அதிகாரத்தோரணை தொனிக் கிறதோ என்கிற சந்தேகம் ஏற்பட்டது அவனுக்கு. அதை அவள் புறக்கணித்தாள்.

"ம்...வண்ணதாசனின் சிறுகதைகள் அற்புதமானவை. நம் மனதில் அப்படியே ஒட்டிக் கொள்பவை. வண்ண நிலவனின் எல்லா எழுத்துக்களும் பிடிக்கும்—தேசம் மறப்ப தில்லை நெஞ்சம் தவிர. சுந்தர ராமசாமி ரொம்பப் பிடிக்கும். ஜே. ஜே. சில குறிப்புகள் இது வரை நாலஞ்சுதரம் படிச் சிருக்கேன். நகுலன் வித்தியாசமான எழுத்தாளர். அந்தக் காலத்து புதுமைப்பித்தன், மௌனி, கு. ப. ரா என்று தொடங்கி ஜி. நாகராஜன், அம்பை, இப்போது எழுதிக் கொண்டிருக்கும் ஜெயமோகன், சுரேஷ் குமார், இந்திரஜித், விமலாதித்தமாமல்லன்... என சொல்லிக் கொண்டே போகலாம். பெரிதாய் பட்டியல் நீளும். உங்களுக்கு இவர் களைப் பிடிக்குமா? படித்திருக்கிறீர்களா? கண்கள் விரியக் கேட்டாள்.

அவள் சொன்ன விதம் பற்றி யோசித்தான். இலக்கியம் பேசினால் எத்தனை சந்தோஷம் வருகிறது இவளுக்கு! தனக்குப் பிடித்த எழுத்தாளர்களைப் பற்றி சொல்கையில்;


குறிப்புதவி நூல்

அவர்களைப் பற்றின இரண்டு வார்த்தை விமரிசனமும் கூடவே ஒட்டிக் கொண்டு வந்திருக்கிறது. அந்த எழுத்தாளர் களின் சாராம்சமாகத் தான் எதை நினைத்தோமோ, அதையே அவளும் சிக்கெனப் பிடித்திருக்கிறாள். இவள் ஒரு நல்ல விமர்சகராக முடியும்.

"என்ன ராஜாராமன், உங்களுக்கும் இவர்களைப் பிடிக்குமா?"

"நீ சொன்ன இப்போது எழுதிக் கொண்டிருக்கிற எழுத்தாளர்களைத் தவிர அம்பை வரை அத்தனை பேரை யும் படித்திருக்கிறேன்—ஆனால் இப்போது இல்லை."

"படிப்பதை நிறுத்த முடியுமா ராஜாராமன்! படிக்காமல் இருக்க முடியுமா?"

"படிக்காமல் இல்லை. படிக்கிறேன். ஆனால் முந்தையத் தேடல் இல்லை. தேவைகளும், வாழ்க்கையும் துரத்துகின்றன. படித்தலில் கவனம் சிதறுகிறது. முனைப்பின்றி போய் விடுகிறது."

"அப்படிப் போக விடலாமா ராஜாராமன்?"

"கூடாதுதான். ஆனால், தீவிரமாகப் படித்தபோதுகூட நான் கவிதைகளில்தான் அதிகக் கவனம் செலுத்தினேன். ப்ரமீள், நகுலன், விக்ரமாதித்யன், ஆத்மாநாம், பிரம்ம ராஜன், கலாப்ரியா, கல்யாண்ஜீ என்று என் பட்டியலும் நீளமானது."

ஐயோ...அத்தனை பேரையும் படிச்சு நானும் உருகி யிருக்கேனே.. மனது அடித்துக் கொள்கிறதே....! நாம் முன்பே சந்தித்திருக்க வேண்டும்...." அவளது குழந்தைத் தனமான உற்சாகத்தைப் பார்த்ததும் அவனுக்கும் அது தொற்றிக்கொண்டது.

"ஆமாம். எரிகா ஆங்கைப் பற்றி சொன்னாயே.... உனக்குப் பிடித்த அம்பை என்னவாம்?"

"கல்யாண்ஜி கவிதைகள் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? எல்லாம் ஒரே மாதிரியான கவிதைகள்."

இரண்டு பேரும் ஒரே சமயத்தில் கேள்வி கேட்டதற்காகச் சிரித்தார்கள். முதலில் ராஜாராமனே பதில் சொன்னான்.

"கல்யாண்ஜி கவிதைகள் பாசாங்கற்றவை. உண்மையானவை. மனிதனை நெகிழச் செய்பவை. உனக்கு வண்ணதாசனின் சிறுகதைகள் பிடித்திருக்கிறது. ஏன் கவிதைகள் பிடிப்பதில்லை?" முழுக்க முழுக்க உணர்ச்சிபூர்வமான அறிவை ஒதுக்கிய கவிதைகளோ அவருடையவை என்று தோன்றும் எனக்கு. ஆனால், அவற்றின் பாசாங்கற்ற தன்மையை மறுக்கத்தான் முடியாது.

"முன்னிருக்கையில் யாரோ
முகம் தெரியவில்லை
தலையில் இருந்து
உதிர்ந்து கொண்டிருந்தது பூ
தாங்க முடியவில்லை."

கல்யாண்ஜியின் அந்த அற்புதமான கவிதையை அவள் சொல்லி முடித்ததும் அவன் "ஹய்யோ..." என்று அரற்றினான். தலையைப் பின்னுக்குத் தள்ளி நாற்காலியில் சாய்ந்தான்.

"இப்படி ஒரு கவிதை என்னால் எழுத முடிந்தால் அடுத்த நிமிடமே நான் சாகத் தயார்."

அவன் உணர்ச்சி வசப்பட்டதை அவள் ஆச்சரியத்துடன் பார்த்தான். உணர்ச்சி பூர்வமான கவிதைகளுக்குத்தான் மனிதர்களை நகர்த்தும் பண்பு இருக்கிறது. அறிவு பூர்வமான கவிதைகள் வெறும் மூளைப் பயிற்சிதான் என்பது அவளுக்கு லேசாக விளங்க ஆரம்பித்தது. நகுலனின் கவிதை படித்தால் முதலில் புரிந்துகொண்ட மகிழ்ச்சிதானே ஏற்படுகிறது?



மூளையைக் கசக்கிய பின்னரே புரியச் செய்கிறது. அவனால் தெளிவான முடிவுக்கு வர முடியவில்லை.

"ஏசியை அணைத்துவிடலாமா திவ்யா. ரொம்பக் குளிருகிறது."

"ஐயோ, அதைப் பற்றியெல்லாம் அப்புறம் கவனிக்கலாமே! பேசிக்கிட்டிருக்கும்போது ஏன் டைவர்ட் பண்றீங்க?" இவன் சிரித்துக் கொண்டே அவளது வலது கையெடுத்துத் தன் கையில் புதைத்துக் கொண்டான்." சரி, சரி சொல்லு" என்றான். கூடவே "அம்பை பற்றி கேட்டனே..." என்று ஞாபகப்படுத்தினான்.

சில வினாடிகள் மௌனமாக இருந்து பின் சொன்னாள்.

"எனக்குப் பிடித்த ஒரே பெண் எழுத்தாளர் இன்னும் சொல்லப் போனால் எனக்குப் பிடித்த என்ற வார்த்தைகளைக்கூட எடுத்துவிடலாம்."

"இப்படி நீ ஒரேயடியாக அடிச்சு சொல்றதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது."

"சரி, வேறு பெண் எழுத்தாளர்களைச் சொல்லுங்களேன் பார்க்கலாம்."

"கிருஷாங்கனி என்னவாம்?"

அவள் அந்தப் பெயரில் அடிபட்டாள். அவன் கிருத்திகாவைத்தான் சொல்வான் என்று எதிர்பார்த்தான். கிருஷாங்கனி! இவனிடம் சரக்கு இருக்கிறது. படிக்கவில்லை என்று சொன்னாலும் படித்துத்தான் இருக்கிறான்.

"கிருஷாங்கனியின் 'பூச்சி' சிறுகதை படித்திருக்கிறாயா?"

அவளது வாயைக் கட்டிப்போட்டது கேள்வி. அவன் தொடர்ந்தான்.

"என்ன திவ்யா பேசாமல் இருக்கிறாய்?"

"உங்களுக்கா இலக்கியம் தெரியாது!"

மீண்டும் டம்ளர் நிரப்பி எடுத்துக்கொண்டனர். உறிஞ்சியவாறு சொன்னாள்.

"புதுமைப்பித்தன் ஜீனியஸ் இல்லை."

அவனுக்கு அவளைச் சீண்டிப் பார்க்கிற ஆசை வந்தது.

"அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள்.

அதைக் காரியார்த்தமாக எடுத்துக்கொண்டு சண்டையில் இறங்கினாள்.

அப்பா! இலக்கியம் பற்றிப் பேசுகையில் இவளுக்கு எவ்வளவு ஆவேசம் வருகிறது! தான் கூட அப்படித்தானே இருந்தோம்! எவ்வளவு சண்டை போட்டிருக்கிறோம்! நண்பர்களுடன் டீக்கடைகளில் உட்கார்ந்து கொண்டு காது மடல்கள் சூடாக விவாதம் செய்தது நினைவுக்கு வந்தது. எவ்வளவு விஷயங்களை இப்போது இழந்து விட்டோம் என்று உணர்கையில் வருத்தமேற்பட்டது. முன்பு மாதிரி புத்தகங்கள் படிப்பதில்லை. இலக்கியக் கூட்டங்களுக்குப் போவதில்லை. சென்னை பிலிம் சொஸைட்டியின் அங்கத்தினரில்லை. திரைப்படக் கல்லூரி விட்டுவந்து ஒரு நல்ல படம் எடுக்கிற வெறியிலும், ஆவேசத்திலும் நாட்களைக் கடத்தி இந்த முப்பத்து மூன்று வயதில் தன் சாதனை என ஒன்றுமில்லாமல் நிற்பது குறித்து துக்கம் தொண்டையடைத்துக் கொண்டது.

ஒன்றும் பேசாமல் அவன் கண்மூடி இருப்பது கண்டு அவன் தோள் தட்டிக் கொடுத்தாள்.

"என்ன ராஜாராமன் பேசாமல் இருக்கீங்க?"

சட்டென்று கண்களைத் திறந்து சின்னதாகப் பெருமூச்சு விட்டான்.

"நீ என்னில் சில வருஷங்களைக் கழித்த மாதிரி இருக்கிறாய் திவ்யா."



"அப்படியா? நான் உங்களைச் சில வருடங்கள் குறைத்துக் கூட்டிக்கொண்டு வரப் போகிறேன்.

"முடியுமா உன்னால்?".

"நான் வெறும் ஊன்றுகோல் ராஜாராமன். ஊன்றி எழுந்து ஓடப் போகிறவர் நீங்கள். உங்கள் திறமையால் உலகத்தைப் பிரமிக்க வைக்கப் போகிறீர்கள். பெர்க்மென், ஃபெலினி, கோடார்ட் வரிசையில் நிற்கப் போகிறீர்கள்."

சொல்லிக் கொண்டே கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள் 5.50. எழுந்து போய் திரைச் சீலையைத் தள்ளிய போது இருள் விலகத் தொடங்கியிருந்தது. கடலைக் கிழித்துக் கொண்டு சிவப்புக் கோளமாகச் சூரியன் வெளியில் வந்து கொண்டிருந்தான்.

## 9

டிரைவ்-இன். வரிசையற்ற வரிசைகளில் கார்கள் நின்றிருந்தன. மனிதர்கள் கொத்துக் கொத்தாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வழக்கமாகத் தான் உட்காரும் இடத்தில் மிக நிம்மதியாக உட்கார்ந்து கொண்டான் ராஜாராமன். வாழ்ந்து சுழித்து விடலாம் என்ற நம்பிக்கை ஆழமாகத் தோன்றிவிட்டது. நல்ல காற்று. சுற்றிச் சூழ இதமான மனிதர்கள். ரவி, திவ்யா!

திவ்யா திவ்யா திவ்யா! திவ்யா திவ்யா திவ்யா!!

உற்சாகமாகக் காப்பி வரவழைத்தான். ஒரு முறை உறிஞ்சி 'குட்' என்றான். கோல்ட் பிளேக்கைப் பற்ற வைத்து ஆழமாகப் புகையிழுத்து, மெதுவாக வெளியில் விட்டான். புகை நரம்புகளில் பரவுவதை உணர்ந்தான். உலகம் சந்தோஷமயமானதாகத் தோன்றியது. ரவி வந்து

கொண்டிருந்தான். ஓடிப்போய் அவனைக் கட்டிப் பிடித்து முத்தமிட வேண்டும் போலிருந்தது.

"குட் ஈவினிங் சார்."

"குட் ஈவ்வினிங் ரவி."

அந்த அழுத்தமான உற்சாகம் ரவியை நிமிர்ந்து பார்க்க வைத்தது. எதிரில் உட்கார்ந்து கொண்டான். ரவிக்கு இது பழக்கமானதுதான். ராஜாராமன் ஒரு நிமிடம் சந்தோஷத்தின் உச்சத்தில் சஞ்சரிப்பான். ஏதாவது ஒன்று சின்னதாக நடந்து அதல பாதாளத்தில் விழுவான்.

"நான் இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா ஃபீல் பண்றேன், ரவி."

"நான் கூடச் சந்தோஷமா இருக்கேன் சார்."

"என்ன விஷயம் ரவி?"

"ஆலன் ரெனேயின் 'லாஸ்ட் இயர் அட் மெரியன்பாட்' பார்த்தேன்."

ரெனேயைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறான் ராஜாராமன். அவரது குவர்னிகா என்ற பிக்காஸோவின் நவீனப் படைப்பு பற்றிய படம் திரைப்படக் கல்லூரியில் காட்டினார்கள்.

"நான் அவரோட குவர்னிகா தவிர எதுவும் பார்த்ததில்லை. இது எப்படி இருக்கு ரவி?"

"அற்புதம் சார். ஆலன் ராப்கிரியே ஸ்க்ரீன் பிளே வசனம் எழுதியிருக்கார் சார்."

"அவர் பிரெஞ்ச் மாடர்ன் ரைட்டர் இல்ல ரவி?"

ஆலன் ராப் கிரியே. மனதிற்குள் குறித்துக் கொண்டான் இன்று மாலை சந்திக்கும்போது திவ்யாவிடம் கேட்க வேண்டும். அவள் நிச்சயம் படித்திருப்பாள். படிக்காதிருந்



தால், 'பார்த்தாயா, நீ படிக்காத ஒருவரை நான் படித்திருக்கிறேன்' என்று விளையாட்டாகக் காலர் தூக்கி விட்டுக் கொள்ளலாம்!

ரவி படம் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கொண்டே போனான்.

"காலத்திற்கும் நினைவிற்கும் நடுவில் ஏற்படும் குளறுபடிகளைப் படமாக்கியிருக்கார்னு புரிஞ்சுண்டேன். அகிரா குரோசாவாவின் ரோஷமான் மாதிரி உண்மையா பொய்யான்ற பிரமிப்பை உண்டாக்கிடறது. கடைசில உண்மைதான்னு நம்பிடறோம்.

இன்னொன்னு இதுல கதாபாத்திரங்களுக்குப் பேரே இல்ல. ஒற்றை எழுத்துதான்.

நிறுத்தி சிகரெட் ஒன்று எடுத்துக் கொண்டான் ராஜாராமனிடமிருந்து.

"முக்கியமா மூணு காரெக்டர்ஸ் சார். கதை நடப்பது முக்கியமான மூணு இடத்துல. படம் முழுசும் ஒரு இறுக்கமான தன்மை தொடர்ந்துண்டே இருக்கு. பின்னாலேயே ஒரு குரல் கிசுகிசுக்கறது. சில காட்சிகள் திரும்பத் திரும்ப வர்றது. கடந்த காலம் நிகழ்காலமா மாறும் மாஜிக்! பார்த்து முடிச்சதும் இந்தத் தரத்துல நாம் ஒரு படம் பண்ணணும்னு தோணித்து சார்."

அடிக்கடி ரவி சொல்லும் வசனம் இது. நல்லதாக எந்தப்படத்தைப் பார்த்தாலும் அந்த மாதிரி நாமும் ஒன்று செய்ய வேண்டும் என்பான். 'அதற்கு நாம் இங்கு பிறந்திருக்கக் கூடாது ரவி' என்று சொல்லத் தோன்றும். அடக்கிக் கொள்வான். ரவியின் வெள்ளை மனதை நினைத்து மனதிற்குள் சிரித்துக் கொண்டான். ரவி மனநுட்பம் உள்ளவன். கலையுணர்வு கொண்டவன். நல்ல ரசிகன்.

"படம் முழுக்கப் புரிஞ்சுடுத்துன்னு சொல்ல முடியாது சார். திரும்பப் பார்க்கிற சான்ஸ் கிடைச்சா இன்னும் நன்றாகப் புரியும் சார்."

"எதையுமே முழுசுமாகப் புரிஞ்சுக்க முடியாது ரவி."

சிறிது யோசித்து, "அதுவும் சரிதான் சார்." என்றான் ரவி.

திவ்யாவின் கார் உள்ளே வருவது தெரிந்தது. செல்ஃப் சர்வீஸ் கவுண்டருக்கு வெளியில் நிறுத்தி விட்டு வந்தாள். வெள்ளை நிறத்தில் சிவப்புப் பூக்கள் போட்ட புடவை. புடவையில் இன்னும் அழகாக அருகில் வந்ததும் ஹலோ என்றவாறு நாற்காலி நகர்த்திப் போட்டு உட்கார்ந்தாள். ராஜாராமனும், ரவியும் ஒரே நேரத்தில் ஹலோ சொன்னார்கள்.

"என்ன மிஸ்டர் ரவி எப்படியிருக்கீங்க?"

"ஐயம் ஃபைன். நீங்க எப்படி இருக்கீங்க?"

"ஏதோ உங்க தயவுல நல்லாயிருக்கேன்." என்று சிரித்தாள் அவள்.

அவள் மேஜை மீது வைத்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தான் ரவி. கேப்ரியல் கார்ஷியா மார்க்வெஸ்'ன் ஒன் ஹண்ட்ரட் இயர்ஸ் ஆஃப் சாலிட்யூட்.

"இவர் நோபல் பரிசு வாங்கியவர். மேஜிக்கில் ரியலிஸத்தின் ஆரம்பக் கர்த்தாக்களுள் முக்கியமானவர். நீங்க படிச்சிருக்கீங்களா ரவி?"

இல்லை எனத் தலையாட்டினான்.

"நீங்க ராஜாராமன்?"

அவனும் "இல்லை" என்றான்.

"படிக்கணும் ராஜாராமன். தயவு செய்து எனக்காகவாவது படிக்க ஆரம்பியுங்க. என்ன?"



ராஜாராமன் சரி எனத் தலையசைத்தான்.

"நான் முடிச்சிட்டுத்தரேன். நீங்க ரெண்டு பேரும் படிங்க. என்ன?"

பள்ளிக்கூட வாத்திச்சி மாதிரி சொன்னாள். இருவரும் மாணவர்களைப் போல் தலையாட்டினார்கள். ரவி மூன்று காபிகள் வரவழைத்தான். குடித்து முடிக்கிறவரை காத்திருந்து எழுந்து கொண்டான்.

"அப்போ நான் வரட்டுமா சார்? விடியோகாம்ல ஞானம் காத்துக்கிட்டிருக்கிறதா சொல்லியிருக்கான் சார்."

"நான் நாளைக்கு வரேன் ரவி. என்ன எடிட் பண்ணப் போறீங்க?"

"அந்த மலையாள சீரியல் சார்."

"சரி, நாளைக்குப் பார்க்கலாம்."

"குட் நைட் சார். குட் நைட் மேடம்."

"குட் நைட் ரவி." ராஜாராமன் திவ்யா இரண்டு பேரும் ஒன்றாகச் சொன்னார்கள்.

ரவி நடந்துபோய் மறைகிறவரை பேசாமலிருந்துவிட்டு மெல்ல அவன் முகத்தை ஏறிட்டாள்.

"காலைலேருந்து என்ன செய்தீங்க?"

"உன்னையே நினைச்சுண்டிருந்தேன்."

"என்ன இன்னிக்கு? சின்னப்பையன் மூடா...?"

சிரித்தான். "பீச்சுக்குப் போகலாமா திவ்யா?"

"ஏன், மகாபலிபுர ராத்திரி ஞாபகம் வந்துடுத்தா...?" என்றவாறு எழுந்தாள். "வாங்க. போகலாம்."

"படம் முழுக்கப் புரிஞ்சுடுத்துன்னு சொல்ல முடியாது சார். திரும்பப் பார்க்கிற சான்ஸ் கிடைச்சா இன்னும் நன்றாகப் புரியும் சார்."

"எதையுமே முழுசுமாகப் புரிஞ்சுக்க முடியாது ரவி."

சிறிது யோசித்து, "அதுவும் சரிதான் சார்." என்றான் ரவி.

திவ்யாவின் கார் உள்ளே வருவது தெரிந்தது. செல்ஃப் சர்வீஸ் கவுண்டருக்கு வெளியில் நிறுத்தி விட்டு வந்தாள். வெள்ளை நிறத்தில் சிவப்புப் பூக்கள் போட்ட புடவை. புடவையில் இன்னும் அழகாக அருகில் வந்ததும் ஹலோ என்றவாறு நாற்காலி நகர்த்திப் போட்டு உட்கார்ந்தாள். ராஜாராமனும், ரவியும் ஒரே நேரத்தில் ஹலோ சொன்னார்கள்.

"என்ன மிஸ்டர் ரவி எப்படியிருக்கீங்க?"

"ஐயம் ஃபைன். நீங்க எப்படி இருக்கீங்க?"

"ஏதோ உங்க தயவுல நல்லாயிருக்கேன்." என்று சிரித்தாள் அவள்.

அவள் மேஜை மீது வைத்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தான் ரவி. கேப்ரியல் கார்ஷியா மார்க்வெஸ்'ன் ஒன் ஹண்ட்ரட் இயர்ஸ் ஆஃப் சாலிட்யூட்.

"இவர் நோபல் பரிசு வாங்கியவர். மேஜிக்கல் ரியலிஸத்தின் ஆரம்பக் கர்த்தாக்களுள் முக்கியமானவர். நீங்க படிச்சிருக்கீங்களா ரவி?"

இல்லை எனத் தலையாட்டினான்.

"நீங்க ராஜாராமன்?"

அவனும் "இல்லை" என்றான்.

"படிக்கணும் ராஜாராமன். தயவு செய்து எனக்காகவாவது படிக்க ஆரம்பியுங்க. என்ன?"



ராஜாராமன் சரி எனத் தலையசைத்தான்.

"நான் முடிச்சிட்டுத்தரேன். நீங்க ரெண்டு பேரும் படிங்க. என்ன?"

பள்ளிக்கூட வாத்திச்சி மாதிரி சொன்னாள். இருவரும் மாணவர்களைப் போல் தலையாட்டினார்கள். ரவி மூன்று காபிகள் வரவழைத்தான். குடித்து முடிக்கிறவரை காத்திருந்து எழுந்து கொண்டான்.

"அப்போ நான் வரட்டுமா சார்? விடியோகாம்ல ஞானம் காத்துக்கிட்டிருக்கிறதா சொல்லியிருக்கான் சார்."

"நான் நாளைக்கு வரேன் ரவி. என்ன எடிட் பண்ணப் போறீங்க?"

"அந்த மலையாள சீரியல் சார்."

"சரி, நாளைக்குப் பார்க்கலாம்."

"குட் நைட் சார். குட் நைட் மேடம்."

"குட் நைட் ரவி." ராஜாராமன் திவ்யா இரண்டு பேரும் ஒன்றாகச் சொன்னார்கள்.

ரவி நடந்துபோய் மறைகிறவரை பேசாமலிருந்துவிட்டு மெல்ல அவன் முகத்தை ஏறிட்டாள்.

"காலைலேருந்து என்ன செய்தீங்க?"

"உன்னையே நினைச்சுண்டிருந்தேன்."

"என்ன இன்னிக்கு? சின்னப்பையன் மாதிரி...?"

சிரித்தான். "பீச்சுக்குப் போகலாமா திவ்யா?"

"ஏன், மகாபலிபுர ராத்திரி ஞாபகம் வந்துடுத்தா...?" என்றவாறு எழுந்தாள். "வாங்க. போகலாம்."

"தெரியாமல்னு சொல்றது சரியில்லைன்னு நினைக்கிறேன். தெரிஞ்சுக்க ஆசைப்படலை. தூண்டித்தருவ நேரமில்லாமலோ மனமில்லாமலோ விட்டுட்றோம். எல்லாத்துக்கும் காரணம் இருக்கும்."

"மீண்டும் ஜானகிராமன்தான் எட்டிப் பார்க்கிறார்." என்று சிரித்தாள்.

"சரி. இந்த நாலு நாளாக என்ன பண்ணினே...?"

"ம்... நிறையப்படிச்சேன். கொஞ்சம் தூங்கினேன். காலேஜுக்குப் போனேன். வழக்கம்போல் நாட்கள் கழிந்தன. நீங்க என்ன செய்தீங்க?"

"நானும் வழக்கம் போல்தான்."

"டிரைவ் இன் வாசமா?"

"வேற வழி?"

"என்ன படிச்சீங்க?"

"ஞாபகச்சிற்பம்."

"பிரம்மராஜனா...?"

"ம்..."

"நம்மை கூவி அழைத்தது
என்ன கடல்
கால் தடங்களைப் படம் பிடித்தது
என்ன கரை?
உன் மனதின் மையத்தில்
சுழன்றும் மறந்தும்
நினைந்தும்
ஆக்ரமிப்புச் செய்தது
என்ன சாகித்யம்!"

"அடிப்பாவி! இப்படி ஒரு ஞாபக சக்தியா!" அவள் கையெடுத்துத் தன் கைக்குள் இறுக்கிக்கொண்டான்.



உதட்டில் அழுத்தி முத்தமிட்டான். அவனுடன் இருக்கிற போது தான் ஒரு டீன் ஏஜ் பையன் போல் நடந்து கொள்கிறோம் என்று தோன்றியது. அதுவும் மகிழ்ச்சியாகவே இருந்தது. இவனோடு இருக்கையில் இளமையாகித்தான் போகிறோம்.

அந்த இடத்தை விட்டு எழுந்திருக்க மனமில்லை. அப்படியே இருந்துவிடலாம் போலிருந்தது. மனது அவளைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது. இது என்ன காதலா? அவளிடமே கேட்டுப் பார்க்கலாமா?

இது நிச்சயம் காதல்தான். இல்லாவிட்டால், அவனைப் பார்க்காது போனால் ஏன் பரபரப்படைய வேண்டும்? சொல்லத் தெரியாத ஏதோ ஒன்று மனதை அழுத்துகிறதே, ஏன்? அவனோடு இருக்கையில் பாதுகாப்பாகவும், சந்தோஷமாகவும் உணருகிறதே ஏன்? எல்லா ஏன்களுக்கும் அவனுக்கு ஒரே விடைதான் கிடைத்தது.

"கிளம்பலாமா ராஜாராமன்?"

"உடனே போகணுமா திவ்யா?"— அவளைப் பிரிய மனமில்லாததை வெளிப்படுத்தினான்.

"ஆமாம் ராஜாராமன். கொஞ்சம் வேலை இருக்கு.

"சரி". என்று எழுந்து கொண்டான்.

காரில் திரும்பிய போது கேட்டாள். "உங்களை டிரைவ்—இன்னிலேயே இறக்கிவிடவா ராஜாராமன்?"

"ஓ. கே."

டிரைவ்— இன்னில் இறங்கி மீண்டும் தன் இடத்திற்குப் போய் உட்கார்ந்து கொண்டபோது முற்றிலுமாய் அவன் மனதை திவ்யா ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாள்.

அவளும் தன்னைக் காதலிக்கிறாளா என்பது தெரியாமல் தவித்தான். அவள் பார்வை என்ன சொல்கிறதென்பதை

உறுதியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்றே வைத்துக் கொண்டாலும் அது நிலைக்குமா? அவள் நிச்சயம் வசதியானவள். தனக்கு முப்பத்து மூன்று வயதாகிறது. அவளுக்கு நிச்சயம் பத்தொன்பது இருபதுக்கு மேல் இருக்க முடியாது.

ஆனால் இதெல்லாம் ஒரு தடையா? வயது, வசதி போன்றவற்றையெல்லாம் ஒதுக்கிவிடத்தான் காதல் மனது சம்பந்தப்பட்ட விஷயம் என்கிறார்களோ...?'' அப்படி யானால் உடல் ரீதியான இச்சைகளே இல்லை என்று சொல்ல முடியுமா? காதலில், மனதிற்கும், உடலுக்குமான விகிதாச்சாரம் என்ன?

மனம் சிந்தித்துக்கொண்டே இருக்கத் தொலைபேசி, இருக்குமிடத்திற்கு வந்தான். சடாரென்று முடிவு செய்தான்.

''திவ்யா ராஜாராமன்.''

## 10

அதிகம் யோசிப்பதில்லை நான்
புறாக்கள் பறக்கும் காலம்
பெண்கள் குளிக்கும் காலம் கவிதை
எழுதும் காலம்
காலன் மறிக்கும் காலம்
சிவன் எழும் காலம்
காலசிவன் புதையும் காலம்

— காலசிவன்

''எல்லோருக்கும் பெயர்தான் முக்கியமாயிருக்கிறது' தங்களது படைப்புகள் அல்ல; தங்களது பெயர்தான் பிரதானம். அதிலிருந்து முழுக்க முழுக்க விடுபட்டவர்கள் என காஃப்காவைத்தான் சொல்ல முடியும். தனது பெயரே வரக் கூடாது என விரும்பினார். K என்ற முதல் எழுத்து மட்டும்



எழுதினார், கையெழுத்திட்டார். பெயர் சுருங்குவதில்தானே படைப்பு விரிவடையும்.''

படுக்கையில் புரண்டான் ராஜாராமன் விடிகாலை நேரம். மின்விசிறி வேகமாகச் சுற்றிக் கொண்டிருந்தது. தூக்கம் வர மறுத்தது.

கலை பற்றிய தன் பார்வைகள் கொஞ்சம் கொஞ்சமாக மாறுகிறதா? தனக்கும் தன் பெயர்தானே முக்கியமாக இருக்கிறது. 'ராஜாராமன்' என்று பெயர் சொல்கிற மாதிரி ஒரு படம் பண்ணவேண்டும் என்பது தானே ஆசையாக இருக்கிறது? வேண்டாம். பெயரெடுப்பதில் ஒன்றுமில்லை. நல்ல படம் பண்ணுவோம். அந்தப் படம்தான் ராஜாராமன். நான் என்பது என் படைப்புதான். அதற்கு மீறிய ராஜாராமன் இல்லை,

சினிமாவை எடுத்து முடிப்போம். ராஜாராமன் இருந்தாலும் கவலையில்லை. போனாலும் கவலையில்லை. அந்தப் படம் நின்றால் போதும். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்குமா? ஒரு படமாவது பண்ணுவோமா...?

எழுந்து உட்கார்ந்தான். சத்த மெழாமல் கதவைத் திறந்துகொண்டு பால்கனிக்கு வந்தான். கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கொண்டான். வானத்தை அண்ணாந்து பார்த்தான். லேசாக வெளுக்கத் தொடங்கியிருந்தது. ஒரு மரத்திலிருந்து காகம் முதல் குரல் கொடுத்தது. நட்சத்திரங்கள் மறையாமல் மினுங்கிக் கொண்டிருந்தன. சப்தரிஷி மண்டலம் தெரிகிறதா எனத் தேடிப் பார்த்து விட்டு சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான். அந்த இருளில் வெள்ளைப்புகை அடர்த்தியாகப் போகும் அழகைப் பார்த்தான். எல்லாவற்றிற்கும் பார்வை தானே முக்கியம் என முணுமுணுத்துக் கொண்டு பால்கனிச் சுவரின் கைப்பிடிச்சுவரில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

அந்த மோகனமான அழகில் யாராவது அருகில் இருந்தால் தேவலாம் போலிருந்தது. ஏற்ற தோழமை வேண்டும்,

தனது சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ள, ஒத்துப் போக முரண்பட, அழுத்தமாய் விவாதிக்க சரியான துணை வேண்டும். சட்டென்று திவ்யா ஞாபகம் வந்தது. 'இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள்...?'

இதுதான் செய்து கொண்டிருப்பாள் என்று அவளை யாரும் நிர்ணயித்துவிட முடியாது. அப்படிப்பட்ட கணிப்புக் களுக்கு அப்பாற்பட்டவள். தன்னை எந்தச் சதுரத்தி லும் நிறுத்திக் கொள்ளாதவள். அடைபட விரும் பாதவள்.

அவளுக்கு மட்டும் அது எப்படிச் சாத்தியமாகிறது என்று நினைத்து வியந்தான். தனக்குக் கிடைக்காத, தன்னால் அடைய முடியாத விடுதலையும், சுதந்திரமும் அவள் அடைந் திருப்பது குறித்து ஆழமாகப் பெருமூச்சு விட்டான்.

அவன் அறிமுகமான பின் இந்தப் பதினைந்து நாட் களாகத் தான் குடிக்கவில்லை என்பது நினைவிற்கு வந்தது. குடிக்க வேண்டுமெனத் தோன்றுவதுகூட இல்லை. ஒரு நாளின் பதினைந்து பதினாறு மணி நேரங்களை அவளுடன் பகிர்ந்து கொள்கிறான். அந்தப் பகிருதல் இனிமையாக இருக்கிறது. சுவாரஸ்யமானதாக இருக்கிறது. பந்தயத்தில் கலந்து கொள்வதைப் போன்ற ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. முன்னால் அனுபவித்த தனிமை, எதற்கும் உபயோகமில்லாது போய் விடுவோமோ என்கிற பயம், பாதுகாப்பற்ற உணர்வு எதுவும் அவளுடன் இருக்கிறபோது வருவதே இல்லை. தாயின் மடியில் கிடக்கிற குழந்தை மாதிரியான இதம் ஏற்படுகிறது.

தான் அனுபவிக்கிற இந்த உணர்வு புதிதானது. சந்தோஷம் புதிதானது. அனுபவம் புதுமையானது. வெறும் பெண் பற்றின அனுபவமில்லை இது. இன்னும் அதிகமாய்... வேறாய்... பெயர் சொல்ல முடியாததாய்... விவரிக்க இயலாததாய்...



இதற்கு என்ன பெயர்? இப்போது அவள் என்ன செய்து கொண்டிருப்பாள்....? நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப் பாள்...? வினாடி நேரத்தில் அவளருகில் போனான். தூக்கம் கலைக்காமல் காலெடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டான். மெல்ல வருடிக் கொடுத்தான். உள்ளங் காலைக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். உதடு குவித்துப் பெருவிரலில் முத்தமிட்ட போது சட்டென்று விழித்துக் கொண்டாள் திவ்யா.

"என்ன ராஜாராமன் இது...?"

"ஏதோ தோணித்து... ஒன்னுமில்லை..." சமாளிக்க முயன்றான்.

"கண்டதையும் நினைத்துக் கொண்டிருந்தால் கட்டு விடுவேன்..." என்று சிகரெட் பயமுறுத்தியது. சிரித்தபடி குண்டி எறிந்தான். நெருப்புப் பொறி பூமியைத் தொடும் முன் அணைந்தது.

'என்னவாயிற்று எனக்கு...? ஏன் இப்படியெல்லாம் நினைத்துக் கொள்கிறேன். போதை தலைக்கு ஏறியவனைப் போல் நடந்து கொள்கிறேன்.. ?'

போதை பற்றின எண்ணம் வந்ததும் குடிக்கிற ஆசை தோன்றிற்று. கூடவே வேண்டாமென்றும் சொல்லிக் கொண்டான். அப்படி தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டது மிகவும் வியப்புத் தந்தது. ரவிக்குத் தெரிந்தால் சந்தோஷப் படுவான்.

"தான் உங்களைக் குடிக்க வேணாம்னு சொல்லலை சார். அதைத் தேடிப் போக வேணாம்னு தான் சொல் றேன்..."

தயங்கித் தயங்கிச் சொல்வான். தன் மீது அதிக பட்ச அக்கறை. அதே சமயம் தவறாக எடுத்துக் கொண்டு விடுவேனோ என்கிற பயம்.

ம்...

சரி.

வேண்டாம்.

போதும்.

ஏன்?

என்ன?

இந்த ஒரு வார்த்தை பதில்களுக்கு மேல் ராஜாராமன் சொன்னதில்லை கேள்விகள் எதுவும் கேட்டதில்லை. வாய் விட்டுச் சிரித்ததில்லை. மனம்விட்டுப் பேசியதில்லை. சிரிப்பும் பேச்சும் அபூர்வமாகிப் போன முகம் அது. அதனால் அவனைக் கல்நெஞ்சக்காரன் என்று நினைத்துக் கொள் கிறார்கள். ஏன், அம்மாவேகூட நகைக்கிறாள்! தனக்கு மட்டும் ஏன் வார்த்தைகளே இல்லாமற்போனது...?

வார்த்தைகள்... வார்த்தைகள்... வார்த்தைகள்தானா...? பார்வை போதாதா? முகம் காட்டாதா? ஆனால் எல்லோருக் கும் புரியுமா? புரிந்து கொள்ள முடியுமா? தமிழ் சினிமாக்கள் மாதிரிதானா வாழ்க்கையும்...? இங்கு பார்வை புரியாது. அர்த்தப்படுத்திக்கொள்ள முடியாது. வார்த்தைகள்தான் முக்கியம்.

வார்த்தைகள்... வார்த்தைகள்....

இதற்கு மாறாகத் தான் என்ன செய்யப் போகிறோம்...? என்ன வைத்திருக்கிறோம்...? நாமும் கதைதானே சொல் கிறோம்...? கதையை விஷுவலாகச் சொல்கிறோம். அவ்வளவுதான் வித்தியாசம்.

தன்னுடையவை சிறுகதைகள்கூட இல்லை. கதைகள் தான் என்பது புரிந்தது.

''சமூகப் பிரச்சினைகள் சிறுகதையாகாது. அவை பற்றிய நம் பார்வைகள்தான் சிறுகதைகளாகும் என சுந்தரராமசாமி சொன்னதாகச் சொன்னாள் திவ்யா.



உண்மைதான்! தன்னுடைய கதைகள் சமூகப் பிரச்சினை களை அப்படியே சொல்கிறது. அதற்குத் தான் தேவையில்லை. ஒரு ஸ்டில் ஃபோட்டோகிராஃபர் போதும்!

அன்று சினிமாவுக்காக வாதாடினான் ராஜாராமன். ''உண்மையில் சிறுகதையும், கவிதையும், நாவலையும் தாண்டியது சினிமா; வாழ்க்கையின் சகல விச்சுக்களையும் சொல்லக் கூடியது'' என்றான்.

அதை மிக ஆணித்தரமாக மறுத்தாள் அவள்.

''உங்களுக்குத் தெரிந்த சிறு கதைகளையும், கவிதை களையும், நாவல்களையும் என்றுவேண்டுமானால் சொல்லுங் கள். இப்படி ஒட்டுமொத்தமாகச் சொல்லாதீர்கள். இலக்கியத் தின் விஸ்தீரணம் எதற்கும் வராது'' என்று வாதாடினாள்.

''மொழியின் எல்லைக்கு உட்பட்டதுதானே உங்கள் இலக்கியம்.'' என மறுபடி சீண்டினான் அவன்.

அதீத கோபத்தில் கத்தினாள் அவள். ''கிளிப்பிள்ளை போல் எல்லோரும் சொன்னதையே நீங்களும் சொல்லாதீர்கள் ராஜாராமன். சிந்தனை, மொழி உலகம் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுவிட்டது.''

அவள் சொன்ன கடைசிவரி அவனை நிறைய யோசிக்க வைத்தது. 'நாம் சிந்திக்கிற எந்த விஷயத்திற்கும் மொழி தானே தேவைப்படுகிறது. மொழி ரூபத்தில்தான் சிந்தனை வருகிறது. மொழியற்ற சிந்தனை என்பது எவ்வாறு சாத்தியப்படும்...?'

சிந்தனை - மட்டுமென்ன...? எனக்குத் தெரிந்ததை வைத்தே என் சிந்தனை அமைகிறது. என் சிந்தனையில் உள்ள உலகம்தான் எனக்குத் தெரிகிறது.

''ஸோ... நான் சொல்வதை ஒப்புக்கொள்ளுங்கள் ராஜாராமன்... மொழி என்பது கருவி, கன்றாவி என்பதை யெல்லாம் விட்டுவிடுங்கள், என்ன...?''

அவனை வெற்றிகொண்ட பெருமை அவளது குரலில் இருந்தது. எல்லா முறையும் அவனே வெற்றி பெறுகிற நிஜம் பிடிபட்டது. தான் தோற்றுப் போவதிலும் சந்தோஷம் ஏற்படுவது ஏன் என்பது புரியாததாக இருந்தது. 'அவளின் இலக்கிய, சினிமா அறிவில் தனக்கு மறைமுகமாக ஒரு பெருமை இருக்கிறதோ...?'

சிரித்துக் கொண்டே திரும்பியபோது சுள்ளென்று காலை வெய்யில் முகத்தைத் தாக்கிற்று. இத்தனை நேரமும் திவ்யா பற்றின நினைவில் கைப்பிடிச் சுவரின் மீதே உட்கார்ந்திருக்கிறோம். 'கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நேரத்தை திவ்யாவிற்காக ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரங்களும் அவளுடையவைதான்...

'ஏன் இப்படி...?'

'ஏம் ஐ இன் லவ் வித் திவ்யா...' இதே மாதிரி தன்னைப் பற்றியும் நினைக்கிறாளா அவள்...?

'இஸ் ஷி இன் லவ் வித் மீ...?'

மடமடவென்று கீழே இறங்கிவந்தான். அந்தக் கேள்விக்கான பதிலை உடனே தெரிந்துகொள்ள வேண்டும் போலிருந்தது. இல்லாவிட்டால் தலை வெடித்துவிடுமென அஞ்சினான். அவசரமாய் பல் தேய்த்து, முகம் கழுவித் தலை வாரிக் கொண்டான். அம்மா கொடுத்த காபியைக் குடித்து முடித்துக் கிளம்பினான். நடையில் காலில் செருப்பை நுழைத்துக் கொண்டபோது அம்மா கேட்டாள்.

"எங்கேடா போற...?"

'அந்தக் கேள்வி எரிச்சல் படுத்தியது. இதுபோன்ற கேள்விகள் இல்லாது இருக்க முடியாதோ...? கேள்விகள் கேட்க யாருமின்றி இருக்கிற திவ்யா. எத்தனை அதிர்ஷ்டசாலி...!'



"இதோ வந்துடறேம்மா..." வாய் தானாக பதில் சொல்லிற்று. சொல்லியிருக்கக்கூடாதென அப்புறம் நினைத்துக் கொண்டான். 'எல்லாம் தனக்கேன் அப்புறமே தோன்றுகின்றன?'

தெருக்கோடி பூத்திற்கு வந்து திவ்யாவுக்கு டெலிபோன் செய்தான்.

"திவ்யா... எனக்கு உன்னைப் பார்க்கணும். இப்போதே பார்க்கணும்."

"என்ன விஷயம் ராஜாராமன்?"

"நேர்ல சொல்றேன்."

"சரி. வாங்க."

## 11

"உடைந்து போன அலைகள் வேறு என்னவாகும்...? கடலுக்குள் சென்று மீண்டும் பெரிதாகிவரும்."

திவ்யாவின் நம்பிக்கை ராஜாராமனைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"என்ன பார்க்கிறீர்கள்...?" என்று அவன் தோளைத் தட்டிக் கொடுத்தாள் அவள். கூடவே "புரிகிறதா ராஜாராமன்!" என்றாள்.

"அலை<br>
நீரிலா<br>
காற்றிலா<br>
மனத்திலா<br>
கரை அடைந்தால் தெரியும்<br>
காணாமல் போகும்<br>
அலை

ஆனந்தின் கவிதை ஞாபகம் வர்றது ராஜாராமன்.''

''கரையைத் தொடாமல் அலைகள் போய் விடுவது மிகக் கொடுமையானது இல்லையா திவ்யா...?'' குரல் கரகரத்தது ராஜாராமனுக்கு.

''நிச்சயம் தொடும். தொடாமல் விடாது ராஜாராமன். ஹெமிங்வேயின் 'ஓல்ட் மான் அண்ட் தி ஸீ' யில் வரும் கிழவனைப் போல் விடாமல் தீவிரமாய் மீண்டும் மீண்டும் முயலும்; நாட்கணக்கில், ஆண்டுக்கணக்கில் கரையைத் தொடுவதுதான் அதன் லட்சியம். ஆதர்சம்.''

சற்று தூரத்தில் பெரிய அலை ஒன்று தவறான வீழ்ச்சியில் உடைந்து போயிற்று.

''பார்த்தாயா...அதுவும் உடைந்து போய்விட்டது.''

''அதனால் என்ன? மீண்டும் பெரிதாகி வரும்.''

''வந்தால் மட்டுமென்ன. மறுபடியும் உடையும்.''

''நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். இந்த அலைகளின் உடைசல் உங்களை ஏன் இந்த அளவுக்கு தொந்தரவு செய்கிறது ராஜாராமன்.?''

''கேள்விகள் வேண்டாமே ப்ளீஸ்... சில கேள்விகள் கேட்கப்படாமல் இருப்பதுதான் நல்லது திவ்யா.''

சட்டென்று எழுந்து கொண்டான்.

''போகலாமா திவ்யா...?''

அவனையே பார்த்தவளாய் அவளும் எழுந்து பின் தொடர்ந்தாள்.

ராஜாராமனுக்கு ஏன் என்று தெரியவில்லை... அலைகளின் பேரிரைச்சல் புரிந்ததேயில்லை. அலை என்பது அழகு மட்டுமில்லை எனத் தோன்றிற்று. வாழ்க்கை. நிதரிசனம்.



திடீரென்று கல்யாண்ஜியின் கவிதை ஒன்று நினைவிற்கு வந்தது.

ஊரின் எல்லையிலே
ஓயாத பேராறு
எல்லாத்தெருக்களிலும்
ஏகப்பட்ட புழுதி
நினைக்க ஆறு
நடக்க நடுத்தெரு.

கல்யாண்ஜியாலும் ஆற்றை நினைத்துக் கொள்ளத்தான் முடிகிறது. நடப்பதென்னவோ நடுத்தெருவில் தான். தனது மனம் அலைகளில் இருக்க, கால்கள் பல்லவன் ஃபுட்போர்டில் தொங்கிக் கொண்டிருக்கிறது. விதிக்கப்பட்டதை ஏற்கவும் முடியவில்லை. அலைகளும் ஒய்ந்தபாடில்லை!

ஆற்றுத் தண்ணீர் அவனைச் சலனப்படுத்தியதே இல்லை. சுழித்து ஓடும் காவிரிகூட ஓர் இடம்தான் அவனுக்கு. முழங்காலளவு தண்ணீர் தான் இருக்கிறதென நண்பன் வந்து புலம்பினதுகூட ராஜாராமனை பாதித்த தில்லை. நடுக்கடலில் பிரயாணப்பட முடியுமெனத் தோன்ற வில்லை. அவனைப் பொறுத்தவரை அலைகள்தான் கடல்! தூரத்தில் தெரியும் அலை கரையைத்தொடும் வரை பார்த் துக் கொண்டிருப்பதில் திருப்திஏற்பட்டது. அலையோடு வந்த தானும் கரைதொடும் திருப்தி! இப்படிப்பட்ட ஆர்பாட்டமும், புரளலுமின்றி அவனால் தண்ணீரைப் பார்க்கமுடிந்ததில்லை. பார்க்கப் பரிதாபம் ஏற்படும். பாவமாக இருக்கும்.

தான் கிணற்று நீரா அல்லது அலையா என்ற கேள்வி எழுந்தது. அலை என்றால் எந்த அலை? தொலைக்காட்சிப் பெட்டியை ஆன் செய்தால் வரும் அலைகளிலிருந்து ஆளைப் புரட்டிப் போடும் அலைகள் வரை எத்தனை அலைகளைச் சந்தித்திருக்கிறான்! சின்னச் சின்னதாய் இந்த முப்பத் திரண்டு வயதிற்குள் எத்தனை அலைகள் வந்து போயிருக்

கின்றன. எதுவும் அவனைப் பொறுத்தவரை கரையைத் தொட்டதில்லை. திவ்யாபேரலை! கரையைத் தொடுவாளா... மாட்டாளா...?

தெரியாமலே நடந்தான். அலைகளைப் பின்னால் தள்ளிவிட்டு காரை நோக்கி நடப்பதில் சின்ன வருத்த மேற்பட்டது.

"எனது கனவில் அடிக்கடி அலைகள் வருகின்றன திவ்யா. சில அலைகள் அடித்துக்கொண்டு போகின்றன. சில அலைகள் ஏந்திக் கொண்டு செல்கின்றன." காரக் கதவைத் திறக்கும் போது சொன்னான். இதில் நீ எந்த அலை திவ்யா...?" மனதிற்குள் கேட்டுக் கொண்டான்.

"உங்களை எது கஷ்டப்படுத்துகிறது ராஜாராமன்? வாழ்ந்து தீரவேண்டிய நிர்ப்பந்தமா?"

"எது என்று தெரியவில்லை. தெரியாதது தான் இதில் மிகப் பெரிய சிக்கல்."

"சில விஷயங்கள் தெரிந்து போய் விடுவதும் சிக்கல் தான் ராஜாராமன்."

"அதுவும் சரிதான்." என்றவனது மனம் மறுபடி மறுபடி அலைகளுக்கே சென்று கொண்டிருந்தது.

கடற்கரை அவனுக்கு மிகமிகப் பிடித்தமான இடம். ஹோவென்று பெரிதாகக் கிளம்பும் அலை கண்ணில் பட்ட வுடன் ஜில்லென்றிருக்கும். தன் கால்களை நனைத்துக் கொண்டு போய் கரைதொட முயலுவதை முகம் மட்டும் திரும்பிப் பார்ப்பான். வேகமாகத் திரும்பி வழியும் அலைகள் காலடியில் மண்ணை இழுத்துக் கொண்டு போகும்.

அந்தச் சந்தோஷமான அலைக் கணங்கள் தன் பனி ரெண்டு பதிமூன்று வயதோடு போய் விட்டது வருத்தமா



யிருந்தது. குழந்தைத் தனமான சந்தோஷங்கள் குழந்தை களுக்கு மட்டும்தான் கிடைக்கும் போலும்.

'அலை என்பது அதனுடன் சேர்ந்த நுரைகளும், சந்தோஷமும், துக்கமும் கூடத்தான்.' வியந்து கொண்டான். 'அலைகளைச் சொல்லிப் பிரயோசனமில்லை; கடல் இருக்கும் வரை' என்று எழுதிய கவியின் மேல் கோபப்பட்டான்.

யோசித்துப் பார்த்தால் எல்லா அலைகளும் ஒன்று போலவா இருக்கின்றன...? கோபம் கொண்டு முறைத்துப் போகிறது ஒன்று. தாபம் கொண்டு நெருங்கி வருகிறது ஒன்று. ஒட்டிக்கொண்டு உருக்குகிறது ஒன்று. மாறுவேஷ மிட்டு உள்ளே நுழைகிறது ஒன்று. அப்பாவி போல் இருந்தும் ரௌத்திரம் காட்டுகிறது வேறொன்று. மௌன மாய் இருந்து வெடிக்கக் காத்திருக்கிறது பிறிதொன்று. என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கிறது வேறொன்று.

முகத்தின் எதிரே வலது கையின் ஐந்து விரல்களையும் விரித்துப் பார்த்தான். மூடினான். கை. திவ்யாவின் கையை எடுத்துத் தன் கையோடு ஒட்டி வைத்தான். திருப்தம் மனதைத் தாக்கியது. முகம் சுணுங்கிற்று.

"இரண்டு மூன்று வெவ்வேறு பரிமாணமுள்ள அலைகள் சேர்ந்து ஒரு பேரலையாகலாம்."

"மூன்றா...?"

"சரி. இரண்டு."

'என்னிடமும் பலவிதப் பரிமாண அலைகள் உண்டு. உனக்குள்ளும் பலவிதப் பரிமாண அலைகள் மோதிக்கொள் கின்றன; உடைகின்றன. இன்னமும் ஓர் உருவை அடைய வில்லை. அடையுமா திவ்யா...? அடையவேண்டும்?

ஒன்றும் விளங்கவில்லை. இரு வேறு திசைகளில் பிரயாணம் செய்தபடி ஒன்றை இன்னொன்று தேடிக் கொண்டிருக்கிறது. சத்தத்துடன் வருகிறது பேரலை. அலைகள் வருது வருது. அஸ்திவாரமே தப்பு. புதுமைப் பித்தன் காலடியில் பூமி மணல் அரித்து தூக்கி எறியப்பட்டு திவ்யா திவ்யா...தாங்கிப் போய் சிறு அலைகள் உடைந்து உடைந்து கரை கண்ணுக்குத் தெரில....

மறுபடியும் தூக்கி எறியப்பட்டான் ராஜாராமன்.

தலை சுற்ற திவ்யாவின் தோள் மீது சரிந்தான். கண்கள் இருண்டன. சிறுசிறு மஞ்சள் வட்டங்கள் நீந்தத் தொடங்கின மஞ்சளா, அல்லது மஞ்சள் கருப்பா...? இல்லை, மஞ்சள்-வெள்ளை-கருப்பா...? நிறங்கள் மாறிக்கொண்டே இருந்தன.

ஆதாரமான நிறங்கள் மட்டும் நிரந்தரமாகிப் போனது. வட்டங்கள் அழிந்து அலைகள். மஞ்சள் அலைகள்!

சுதாரித்துக் கொண்டு தலை நிமிர்ந்தான். உதறிவிட்டுக் கொண்டான். 'என்ன ஆயிற்று எனக்கு...? ஒவ்வொரு அலையாக வெடித்துக் கொண்டு வெளியில் வருகிறதா...? என்ன வந்தது இந்த நாளுக்கு...?

மறுபடியும் தான் கரையில் இருப்பதை உணர்ந்தான். எப்போது காரிலிருந்து இறங்கினோம்...? இப்போது எங்கு இருக்கிறோம்...? மூளையைக் கசக்கியும் பிடிபடவில்லை. 'அலைகள் ஏன் இப்படி என்னை ஈர்க்கின்றன? ஆகர்ஷிக்கின்றன...?

இரண்டு மூன்று சிறுவர்கள் சேர்ந்து ரப்பர் பந்துகளைக் கடலில் வீசினார்கள். அப்பந்துகளை அலைகள் மறுபடியும் கரைக்குத் தள்ளின. சற்றுத் தள்ளிக் கரைசேர்ந்த பந்துகளைச் சிறுவர்கள் ஓவென்ற கூச்சலுடன் சென்று மறுபடியும் வீசினார்கள். பந்துகளை வாங்க மறுத்து மீண்டும் மீண்டும் கரைதள்ளின அலைகள், சிறுவர்கள் கை கொட்டிச் சிரித்தார்கள்.



'அந்தச் சிறுவர்களின் மனநிலையில் இருந்தால் தானும் கை கொட்டலாம். 'ஹைய்யா....' என்று குதிக்கலாம். ஆனால் தாண்டி வந்தாயிற்று. சங்கடப்படுத்துகிறது இப்போது ஒன்று அந்தச் சிறுவர்கள் போல் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் குறைந்தபட்சம் பந்துகளைப் போல் அல்லாமலாவது ஆகிவிட வேண்டும். இரண்டுமற்று இது என்ன சங்கடம்...!

கூடாது. பிடிப்போடு நிற்கவேண்டும். அழுந்தக் காலூன்ற வேண்டும். அலைகளை எதிர்த்துப் போராட வேண்டும். கனமில்லா விட்டால் பந்துபோல் ஒதுக்கிவிடும். அலைகளுடன் ஒன்று சேர அலைகளை எதிர்த்து ஜெயிக்க வேண்டும். காலடியில் நழுவும் மணல் துகள்களுக்குப் பயப்படக்கூடாது. அரித்துப் போவது மணல்தானே தவிர பூமி அல்ல. திடப்பட வேண்டும்.

மறுபடியும் தெளிவு பெற்றவனாக திவ்யாவின் கையை எடுத்துத் தன் கையோடு ஒட்டி வைத்துப் பார்த்தான்... இப்போது இரு வெவ்வேறு நிறங்கள் ஒன்று சேர்ந்து புதுக் கலவையில் அழகு பெற்றன. நிமிர்ந்தான்.

"என்ன காம்பினேஷன்!"

"ம்..." மகிழ்ச்சியாகத் தலையாட்டினாள்.

"இது போதும் திவ்யா...மனமாரக் கூறினான்.

சடாரென்று எதிர்த்திசையில் திரும்பிய அவள் "போதுமா?" என்றாள். அதிர்ந்தான். 'போதுமா...?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். இரண்டு அலைகள் எதிரெதிர் திசையில் வந்து மோதின. ஏழடி உயரத்திற்கு எழும்பித் தணிந்தன.

"இன்னும் இன்னும்னு தேடிண்டே இருக்கணும் ராஜாராமன். போறும்னு நின்னுடக்கூடாது. பிரமிப்பிற்கும் அசமஞ்சத்திற்கும் இடையில் நூலிழை வேறுபாடுகள்தான் ராஜாராமன்."

"தொட முயல முயல தூரப் போய்க்கொண்டே இருக்கிறது நான் அடைய வேண்டிய இலக்கு. இது வருத்தமா அல்லது சந்தோஷமா, தெரியவில்லை."

"எதுவானாலும் அதுதான் உங்கள் ஊக்கசக்தி. இல்லையா ராஜாராமன்...?"

கரை தொடாது என்று பட்ட ஓர் அலையை இன்னொரு அலை வந்து இழுத்து கரைசேர்க்க முயன்றது.

"சில அலைகள் அணைத்துப் போகின்றன. சில மோதி இடிக்கின்றன. எல்லாச் சமயங்களிலும் பக்கவாட்டில்தான் வருகின்றன சக அசைகள். என்ன செய்யப் போகின்றன என்பதே தெரியவில்லை."

"அந்த எதிர் பார்ப்பில்தான் அதன் ஜீவன் இருக்கிறது."

"ஒன்று பார்த்தாயா திவ்யா. கடலில் எந்த மனிதர்களும் ஒருவரையொருவர் பகைத்துக் கொள்வதில்லை."

"தங்களின் பாதுகாப்பு கருதித்தான்."

"நெருக்கடி நேரத்தில் எப்படி இருந்தாலும் ஒற்றுமை வந்துவிடும்.

"அதன் பெயர் ஒற்றுமையா, தேவையா...?"

அவன் யோசித்தான். அதுவும் சரி எனப்பட்டது. ஈர மணலில் கால் புதைய நின்றான். மீண்டும் கடற்கரைக்குத் திரும்பியதில் சந்தோஷப் பட்டான். திவ்யாவை அருகில் இழுத்து கை கோர்த்துக் கொண்டான். "அலைகளுடன் மோதலாமா திவ்யா....?"

"எந்த அலையுடன்?" சடாரென்று கேட்டாள்.

இதுதான் பிரச்சினை. எந்த அலையை எதிர்ப்பது. எதனுடன் ஒத்துப் போவது...? விழிப்பாய் இருக்க வேண்டி



யிருக்கிறது. நான்கு புறமும் உஷாராகப் பார்க்க வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் திடீரென்று பின்புறம் வரும் அலையொன்று கோழைத்தனமாய் புரட்டிப் போட்டுவிட்டு வந்த மாதிரியே போய்விடும். மண்கல்வி நிமிர்வதற்குள் அது திரும்பிப் போவதைத்தான் பார்க்க முடியும்.

"எந்த அலையுடன் போராடுவது என்பதுதான் எனக்கும் தெரியவில்லை. அதனால்தான் துணையை நாடுகிறேன்."

"எந்தத் தனி மனிதனுக்கும் அது சாத்தியமில்லையென்றே தோன்றுகிறது. அதனால்தான் துணை தேடுகிறது மனம். சில அலைகள் வஞ்சகமானவை."

சடாரென்று அவள் கையைத் தன் கைக்குள் இறுக்கிக் கொண்டே சொன்னான்.

"நீ என்னுடன் இருந்தால் சில தேவையற்ற அலைகள் என்னை நெருங்காது திவ்யா. என் பணிகள் செய்ய விட்டுப் போகும்."

"உங்கள் பணி என்பது என்ன ராஜாராமன்...? சினிமாதான் உங்கள் பணி, மொழி, வேதம், துணை எல்லாம். ஏன் தேவையில்லாமல் வேறு ஏதோ"

"வேண்டாம். வேண்டாம். சொல்லாதே நான் நானாகக் காட்டுகிறேன்."

"தட்ஸ் குட். நிஜமான சந்தோஷம் எனக்கு இப்போது தான்."

"ஆனால் நீ என்னுடன் இருக்க வேண்டும்"

அது வேண்டுகோளா, கட்டளையா என்பது தெரியாமல் சிரித்தாள். அவன். 'அலைகள் நின்று போனதாகச் சரித்திரமில்லை. அது போலத்தான் உறவுகளும், உடையும்; ஒன்று சேரும்; பிரம்மாண்டமாகப் புறப்பட்டுக் காணாமற் போகும்.?"

நினைத்துக் கொண்டான் அவன்.

## 12

ரீஜாராமன். வீட்டிற்கு வந்த போது மணி பதினொன்று. வீட்டில் அலை அடித்து ஓய்ந்த அமைதி தெரிந்தது. அப்பா அறையில் நாற்காலி போட்டு உட்கார்ந்திருந்தார். வயதான மிருகம் தன் இறைச்சிக்காககாத்திருப்பது போன்ற முகத்தோடு காத்திருந்தார். இவன் அவரைக் கவனிக்காதவன் போல். உள்ளே நுழைந்தான். தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த இந்தி நிகழ்ச்சி நிறுத்தப் பட்டது. பாயத் தயாரானவர் போல் அவன் பக்கம் திரும்பினார் அப்பா.

"என்னடா நினைச்சுண்டிருக்க... கண்ட நேரத்துக்கு வந்து போக இது வீடா இல்லே சத்திரமா...?"

வழக்கமாக இப்படிப் பேசாதவர். இன்று பேசுகிறார். வீட்டில் ஏதோ நடந்திருக்கிறது. ஆனாலும் அதற்கு பதில் சொல்ல வேண்டியது தன் வேலையில்லை. அமைதியாக லுங்கிக்கு மாறினான். சட்டையைக் கழற்றி கதவிற்குப் பின்னால் மாட்டிவிட்டு பனியனோடு வெளியில் வந்தான்.

"ஒண்ணுமில்லைன்னாலும் இந்தக் திமிருக்கு குறைச்ச வில்லை. அவனையும், அவன் லுங்கியையும் பாரேன்..."

அவனைக் குத்திக் காயப்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடு வருகின்ற வார்த்தைகள். ராஜாராமன் சிரித்துக்கொண்டான். என்ன வயது! இத்தனை சிறுபிள்ளைத் தனமாகவா இருப்பார்கள்! உதட்டோரம்[ஓடிய புன்னகையை அடக்கியபடி கேட்டான்.

"என்னப்பா விஷயம்?" ஒரு வினாடி இவனைக் கண்கள் இடுங்கப் பார்த்நார். கிண்டல் செய்கிறானா...? அம்மா சமையலறைக் கதவில் சாய்ந்து நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.



"இந்த மாதிரி உன் இஷ்டத்துக்கு வீட்டுக்கு வந்தால் என்ன அர்த்தம்...?'

'இது மாதிரி எழுதினா இதுக்கு என்ன அர்த்தம்...?'

'இத பாருங்க ராஜாராமன் அர்த்தம் தர்றதுக்குக் கதை ஒண்ணும் டிக்ஷ்னரி இல்லை.'

அதை நினைத்து சிரிப்பு வந்தது. சிரித்தக் கொண்டான்'

அப்பா இன்னும் கோபப்பட்டார்.

"என்ன சிரிக்கறே ...? என்னப் பார்த்தா பைத்தியக்காரன் மாதிரியா தெரியறது ...?"

"என்னப்பா இது...? நான் இருக்கிற சினிமா ஃபீல்டுல இதெல்லாம் சகஜம். இது உங்களுக்கே தெரியும். ஏம்பா அனாவஸ்யமா சத்தம் போடறீங்க?"

'இன்றைக்கு இவனை விடுவதில்லை' என அவருக்குள் தீர்மானம் செய்திருக்க வேண்டும்.

"என்னடா சினிமா ஃபீல்டு? என்னமோ இது வரை ஐம்பது அறுபது படம் டைரக்ட் பண்ணிக் கிழிச்ச மாதிரி பேசற...?"

அம்பு சரியான இடம் தாக்கிற்று. ராஜாராமன் பேச வில்லை. நிஜம்தான் ஆனாலும் வலித்தது. அதற்குள் அம்மா குறுக்கிட்டாள்.

"எதுக்கு ராத்திரி பதினோரு மணிக்கு இதெல்லாம் ஆரம்பிக்கறேள். அவன் வந்து சாப்பிட்டுப் படுக்கட்டும். அப்பா பாய்ச்சலை அவள் மீது திசை திருப்பினார்.

"உனக்கென்னடி தெரியும். அவன் நடத்தையெல்லாம்...? பீச், டிரைவின், மகாபலிபுரம்னு சதாசர்வகாலமும் ஒரு ஜீன்ஸ் பாண்ட்டுக்காரியோட சுத்திண்டிருக்கானாம். பார்க்கறவா வந்து சொல்றா... மானம்போறதுடீ..."

அம்மா அதிர்ச்சியாக அவனைப் பார்த்தாள்.

'இதெல்லாம் கூட உனக்கு உண்டாடா ராஜாராமா...?'

'உண்மையா பொய்யான்னு உன் பையனையே கேளு... கேட்டால் இதெல்லாமும் சினிமா ஃபீல்டுல சகஜம்னு சொல்லிடப் போறான்."

"என்னடா ராஜாராமா?"

பேசாதிருந்தான்.

"பதில் சொல்றானாபாரு. தேவகி பொண்ணு இவனுக்காகவே காத்திண்டிருக்கு. 'வயசாறதேண்ணா எப்பண்ணா கல்யாணம்னு?' அவ என்னை நச்சரிக்கறா. உன் பையன் என்னடான்னால் சினிமா பண்றேன் பேர்வழின்னு ஏதோ ஒரு ஜீன்ஸ் பாண்ட்டுக்காரி பின்னால் சுத்திண்டிருக்கான்..."

அதற்கும் பதில் சொல்லவில்லை ராஜாராமன்."

"வீட்டுக்கு மூத்த பையன். நம் தலையெழுத்து சினிமா. டிராமான்னு அலைஞ்சுண்டிருக்கான். பொடி, பீடி, குடி, குட்டி ஒண்ணு பாக்கியில்லை. மாசம் பொறந்தா டாண்ணு கைல சம்பளம் வருதான்னால் அதுவுமில்லை. நான் பண்ணின பாவம். ரெகச்சாரம். வேற எதுவும் சொல்றதுக்கில்லை..."

கோபமாய், ஆத்திரமாய் ஆரம்பித்த அப்பா கடைசியில் இறங்கி வந்து அழுகிற குரலில் சொன்னது இவனுக்கு என்னவோ போலிருந்தது.

இரையைத் தப்பவிட்ட கிழட்டுமிருகத்தின் பரிதாபம் ஏற்பட்டது. வயதானால் இந்த இயலாமை வந்துவிடுமோ...? அவரையே பார்த்தபடி பேசாதிருக்க அவர் தொடர்ந்தார். இப்போது குரல் கெஞ்சத் தொடங்கியது.

"இதப் பாருடா ராஜாராமா. நீ இருக்கலாம்டா. எத்தனை வயசு வேணும்னாலும் கல்யாணமில்லாமல் நிற்கலாம். ஆம்பிளைப் பையன். ஆனால் அந்தப் பொண்ணு



கௌரியால் அப்படி இருக்க முடியாதுடா... இன்னிக்குக்கூட தேவகி வந்து அழுதிட்டுப்போறாடா... 'இருபத்தைஞ்சு வயசாறது. பொண்ணுக்கு ஏன் கல்யாணம் பண்ணலைன்னு' எல்லாரும் கேட்கறாளாம். கைல மாப்பிள்ளையை வச்சுண்டு இப்படியாண்ணா பேசாமல் இருப்பான்னு கண்ணீர் விடறா... நீ சினிமா எடு; எடுக்காமல் போ; ஆனால் முதல்ல இந்தக் கல்யாணம் நடக்கணும். இதுக்குமேல் அந்தப் பொண்ணைக் காக்க வைக்கிறது தப்புடா."

ராஜாராமனுக்கு கோபம் வந்தது. சுறுசுறுவென்று முகத்தில் சிவப்பு ஏறிற்று.

'நான் அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னேனா காத்துக்கிட்டிருக்கிறதுக்கு...?' என்று கேட்க நினைத்து அடக்கிக் கொண்டான்.

அப்பாவைப் பார்த்தபோது பரிதாப உணர்ச்சி அதிகமாயிற்று. அவரால் அப்படித்தான் நினைக்க முடியும் என்று தோன்றிற்று. அவர் நிலைமைக்கு அதுதான் சாத்தியம். அதனால் அவர்மீது கோபப்பட்டு பிரயோசனமில்லை. அவர் புரிந்து கொள்ளமாட்டார். அனாவஸ்யமாகக் கோபமும் ஆத்திரமும் படுவார். வேண்டாம். வாயை மூடிக் கொண்டிருப்பது நல்லது அந்த இடத்தை விட்டுப் போய்விடுவது இன்னமும் நல்லது. உத்தமம்.

உள்ளே வந்தான். மூலையில் சுருட்டி வைத்திருந்த தன் பாயை உதறிப் போட்டுக் கொண்டபோது பின்னாலேயே வந்த அம்மா கூப்பிட்டாள்.

"சாப்பிட வாடா."

"இல்லம்மா வேணாம்."

"வெளில சாப்பிட்டுட்டியா?"

"ஆமாம்மா."

தயங்கித் தயங்கி மெல்லச் சொன்னாள் அம்மா என்கிற உணர்வோடு அங்கேயே தரையில் படுத்தான்.

கைகளைத் தலைக்கடியில் மடித்துத் தலைகாணியாக வைத்துக்கொண்டான். வானத்து நட்சத்திரங்களில் பார்வையை அலையவிட்டான். 'எங்கே என் ஒற்றை நட்சத்திரம் என்று தேடத்துவங்கி ஒவ்வொன்றாகத் தேடி ஓய்ந்து பின்னர் அப்படியே தூங்கிப்போனான்.

விடியற்காலையில் நான்கு மணி இருக்கும். விழிப்பு வந்தது! நட்சத்திரங்கள் இடம் மாறிப் போயிருப்பது தெரிந்தது. மல்லாந்து அப்படியே படுத்துக் கிடந்தான். திவ்யாவின் நினைவு தொடர்ந்தது. அவளைப் பற்றியும், தன்னைப் பற்றியும் யோசித்துக் கொண்டேயிருந்தான். இனி அவள் துணையின்றி இருக்க முடியாது எனத் தோன்றியது. தன்னுடனே இருப்பாளா வாழ்க்கை முழுவதும்...?

கேட்க வேண்டும். இன்றே கேட்டுவிட வேண்டும். இனி தள்ளிப்போடக்கூடாது. அதைத்தெரிந்து கொண்டால்தான் மேற்படி தன் வாழ்க்கை இயங்கும் எனத்தோன்ற கீழே இறங்கி வந்தான். சத்தப்படுத்தாமல் நடந்தான். சில வீடுகளில் தெரு தெளித்துக் கொண்டிருந்தார்கள். பால்காரன் ஒருவன் பீடி புகைத்துக் கொண்டே மாடு ஓட்டிக் கொண்டு போனான். அதைப் பார்ததும் இவனுக்கும் புகைக்கத் தோன்றியது. ஏதோ ஞாபகத்தில் கை பாக்கெட்டுக்குப் போனதும்தான் லுங்கி பற்றி பிரக்ஞை வந்தது.

'லுங்கியும் பனியனுமாக... என்ன இது...?'

'சரி. பரவாயில்லை' என தெருக்கோடி பூத்திற்கு வந்தான். இவனைப் பாத்ததும் பூத்காரன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"என்ன சார் அவசரமா...?"



'ஒரு வகையில் அவசரம்தான்' என்று நினைத்துக் கொண்டே "ஆமாம்" என்றவன் "காசு கொண்டு வரலை." என்பதைச் சேர்த்துச் சொன்னான்.

"பரவாயில்லை சார். பண்ணிக்கோங்க."

திவ்யாவின் நம்பரைச் சுழற்றிச் சொன்னான்.

"திவ்யா, ராஜாராமன்."

"என்ன ராஜாராமன் பாதி ராத்திரிக்கு போன் பண்றீங்க?"

"பாதிராத்திரி இல்லை திவ்யா. விடியற்காலை. இப்போது மணி ஐந்து இருக்கும்."

"அப்படியா...? இங்கே ஒரே இருட்டாக இருக்கு."

"விளக்கு போடு வெளிச்சம் வரும்."

"வேணாம். விஷயத்தைச் சொல்லுங்க?"

"இப்போ உடனே உன்னைப் பார்க்கணும். முடியுமா?"

"என்ன விஷயம் ராஜாராமன்?"

"இங்கே வரீங்களா?"

"இல்ல. உன்னால் டிரைவ் இன்னிற்கு வரமுடியுமா?"

"திறந்தே இருக்கமாட்டாங்க."

"ரெண்டு பேரும் டிரஸ் பண்ணிக்கிட்டு வர்றதுக்குள் மணி ஆறாயிடும்."

"சரி. வரேன். நான்கூட உங்களுக்கு ஒரு குட் நியூஸ் வச்சிருக்கேன்."

"என்ன திவ்யா?"

"நேர்ல சொல்றேன்."

தொலைபேசியை வைத்து விட்டு வீடு திரும்பினான் அவன்.

## 13

அந்த ஆறு மணி காலை நேரத்தில் டிரைவ் இன் பெருக்கி விட்ட சுத்தத்தில் இருந்தது. ஒரு கார் ஒரு ஸ்கூட்டர் எதுவும் இல்லை. அத்தனை இடமும் காலியாகக் கிடந்ததைப் பார்க்க ராஜாராமனுக்கு என்னவோ போலிருந்தது. ஒருநாள் கூட இத்தனை காலியாகப் பார்த்ததில்லை. ஓர் இடம் காலியாகக் கிடப்பதிலும் ஒரு அழகு இருப்பது தெரிய, மெல்ல நடந்து தன் வழக்கமான இடத்தை அடைந்தான்.

"என்ன சார் இன்னிக்கு இத்தனை சீக்கிரம்?"-புன்னகைத்த சர்வர்கள் ஆச்சரியமாகக் கேட்டனர்.

"சீக்கிரம்தான்." அசடு வழிந்தான்.

"காபி கொண்டு வரவா சார்?"

"கொண்டு வாங்க."

காபி வருவதற்கு முன் திவ்யா வந்தாள். காருக்கு பதில் ஆட்டோவிலிருந்து இறங்கினாள்.

"குட் மார்னிங் ராஜாராமன்." குரலில் வழக்கத்திற்கு அதிகமான உற்சாகம் தொனித்தது.

"வெரி குட் மார்னிங்" என்ற ராஜாராமன் தன் காபியை அவள் பக்கம் நகர்த்தினான்.

"உங்களுக்கு?"

"வரும், ஆமாம், கார் என்ன ஆச்சு?"

"ரிப்பேர். ஸ்டார்ட் ஆக மாட்டேங்குது. யூனிப்ரோவுக்கு போன் பண்ணணும்."

"அப்படின்னா காலேஜுக்கும் ஆட்டோதானா...?" அவனுக்கும் காபி வந்தது. உறிஞ்ச ஆரம்பித்தான்.

"காலேஜ் முடிஞ்சு கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகுது? நீங்க எந்த உலகத்துல இருக்கீங்க ராஜாராமன்?"



"முடிஞ்சுதுன்னா... லீவு விட்டுட்டாங்களா...?"

"ஸாரி. தப்பா சொல்லிட்டேன். முடிஞ்சு இல்லை-முடிச்சு. கடைசிப் பரிட்சையும் எழுதி முடிச்சாச்சு."

"இனிமேல் என்ன செய்யப் போற திவ்யா...? மேற்படிப்பா, வேலையா...?"

"வேலைதான். நாளைக்குக் கோயம்புத்தூருக்கு இண்டர்வ்யூவிற்குப் போறேன். போன்ல ஒரு குட் நியூஸ் சொல்லணும்னு சொன்னேன் இல்ல... அது இதுதான்."

அதிர்ச்சியடைந்தான் ராஜாராமன்.

"என்ன ராஜாராமன் அப்படிப் பார்க்கறீங்க?"

"வேலை விஷயத்தைப் பற்றி என்கிட்ட சொல்லவே இல்லையே திவ்யா...?"

"சொன்னேனே... அப்ளை பண்ணியிருக்கேன்னு சொல்லலை...? நேற்றுதான் இன்டர்வ்யூ கார்டு வந்தது."

"எங்க வேலை. கோயம்புத்தூர்லயா?"

"இல்லை, கோட்டயத்துல."

—போறதா முடிவு பண்ணிட்டியா?

"கிடைச்சால் போக வேண்டியதுதான்."

மீண்டும் அதிர்ந்தான். எவ்வளவு சுலபமாகச் சொல்கிறாள்! மனது சங்கடப்பட ஆரம்பித்தது. தன்னை விட்டுப் போவதற்காக இவள் வருத்தப்படவே இல்லையா? ஒரு பொருட்டாக நினைக்கவில்லையா...? அந்த அளவுக்கு வேலை முக்கியமா...?

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள் எதையோ புரிந்து கொள்ள முயன்றவளாகக் கேட்டாள்.

"என்ன ராஜாராமன் பேசாமல் இருக்கீங்க?"

"நீ போய்த்தான் ஆகணுமா திவ்யா?"

"எங்கே...?"

"கோட்டயத்துக்கு..."

"பின்னே... போகாமல் என்ன செய்ய?"

"இங்கேயே பார்த்துக்கக் கூடாதா...?"

"ஊஹூம், வேணாம். மெட்றாஸ் எனக்கு அலுத்துப் போச்சு."

"மெட்றாஸா. நானா...?"

"என்ன சொல்றீங்க?!"

"நீ கோட்டயம். போயிட்டா... நான்... நம் உறவு...?" அவன் தடுமாறினான்.

"என்ன ராஜாராமன் இது...? அதுக்கெல்லாம் இப்போ என்ன வந்தது...?"

அவளது முக பாவம் அவனுக்குத் திடுக்கென்றது.

"விளையாடாதே திவ்யா. நானே நொந்து போயிருக் கேன்."

"எதுக்கு நொந்து போகணும்?"

'எதுக்கு...?' ராஜாராமனுக்குக் குழப்பமாகவே இருந்தது. ஏதோ அபத்த நாடகம் நடப்பது போலிருந்தது. திவ்யாதான் அதன் டைரக்டர் போலவும், தன்னைக் கதாபாத்திரமாக்கி நிறுத்தியிருப்பது போலவும் உணர்ந்தான். திடீரென்று கோபம் வந்தது. 'என்ன இவள். தன்னை முட்டாளாக்க நினைக்கிறாளா...?

"விளையாடாதே திவ்யா."

"நான் விளையாடலை. நீங்கதான் விளையாட றீங்க..."



"இல்ல திவ்யா. நான் ரொம்ப ஸீரியஸாகச் சொல்றேன்" என்னைத் தயவு செய்து முட்டாளாக அடிக்கப் பார்க் காதே..."

"என்ன ஆச்சு ராஜாராமன் உங்களுக்கு...? ஏன் இப்படி யெல்லாம் பேசறீங்க?"

"புரியலையா உனக்கு?"

"இல்ல. புரியல."

"நிஜமாப் புரியலை?"

"நிஜமாகவே புரியல."

"நாம் ரெண்டு பேரும் கடைசி வரை ஒண்ணா இருக்கப் போறதில்லையா?"

"அப்படின்னா?" நெற்றி சுருக்கிப் பார்த்தாள்.

"தூங்கறவங்களை எழுப்பலாம். தூங்கற மாதிரி நடிக்கிற வங்களை எழுப்ப முடியாது."

"ஐயம் ஸாரி. நீங்க இப்படியெல்லாம் சூசகமாப் பேசறது எனக்குப் பிடிக்கலை. நேரடியா விஷயத்துக்கு வாங்க."

"ஓ. கே. பட்டுனு சொல்லிடறேன். ஐ லவ் யு திவ்யா. ஐ நீட் யு ஸோ மச். நாம் ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிண்டு..."

"வாட்! கல்யாணமா...?" இடையில் குறுக்கிட்டாள் அவள். அந்த முகத்தின் அதிர்ச்சியிலிருந்து அதை அவள் சற்றும் எதிர்பார்க்காதது தெரிந்தது.

"வாட் நான்ஸென்ஸ் ஆர் யு டாக்கிங் ராஜாராமன்?"

"நான்ஸென்ஸா...?"

"பின்ன...? எப்போவாவது நான் கல்யாணத்தைப் பத்தி பேசியிருக்கேனா...? லவ் மண்ணாங்கட்டின்னு உளறியிருக் கேனா...?"

"உளறலா...?"

"எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை ராஜாராமன். அந்த மாதிரி எதிலும் அடைபட விரும்பலை. அதெல்லாம் சுத்த அபத்தங்கள். நான் ரொம்ப ரொம்ப சுதந்திரமானவள். ஃபெமினிஸத்திற்காகக் குரல் கொடுப்பவள். அப்படிப் பட்டவள்கிட்ட வந்து காதல் கல்யாணம்னெல்லாம் உளறினால் ஒண்ணு கோபப்படணும். இல்லை, சிரிக்கணும். நான் சிரிச்சுடறேன்."

திடீரென்று உடைந்தான் ராஜாராமன்.

"ப்ளீஸ் திவ்யா. அந்த மாதிரியெல்லாம் சொல்லாதே..." கைபற்றி கெஞ்சினான். சடாரென்று உதறிக் கொண்டாள் அவள்.

"நீங்களும் அந்த மாதிரிப் பேசாதீங்க..."

"திடீர்னு ஏன் இப்படிப் பேசற?"

"நீங்களும் திடீர்னுதானே ஆரம்பிச்சிருக்கீங்க. இதப் பாருங்க ராஜாராமன். எனக்கு காதல்லயோ, கல்யாணம்ன்ற அமைப்புலயோ துளிக்கூட நம்பிக்கை கிடையாது. அப்படியெல்லாம் சிறைப்பட முடியாது. நீங்க உங்களுக்கேற்ற ஒரு நல்ல பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோங்க. வந்து சந்தோஷமாக வாழ்த்துச் சொல்றேன்."

"அப்போ இத்தனை நாளா பழகினது...?"

"என்ன குழந்தைத்தனமான கேள்வி இது? பழக்கத்துக்குக் காரணம், உள்நோக்கம் இதெல்லாம் வேணுமா? ஐயம் ஸாரி நான் அப்படி நினைக்கல..."

"பின்ன, என்ன நினைச்சுதான் பழகின?"

"எதையும் நினைச்சுப் பழகறவ இல்ல நான். இன்ஃபாக்ட் ஒண்ணுமே நினைக்கலை. நீங்க எங்க காலேஜ் காம்பஸைப் படம் பிடிச்ச விதம் ரொம்பப் பிடிச்சது. கிட்ட



வந்து பேசினேன். இலக்கியத்தில் உங்களுக்கு இருந்த ஆர்வம் பழகத்தூண்டிச்சு. பழகினேன். அவ்வளவுதான்."

"வெறும் இலக்கிய ஆர்வம் மகாபலிபுரம் வரை வரத் தூண்டுமா...? அந்த மாதிரியல்லாம் பழகச் சொல்லுமா...?"

"அதுல தப்பு ஒண்ணும் இருக்கிறதா எனக்குத் தெரியல. நீங்களும் இதையல்லாம் பெரிதாக நினைக்கிற, கற்பு பற்றி யோசிக்கிற சாதாரண ஆள்தான்னு தெரிஞ்சிருந்தால் பழகியிருக்க மாட்டேன்."

'அடிப்பாவி!' என்று உள்ளுக்குள் அலறியவன் அவளை அடிபட்ட மாதிரி பார்த்தான்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க? எனக்கு உங்க கம்பெனி பிடிச்சுது; உங்களுக்கு என் கம்பெனி பிடிச்சுது. இன்டலெக் சுவலாப் பேசி நேரத்தை சந்தோஷமாப் பகிர்ந்துண்டோம். தட்ஸ் ஆல்..."

மீண்டும் அவள் விளையாடுவதான சந்தேகம் ஏற்பட மெல்லக் கேட்டான்.

"ஏய் நீ விளையாட்டுக்குத்தானே சொல்ற ..?"

"நோ, ஐயம் 120% ஸீரியஸ் எபௌட் இட். இன்னிக்கு ராத்திரி ரயில் எனக்கு. இன்னம் பாக் பண்ணலை. பதினோரு மணிக்கு அந்த வேலை விஷயமா ஒருத்தரைப் பார்க்கறேன்னு சொல்லியிருக்கேன். ஸோ, நான் வரட்டுமா ராஜாராமன்?"

அவனது பதிலை எதிர்பார்க்காமல் அவள் எழுந்து கொண்டது அவனுக்குள் குபீரென்று கோபம் வரவழைத்தது.

"அந்த மாதிரி உதறிண்டு போக உன்னை நான் விட மாட்டேன் திவ்யா." குரல் உயர்த்தினான்.

"ஸாரி. இந்த பயமுறுத்தல்களுக்கெல்லாம் பயப் படறவன் இல்லை நான். நான் போறேன்னால் போறேன் தான். யாரும் என்னைத் தடுத்து நிறுத்த முடியாது. வேலை கிடைச்சு ஒட்டு மொத்தமா மெட்றாஸ் விட்டுக் கிளம்பற போது உங்க கிட்ட திரும்ப வந்து சொல்லிட்டுப் போறேன்."

"நோ, இனிமேல் நான் உன்னைப் பார்க்க விருப்பப் படலை."

"தாங்க்யு. இந்தக் குழந்தைத் தனத்திற்கெல்லாம் நான் கோபப்பட மாட்டேன். இப்படியெல்லாம் நீங்கள் என்னைக் காயப்படுத்தி விட முடியாது. நீங்க ரொம்ப மனமுதிர்ச்சி உள்ளவர்னு நினைச்சேன். சில நேரம் நாம் நினைக்கிறது தப்பாகி விடறது இல்லையா....? எனிவே ஆல் தி பெஸ்ட். கடைசியா ஒண்ணு சொல்லிட்டுப் போயிடறேன்.

You go your way.

I go my way.

If at all we meet-we meet.

That's all.

மிக நிதானமாய், அமைதியாய் ஓட்டலைவிட்டு வெளி யேறியவளை திக்பிரமை பிடித்தவனாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஏன் தனக்கு எல்லாமே இப்படி ஆகிறது? தொட்டு விடும் தூரம்தான் என நினைப்பது கண்ணாமூச்சி காட்டி விலகுவதே ஏன் வழக்கமாகிப் போனது?

சுய இரக்கம் தொண்டையை அடைத்தது. யாரும் காணாத இடத்தில் உட்கார்ந்து ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது. மனதைத் தேற்றிக் கொள்ள முடியவில்லை. திவ்யாவை மறக்க முடியுமென்று தோன்றவில்லை. எழுந்



தான். கைகால்கள் தொய்ந்து நடக்க முடியாதவனா உணர்ந்தான்.

என்ன செய்வது? இப்போது எங்கே போவது...? ரவியாவது கூட இருந்திருக்கக் கூடாதா...? இருந்தால் மட்டுமென்ன? ரவியிடம் சொல்லி ஆறுதல் பெறத் தன்னால் முடியவா போகிறது...?

ஒரு ஆட்டோ பிடித்து நுங்கம்பாக்கம் வந்தான். பார் வாசலில் இறங்கிக் கொண்டான். நல்ல வேளையாக, அப்போது பாரில் ஒருவருமில்லை. அந்தக் காலை நேரத்தில் காதலில் தோல்வி கண்ட தன்னைத் தவிர வேறு யார் குடிக்க வருவார்கள்...?

உள்ளே போய் உட்கார்ந்தான். கழிவிரக்கம் முழுதும் கோபமும் வெறுப்புமாக மாறிற்று.

'சீ! இவளது பொழுது போக்கிற்கு நான்தானா கிடைத் தேன். நானுண்டு என் வேலையுண்டு என்றிருந்தவனை ஏன் இழுத்தாய் திவ்யா...? எதற்காக மகாபலிபுரம் அழைத்துப் போனாய்...? உன் புத்திசாலித்தனம், அறிவாளி என்கிற தூண்டிலை வீசி இன்னும் எத்தனைப் பேரை பிடிக்கப் போகிறாய்? எத்தனை சுலபமாகச் சொல்லிவிட்டாய்...

You go your way

I go my way

If at we meet-we meet...!

வேகமாகக் குடித்தான். ஒரே மடக்கில் முழு திரவத் தையும் உறிஞ்சினான். மிகச் சீக்கிரத்தில் உச்சிக்குப் போக ஆசைப்பட்டான்.

திவ்யா தன்னுடன் பழகியதையெல்லாம் நினைத்துப் பார்த்தான். உண்மையாகப் பழகியது போல்தான் தோன் றியது. போலியாக எதையும் நினைக்க முடியவில்லை,

இப்போது சொன்னது மட்டுமே போலி எனப்பட்டது. ஒரு வேளை தன்னை சோதித்துப் பார்க்கிறானோ...?

யோசிக்க யோசிக்க எதிர்காலம் கோர உருவம் எடுத்து பயமுறுத்தியது. கலாப்ரியாவின் கவிதை ஒன்று அதன் தலைப்போடு ஞாபகம் வந்தது. தலைப்புதான் முக்கியம் எனப்பட்டது.

காதல்—ஒரு தலை

இந்த ஊர் புயலில்
துடிக்கிறது
ஆனா
லென் ஆழம்மிக்க கிணற்றில்
நீ
ரில் அசைவுகளே இல்லை

கலாப்ரியா சனிசனி என்று உருகின மாதிரி தானும் திவ்யா திவ்யா என்று உருக வேண்டியதுதானா...?

தாள முடியவில்லை. எழுந்து வீட்டுக்குப் போனான். சுருண்டு போர்த்து மூலையில் படுத்துக் கொண்டான். அம்மா வந்து எழுப்பினாள்.

"என்னடா...உடம்பு சரியில்லையா?"

"ஒண்ணுமில்லம்மா" முகம் திருப்பாமல் பதில் சொன்னான்.

"பின்ன, போத்துப் படுத்துண்டிருக்க...?"

சும்மாத்தான். தன்னாத் தூங்கலாம்னு இருக்கேன். எழுப்பாதம்மா

"சாப்பிடக் கூடவா?"

"வேணாம்மா."



அம்மா போனபின் முகத்தை மூடிக்கொண்டு தூங்க முயன்றான்.

மாலை ஏழு மணியளவில் சடாரென்று விழிப்பு வந்தது. போர்வையை உதறிவிட்டு ஏதோ முடிவுக்கு வந்த மாதிரி எழுந்தான். அவசர அவசரமாய் முகம் கழுவி காப்பி குடித்து விட்டு வெளியில் வந்தான்.

தெருக்கோடியில் ஆட்டோ பிடித்து சென்ட்ரல் ஸ்டேஷன் வந்திறங்கினான். பிளாட்பார டிக்கெட் வாங்கி பிளாட்பாரம் விசாரித்து கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடிய ராஜாராமனுக்கு முதுகுத்தண்டு சொடுக்கிற்று. உடல் ஜில்லிட்டது. அவன் போனபோது அந்த இரண்டாவது பிளாட் பாரம் காலியாகக் கிடந்தது.

ரயில் போய்விட்டிருந்தது.

## 14

சுற்றி நடந்த ஒன்றும் மனதில் பதியவில்லை ராஜாராமனுக்கு. பேரர் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன காபி ஆறி மேலே ஆடை கட்டியிருந்தது. எதிர்வரிசையில் அமர்ந்திருந்தவரின் முதுகை வெறித்தபடி இருந்தான். கையிலிருந்த சிகரெட்டை அணைத்துவிட்டு இன்னொன்று தேடினான். பாக்கெட் காலியாகக் கிடந்தது.

ரவி இவனை வேதனையுடன் பார்த்தான். கவலையாக இருந்தது. 'என்ன ஆயிற்று ராஜாராமனுக்கு...? ஒரு வாரமாக இப்படி கப்பல் கவிழ்ந்தது போல் உட்கார்ந்திருக்கிறார்...? மழிக்கப்படாத முகமும், நிலைகுத்திய பார்வையுமாகப் பொழுதைக் கழிக்கிறான்...?

"சார்...இன்னிக்கு எடிட்டிங் இருக்கு. நேத்திக்கே வரேன்னு சொல்லிட்டு நீங்க வரலை...." மெதுவாக ஆரம்பித்தான் ரவி.

அவன் காதில் விழாத மாதிரி பேசாமல் இருந்தான்.

“சார்...இன்னிக்கு வரீங்க இல்ல. ஞானமும், ரஜத்தும் நமக்காக வீடியோ கேம்ல காத்துக்கிட்டிருப்பாங்க...”

“இல்ல ரவி. இன்னிக்கும் வரலை...” சொல்லிவிட்டு தூரப் பார்வை பார்த்தான். உயிரேயில்லாத ஆட்களைக் கவனிக்காத சலனமற்ற பார்வை! இது போன்று ராஜா ராமனைப் பார்த்தேயிராத ரவி சங்கடப்படத் துவங்கினான். ‘அப்படி என்னதான் ஆயிற்று இவருக்கு?’

மெல்லத் தன் நாற்காலி விட்டு எழுந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான் ரவி.

“நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே சார்...?”

திரும்பிப் பார்த்தான் ராஜாராமன். அந்தப் பார்வையின் வெறுமை ரவியைச் சில்லிட வைத்தது.

“என்ன சார் ஆச்சு...? என்கிட்ட சொல்லலாம்னால் சொல்லுங்க...”

“ஒண்ணுமில்ல ரவி. ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கிண்டு வரச் சொல்றியா?”

“நானே போய் வாங்கிண்டு வரேன்.”

சிகரெட் வந்ததும் மறுபடியும் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான் ராஜாராமன். காலை ஞாபகம் வந்து மனது இன்னமும் கனமாயிற்று.

இப்படித்தான், பதினோரு மணி வாக்கில் டிரைவ் இன் வந்து உட்கார்ந்து கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் திவ்யாவின் கார் உள்ளே நுழைவதைப் பார்த்தான். மனசு துள்ளிற்று. ‘தன் முடிவை மாற்றிக் கொண்டு விட்டாள் போலிருக்கிறது...’



வந்தவள் நேராக ராஜாராமனை நெருங்கி அவனெதிரில் உட்கார்ந்து மிக உற்சாகமாக குட்மார்னிங் சொன்னதும் இன்னமும் நம்பிக்கை துளிர்விட்டது. இவனும் பதிலுக்குச் சொன்னான்.

“குட்மார்னிங் திவ்யா.”

“எப்படி இருக்கீங்க ராஜாராமன். பார்த்து ஒரு வார மாகப் போகுது இல்ல...?”

அவனது அத்தனைக் கோபமும் அந்த ஒற்றைக் கேள்வியில் அடித்துக் கொண்டு போயிற்று. ஒரே நிமிடத்தில் பழைய ராஜாராமனானான். சந்தோஷத்தில் மனம் நெகிழ்ந்தது.

“நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்க திவ்யா...?”

“ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கேன். போன இன்டர்வ்யூ சக்ஸஸ். அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர். அடிச்சு கைல கொடுத்துட்டாங்க. நாளன்னிக்கு ஜாயின் பண்ணனும்.”

பொசுக்கென்று அத்தனை சந்தோஷமும் வடிந்தது.

“நாளைக்குக் கோட்டயம் கிளம்பறேன். சொல்லிண்டு போகலாம்னு வந்தேன்.”

“அதுக்காகத்தான் வந்தாயா திவ்யா...? நீ மனசை மாத்திண்டு திரும்பி வந்திருக்கேன்னு நினைச்சு சந்தோஷப் பட்டேன்.”

வினாடி நேரம் அவனையே பார்த்தபடி மௌனமாக இருந்தாள் அவள்.

“என்ன திவ்யா பேசாமல் இருக்க?”

“இது என்ன குழந்தைத்தனம் ராஜாராமன்” “நீ உன் மனசை மாற்றிக்க மாட்டாயா திவ்யா?”

"ப்ளீஸ் பீ யுவர் செல்ஃப் ராஜாராமன். உங்க நிலையிலிருந்து இறங்கி வந்து இந்த மாதிரியெல்லாம் கெஞ்சாதீங்க, அது எனக்குப் பிடிக்கலை. அப்புறம் நாம் சிநேகிதமாகக்கூட இருக்க முடியாமல் போயிடும்."

உதடுகள் துடித்தன. நாக்கு உள்ளே தவித்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

'வேண்டாம், வார்த்தைகளில் கொட்டி விடுவோம்.' கட்டுப்படுத்திக் கொண்டான்.

"உன்கிட்ட ஒரு அஞ்சு நிமிஷம் பேசலாமா திவ்யா...?"

"தாராளமா..."

"ஏன் இப்படிப் பண்ணினே...?"

"என்ன பண்ணினேன்?"

எழுந்து கன்னத்தில் அறையலாம் போலிருந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

"இதப் பாருங்க ராஜாராமன். திரும்பத் திரும்ப நீங்க அந்த விஷயம்தான் பேசுவீங்கன்னால் நான் கிளம்பறேன். ஐயம் நாட் இண்ட்ரஸ்டட் இன் தட்."

"யு ப்ளடி பிட்ச், உன் பொழுதுபோக்குக்கு நான்தானா கிடைச்சேன்...?" அடக்க முடியாமல் வெடித்தான்.

அவள் கோபப்படவில்லை. அவனைப் போல் குரல் உயர்த்தவில்லை. வினாடி நேரம் இமைக்காமல் பார்த்தாள்' பின்னர் குரல் தழைத்து ஆனால், வார்த்தைகளில் அழுத்தம் தொனிக்கப் பேசினாள்.

"லுக் மிஸ்டர் ராஜாராமன். நீங்க வித்தியாசமானவராக இருப்பீங்கன்னு நினைச்சேன். ஆனால், நீங்களும் ஒரு சாதாரண சராசரி ஆண்தான்னு நிரூபிச்சுட்டீங்க. எந்த உரிமைல நீங்க இப்படி அன்பார்லிமெண்ட்டரி வேர்ட்ஸ்



எல்லாம் யூஸ் பண்றீங்கன்னு தெரியலை. ப்ளீஸ் ட்ரை டு கண்ட்ரோல் யுவர் டங். நான் என்ன உங்களைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னேனா, இல்ல, உங்க கூடக் காலம் முழுதும் இருக்கிறதா அக்ரிமெண்ட் போட்டு ஸைன் பண்ணினேனா....? நீங்களாக எதையாவது கற்பனை செய்துக்கிட்டா அதுக்கு நான் எப்படிப் பொறுப்பு....?"

அதற்கு மேல் தாங்க முடியாதவனானான். "உன்னைக் காதலிக்கலை. கல்யாணம் பண்ணிக்கிற எண்ணமும் இல்லைன்னால் எதுக்கு என் கூடப் படுத்த...?"

சீ! என்கிற மாதிரி அருவருப்போடு பார்த்தாள்.

'எத்தனைக் கீழ்த்தரமான மனிதன் இவன்....?'

"நீங்க இந்த அளவுக்குக் கேவலமானவராக இருப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை ராஜாராமன். இவ்வளவு கொச்சைப்படுத்திப் பேசாதீங்க. அது ஒரு அனுபவம். இனிமையான மிக நல்ல அனுபவம்னு எடுத்துக்கிட்டு மனசுக்குள்ள பாதுகாக்க, உங்களால முடியலை. எல்லா சராசரி ஆணையும் போல் அப்படியே சொந்தமாக்கிக்கணும்னு பார்க்கறீங்க. வெல் இதுக்கு மேல நமக்குள் ஒத்துப் போகாது. சிநேகிதமாகப் பழகக்கூட முடியாது. அதனால் லெட் அஸ் பார்ட் வித் திஸ்."

எழுந்து நின்று மிகச் சாதாரணமாகக் கை நீட்டினாள். இன்னும் கொதித்துப் போனான் அவன். 'என்னை ஏமாற்றினதோடு அல்லாமல் தாழ்வு மனப்பான்மையை வேறு ஏற்படுத்துகிறாயா....?'

சிறிதுகூட சலனப்படாதவளாகச் சொன்னாள் அவள்.

"குட்பை மிஸ்டர் ராஜாராமன். நான் வரேன். மீண்டும் நாம் சந்திக்காமல் இருப்பதே நல்லது."

திரும்பி நிதானமாக நடந்து காரில் ஏறிக்கொண்டாள். கார் கிளம்பிப் போகிறவரை பிரமை பிடித்தவனைப் போல்

பார்த்துக் கொண்டிருந்தவன் மேஜையை ஓங்கிக் குத்தினான்-

'யு பிட்ச், ப்ளடி பிட்ச்...எத்தனை பேர் இப்படி கிளம்பியிருக்கீங்க...?''

அழுகை வந்தது.

## 15

அழத்தோன்றியதை அடக்கிக் கொண்டான் ராஜாராமன். மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. தன் மீதே கோபம் வந்தது. தன் இயலாமை மீது வெறுப்பு ஏற்பட்டது. முப்பத்திரண்டு வயதில் இருபத்து மூன்று வயதுக் கோபம் வெட்கத்தை ஏற்படுத்தியது.

'சீ! என்ன இது...? நான் ஏன் இப்படி ஆகிப் போனேன்...?'

நிமிர்ந்து ரவியைப் பார்த்தான். 'இவனைப் போல் தன்னால் ஏன் இருக்க முடியவில்லை? பெண்களைத் தள்ளி நிறுத்துகிறான். சிகரெட், குடி எதுவும் பழக்கமில்லை. அதாவது எதற்கும் அடிமையில்லை அடிமைப்படுத்த அவன் விடுவதில்லை. அது எவ்வளவு பெரிய சுதந்திரம்! ஆனால் நான்...? சுதந்திரமானவன் என்று சொல்லிக் கொண்டு அடிமைப்பட்டுக் கிடக்கிறேன்...'

''சொல்லுங்க சார். இப்படி மனசுக்குள் வச்சுக் குமையா தீங்க ப்ளீஸ்..''

பேசாதிருந்தான்.

''என்ன சார் இதுக்கும் பேசாமல் இருக்கீங்க?''

''என்ன ஒண்ணும் கேட்காத ரவி ப்ளீஸ்.''

''சரி. நானே சொல்லட்டுமா? திவ்யா உங்ககிட்ட சொல்லிட்டுப் போகலாம்னு வந்தாங்க இல்ல...?''



''அது உனக்கு எப்படித் தெரியும் ரவி?''

ரவி நிதானித்தான். 'எப்படிச் சொன்னால் புண்படா திருப்பான்...?'

''நான் சொன்னால் நீங்க தப்பாக எடுத்துக்க மாட்டீங்களே...?''

''சொல்லு.''

''இன்னிக்குக் காலைல ஆறுமணிக்கெல்லாம் திவ்யா என்னைத் தேடிண்டு வீட்டுக்கு வந்தாங்க...''

''...''

''வந்து எல்லாம் சொன்னாங்க...''

''எல்லாம்னா...?'' சந்தேகத்தோடு கேட்டான் ராஜாராமன்.

''எல்லாம்தான்.'' சற்று அழுத்திச் சொன்னான் ரவி. சிறிது யோசித்துப் பின் தொடர்ந்தான்.

''அவங்க சொன்னதுல எந்தத் தப்பும் இருக்கிறதா எனக்குத் தெரியலசார். ரொம்ப ஞாயமானதாப் படறது, அப்படி இருந்தும் நீங்க தடிமனான வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருக்கக் கூடாதுதான்.'

''இல்ல ரவி... என் நிலைமையில் இருந்தால்தான் அந்த வலியும் வேதனையும் புரியும்.''

''பட் நீங்க உங்க நிலைமையிலேயே இல்ல சார். இப்படியெல்லாம் பேசறவரா நீங்க. ஏன் சார் இப்படித் தடம் புரண்டு போனீங்க?

'நோ டெவில்ஸ் பிரைஹண்ட்'னு சொல்ற நீங்களா ஒரு பொண்ணுக்காக இத்தனை வருத்தமும் சோகமும் படறீங்க...?''

"அவ சாதாரணப் பொண்ணில்லை ரவி..."

"அது தெரிஞ்சும் அவங்களை நீங்க அடக்க நினைக்கிறது நியாயமா சார்...?"

"நான் அவளை அடக்க நினக்கலை ரவி. அவள் தோழமை வாழ்நாள் முழுசும் வேணும்னு அவளைக் கல்யாணம் பண்ணிக்கத்தான் நினைச்சேன்."

ரவி வேதனையாகச் சிரித்தான்.

"எதுக்கு ரவி சிரிக்கிற...?"

"தோழமை வேணும்னால் கல்யாணம் எதுக்கு சார்?"

"அது வாழ்நாள் முழுதும் இருக்கணுமில்ல?"

"இல்ல சார். தோழமை மட்டும் போறலை உங்களுக்கு. ஆளுமையும் தேவைப் படறது. எவ்வளவோ படிக்கிறோம். பேசறோம். ஆனாலும் நமக்குள் இருக்கிற மேல் ஷாவனிஸம் மட்டும் போறதே இல்லை."

"யு ஆர் மிஸ்டேகன் ரவி. அந்த ஆணாதிக்க மனப் பான்மை என்கிட்ட இல்லை."

"இருக்கு சார். நாம் கேட்டு அவமறுக்கிறதான்ற கோபம். ஈகோ அடிவாங்கறது. கேட்க நமக்கு எவ்வளவு உரிமை இருக்கோ அதே உரிமை அவங்களுக்கு மறுக்கவும் இருக்கு இல்லையா...?"

"இருக்கு. நிச்சயமாக இருக்கு. அந்த மறுப்பை மகாபலிபுரம் போனபோதே சொல்லியிருக்கணு மில்லையா...?"

"நீங்க அப்போ கேட்டீங்களா?"

"இல்லை."

"பின்னே...?" அவங்களா வந்து சொல்லணும்னு எதிர் பார்க்கறீங்களா...?



நீங்க எவ்வளவோ புத்திசாலி சார். அறிவாளி. நீங்க திவ்யாவைப் புரிஞ்சுக்கலேனா வேற யார் புரிஞ்சுப்பாங்க? அவங்க வளர்ந்தவிதம் அப்படி. வாழறவிதம் அப்படி. அவங்களுக்கு அது பிடிச்சிருக்கு. இருக்காங்க. அதைத் தப்புன்னு சொல்ல நாம் யாரு சார்? நீங்க உங்க வழியில் போங்க. அவங்க அவங்க வழியில் போகட்டும். அதுல என்ன சார் பிரச்சினை...?"

"அதையேதான் அவளும் சொன்னா. ஆனால் திவ்யா இல்லாமல் எப்படின்னு..."

"நோ சார். இல்லைன்னு ஆனதுக்கப்புறம் அவங் களையே நினைச்சு ஒரு சுய பரிதாபத்துல அழறதுல என்ன லாபம் சொல்லுங்க? அதைவிட உங்களுக்காகவே காத்துண் டிருக்கிற உங்க அத்தைப் பொண்ணை நீங்க கல்யாணம் பண்ணிக்கலாமில்ல...?"

அவனை அதிர்ச்சியோடு ஏறிட்டான் ராஜாராமன்.

"என்ன சார் அப்படிப் பார்க்கறீங்க? அது எப்படி எனக்குத் தெரிஞ்சதுன்னா...? உங்கம்மா சொன்னாங்க சார். எப்படியாவது உங்களை அந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வச்சுடணும்னு கேட்டுண்டாங்க. நானும் யோசிச்சுப் பார்த்தப்போ அது உங்களுக்கு ரொம்பப் பொருத்தமா, சரியா இருக்கும்னு தோணித்து."

ஐயோ... நீயும் எங்கம்மா கூட சேர்ந்துண்டு என்ன ரவி சொல்ற... எங்க அத்தைப் பொண்ணு பிலோ ஆவரேஜ். திவ்யா மாதிரி புத்திசாலி இல்லை. இலக்கியம் தெரியாது. பட்டுக்கோட்டை பிரபாகர், ராஜேஷ்குமார் தவிர வேற யாரையும் படிக்கமாட்டா. சினிமா பற்றின அறிவு சுத்தமா கிடையாது."

"வெரிகுட்" என்று நிஜமாகவே சந்தோஷப்பட்டான் ரவி

"அப்படி இருக்கிற பொண்ணுதான் சார் உங்களுக்கு சரி, உங்களுக்கு சரி சமமா நிற்கிற பொண்ணில்லை. உங்களுக்குத் தேவை தழைஞ்சு போகிற பொண்ணு..."

"என்ன ரவி இப்படியெல்லாம் பேசற... உனக்கு இந்த மாதிரியெல்லாம்கூடப் பேச வருமா...?"

"ஐயம் வெரி ஸாரி சார். எத்தனை வலிச்சாலும் இன்னிக்கு உண்மையைத் தோலுரிச்சுக் காட்டறதுன்ற முடிவோடத்தான் வந்திருக்கேன்."

"எப்போ ஒரு பொண்ணில்லாமல் முடியலைன்னு ஆகிப் போச்சோ... தேவைப்படறபோது வேணும் உடனே நிறை வேற்றிக்கணும்னு தோணறதோ அப்போ கல்யாணம்தான் சரி; அதுதான் ஆரோக்கியமான முடிவு."

சிகரெட் பற்ற வைத்து மற்றொரு காபிக்கு ஆர்டர் பண்ணிவிட்டு ராஜாராமன் பேசாதிருக்க, ரவி தொடர்ந்தான்.

## 16

இன்னும் கொஞ்சம் ஏறிப் போய் உங்க பாஷையிலேயே சொல்றேன் சார். நினைக்க ஆறு, நடக்க நடுத்தெரு. அடிக்கடி நீங்க சொல்ற கவிதை சார். திவ்யா ஆறு மாதிரி. அவங்கபாட்டுக்கு ஓடிண்டிருப்பாங்க. ஆற்றுல நடக்க உங்களால் முடியுமா சார்? அந்த வித்தை தெரிஞ்சிருக்கணும். ஹட யோகம் பிரயோகம் பண்ணத் தெரியணும். அப்படியே தெரிஞ்சாலும் எப்போதும் தண்ணி மேல் நடக்கிறதுன்றது சாத்தியமில்லை. எப்போதாவது மனசு முற்றிலும் ஒரு முகப்பட்டால்தான் சாத்தியம். நடைமுறை வாழ்க்கையின் நித்தியம் நடுத்தெருதான். இதையெல்லாம் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லவே வேணாம். அதுக்கு எனக்குத் தகுதி



யில்லே. இருந்தும் சொல்றேன்னால் சந்தர்ப்பம் அப்படி அமைஞ்சுப் போச்சு. நான் கிளம்பறேன் சார். நீங்க நிதான மாக யோசிச்சு ஒரு முடிவுக்கு வாங்க. எந்த முடிவுக்கு வந்தாலும் என்னை போன்ல கூப்பிட்டு ஒரு வார்த்தை சொல்லுங்க. நான் வீடியோ காம்லதான் இருப்பேன். ராத்திரி முழுசும் எடிட்டிங் உண்டு சார். நான் வரேன்."

ரவி போன பின் நீண்ட நேரம் யோசனையில் இருந்தான் ராஜாராமன். காபி சிகரெட், சிகரெட் காபி எனப் பொழுதைத் தள்ளினான். மாலை நான்கு மணியளவில் டிரைவ் இன்னில் கூட்டம் சேரத் துவங்கியதால் எழுந்து ஆட்டோ பிடித்து பாருக்குப் போனான். மூலையில் மிகத் தனியாக உட்கார்ந்து ஏழெட்டு லார்ஜ் குடித்து முடித்தான். பாக்கெட் பாக்கெட்டாக சிகரெட் காலியாயிற்று மனது வெறுமையாகக் கிடந்தது. எந்த முடிவிற்கும் வராமல் தடுமாறிற்று.

'என்ன செய்யலாம்...? பேசாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டு விடலாமா...?'

"என்னடா ராஜா இப்படிப் பண்ற...? வயசு முப்பத் திரண்டாறதுடா. கல்யாணம் பண்ணிக்கோடா..."

'என்னால் இனிமேலயும் இந்த வீட்டுக்கு உழைக்க முடியலை. உடம்பு தளர்ந்து போச்சு. ஒரு மாட்டுப்பொண்ணு வந்தாலாவது உட்கார்த்தி வச்சு செய்வாள்...'

'இவன் என்னடீ இப்படிப் பண்றான்...? இவன் என்ன எனக்கு ஒரே பிள்ளையாடீ...? அடுத்தவன் இன்ஜினீரிங் முடிச்சு, கை நிறைய சம்பளம் வாங்கிண்டு கல்யாணத்துக்குக் காத்துண்டிருக்கான். வயசுக்கு வந்த பொண்ணு வேற இருக்கு... இவன் நகர மாட்டேன்றானேடீ...?

அப்பாவும் அம்மாவும் வாய் ஓயாமல் வருத்தப்பட்டுக் கொள்வது நினைவிற்கு வந்தது. ரவி சொன்ன மாதிரி

அவனுக்கும் தேவைகள் இருந்தன. அந்தத் தேவையற்றிருக்க அவனாலும் முடியாது என்கிறபோது ரவி சொன்னதுபோல் கல்யாணம்தான் ஆரோக்கியமான விஷயமோ...?

ரவி தன் நல்லதுக்குத்தான் சொல்வான். எது சொன்னாலும் சரியாகத்தான் இருக்கும்...

பதினோரு மணிக்கு மேல் தெரிந்த முகங்கள் பாருக்குள் நுழைய இவன் எழுந்து கொண்டான். 'இனிமேல் இங்கேயும் நிம்மதி கிடைக்காது.'

ஆட்டோ பிடித்து வீட்டிற்கு வந்தபோது வாசலிலேயே ரவி நின்று கொண்டிருப்பது தெரிந்தது. இவனைப் பார்த்ததும் ஓடிவந்து கைபற்றிக் கொண்டான்.

"எங்கே சார் போயிருந்தீங்க?"

ராஜாராமன் புன்னகைத்துக் கொண்டே சொன்னான்.

"வாசனை வரல...?"

சில வினாடிகள் ஒன்றும் சொல்லாமல் நின்றிருந்தான் ரவி.

"என்ன ரவி பேசாமல் இருக்க?"

"ஒண்ணுமில்ல சார் சாப்பிட்டீங்களா...?"

"இல்ல."

"சாப்பிடலாமா சார்."

"எங்கே?"

"எங்கேயாவது வெளில போய் சாப்பிடலாம்."

"எனக்கு வேண்டியது கொஞ்சம் மோர் சாதம் அதை அம்மாவே கலந்து வச்சிருப்பாங்க."

"வேணாம் சார். இந்த நிலைமைல உள்ள போக வேணாம்."

"சரி. வா, போகலாம்."



ரவியோடு நடந்த போதுதான் எதிர்பக்க அடுக்கு மாடிக் கட்டிடத்தை கவனித்தான். கட்டி முடித்து குடிவந்திருந்தார்கள். பளீரென வாசலில் டியூப்லைட் எரிந்து கொண்டிருந்தது. இத்தனை நாட்களாகக் கண்ணில் படவில்லை. அந்த அளவிற்குத் திவ்யா மனதை ஆக்ரமித்துக் கொண்டு இருந்திருக்கிறாள்!

பெருமூச்சுவிட்டான். சட்டென்று அடுக்கு மாடிக் கட்டிடத்திற்கு முன்பு அந்த இடத்திலிருந்து மரங்களும் கிளிகளும் ஞாபகத்திற்கு வந்தன. எத்தனை மரங்கள்! எத்தனை கிளிகள்! கீச்கீச்சென்று அவற்றின் கூப்பாடும், கும்மாளமும்...காலையில் கூட்டம் கூட்டமாக இரை தேடப் பறந்து போவதும், இருட்டு வருவதற்கு முன் மாலையில் பட்டாளமாய் மரம் திரும்புவதும் எத்தனை அதிஅற்புதமான காட்சிகள்!

அடுக்கு மாடிக் கட்டிடத்திற்கென அந்தக் காட்சியை ஒரே நாளில் கலைத்துப் போட்ட குரூரம். மரங்கள் முழுதும் வெட்டப்பட்ட அந்த மாலை...வெற்றிடத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்த கிளிகள்...அவற்றின் கீச்கீச் அலறல்...அதில் எதிரொலித்த 'எங்கே எங்கள் கூடுகள்...? எங்கே எங்கள் குஞ்சுகள்...?'

அந்த மரங்களின் குளுமைக்கும், செழுமைக்கும், நிழல்களுக்கும், கிளிகளுக்கும் பதிலாக மனிதர்கள், மனிதர்கள், மனிதர்கள்...

வெறுத்துப் போய் ராஜாராமன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்ட போது மெல்லப் பேசத் துவங்கினான் ரவி.

என்ன சார் முடிவு பண்ணினீங்க?"

''என்ன ரவி பண்ண முடியும்?'' என்று சிரித்தவன் மெதுவான குரலில் சொன்னான்,

''தெரிந்தும் தெரியாமல்
விரிந்தும் விரியாமல்
இருந்தும் இல்லாமல்
ஆள் ஏன்.''

''என்ன சார் சொல்றீங்க?''

''ஆத்மாநாம் கவிதை.''

''எதுக்கு சார் சொன்னீங்க?''

''புரியல....? சரி, புரியும்படி இன்னொன்னு சொல்றேன்.'

சகதியில் விழுந்தாலென்ன
சாணியில் விழுந்தாலென்ன
எனக்குப் பாத்தியப்படாத
மனசு

உத்ராடன் கவிதை.''

வேதனையோடு ராஜாராமனின் முகத்தை ஏறிட்டான் ரவி.

''என்ன அப்படிப் பார்க்கற...?

இதுவும் புரியலையா....? திவ்யான்னால் எப்பவோ புரிஞ்சுண்டிருப்பா...''

'மீண்டும் திவ்யாவா....?' திடுக்கிட்டான் ரவி.

''பயப்படாதே ரவி. மீண்டும் முருங்கை மரம் ஏறிக்கலை.''

''தாங்க்யு சார். ஆனால் இதெல்லாமா சார் என் கேள்விக்கு பதில்?''



''இதெல்லாமும்தான். புரிஞ்சுக்க ரவி. கொஞ்சம் யோசி, உன்னாலும் புரிஞ்சுக்க முடியும். மறுபடியும் கவிதையிலேயே சொல்றேன். ஒன்னால், அனேகமா கவிதைகளுக்கும் எனக்கும் உள்ள கடைசித் தொடர்பு இதுவாகத்தான் இருக்கும். அதனால் கொஞ்சம் பொறுமையாகக்கேள். என்ன, கேட்கிறாயா...?''

''சொல்லுங்க சார்.''

''அவனைப் போலவே
அவன் இருக்கிறான்
இவனைப் போலவே
இவன் இருக்கிறான்
உவனைப் போலவே
உவன் இருக்கிறான்
என்னைப் போலவே
நான் இருக்கிறேன்
அவர்களைப் போலவும்...

ஜீவராம் சுந்தரின் இந்தக் கவிதை மாதிரி ஆயிட்டேன் நானும்...''

ராஜாராமனின் குரலில் அதற்கான வருத்தமோ, சோகமோ இல்லாததை கவனித்தான் ரவி. வாழ்க்கையை அதன் போக்கில் எடுத்துக் கொள்ளத் தயாராகிவிட்டதைப் புரிந்து கொண்டான். 'குட், வெரி குட்' என்று தனக்குள் முணுமுணுத்ததைக் கேட்ட ராஜாராமன் உதட்டில் ஓடிய சிரிப்போடு சொன்னான்.

''என் வாழ்க்கைல நான் தொட்டுவிடும் தூரம்தான்னு நினைச்சதெல்லாம் தொடுவானமாகவே போய்க்கிட்டிருக்கு. அதனால் என்ன ரவி? அதை நான் பெரிசா எடுத்துக்கிறதாக இல்லை. இதைச் சொல்றபோது ஆனந்தின் கவிதை

ஒண்ணு ஞாபகத்துக்கு வர்றது. கடைசியா அதைச் சொல்லி முடிச்சுடறேன்.

ஒரு இலை உதிர்வதால்
மரத்துக்கு ஒன்றுமில்லை
ஒரு மரம் படுவதால்
பூமிக்கு ஒன்றுமில்லை
ஒரு பூமி அழிவதால்
பிரபஞ்சத்துக்கு ஒன்றுமில்லை
ஒரு பிரபஞ்சம்
போவதால்
எனக்கும்
ஒன்றுமில்லை.''

சிறிதும் பிசிறு தட்டாத குரலில் சொல்லி முடித்து ராஜாராமன் சிரிக்க புரிந்து கொண்டவனாக அவன் கை பற்றி இதமாக அழுத்தினான் ரவி.

(தொட்டு விட்டது)

தொடுவானம் தூரமல்ல
தொடுவதும் சுலபமல்ல.

CONNEMARA PUBLIC LIBRARY
3 1 MAR 2004
CHENNAI-600 008